பொழிவு - 18
குவிப்பு - 11
பக்கங்கள் - 16
விலை ரூபா 40.00
நவம்பர் - 2015
Registered as a News Paper
(ISSN 1800-2641)

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா
THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Center, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 023-3233276 / 0777420811 Fax No - 0232250789, E. Mail : nesanmnr@gmail.com.
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 68 / News / 2015"

"தந்தையைப்போல் இரக்கம் உள்ளவராய் இருங்கள்"

# இரக்கத்தின் யூபிலி ஆண்டு ஆரம்பமாகிறது!

**(2015 டிசம்பர் 8 – 2016 நவம்பர் 20)**

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இவ்வாண்டு 2015 டிசம்பர் 8ம் திகதி அன்று தொடங்கி அடுத்த வருடம் 2016 நவம்பர் 20ஆம் திகதி வரையான காலத்தை 'இரக்கத்தின் யூபிலி ஆண்டாக' அறிவித்துள்ளார். இவ்வாண்டு டிசம்பர் 8ம் திகதி அமல அன்னை பெருவிழாவன்று வத்திக்கான் தூய பேதுரு பசிலிக்கா பேராலயத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் புனிதக்கதவைத் திறந்துவைப்பதோடு இரக்கத்தின் யூபிலி ஆண்டு தொடங்குகின்றது.

"தந்தையைப்போல் இரக்கம் உள்ளவராய் இருங்கள்" (லூக். 6:36) ("Be merciful, just as your Father is merciful") என்ற இறைவார்த்தை இந்த யூபிலி ஆண்டுக்கான மையப்பொருளாகத் தரப்பட்டுள்ளது. இந்த இரக்கத்தின் யூபிலி ஆண்டை முன்னிட்டு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 'இரக்கத்தின் திருமுகம்' (Misericordiae Vultus) என்ற பெயரில் ஒரு திருமடலை வெளியிட்டுள்ளார்.

வருகிற டிசம்பர் மாதம் 8ம் திகதி அன்னை மரியின் அமல உற்பவத் திருளாளின்போது மரியாள் இறைசித்தத்திற்கு பணிந்து இறைமகனைக் கருத்தாங்க விருப்பம் கொண்டதை முன்னிட்டும், 2ம் வத்திக்கான் சங்கம் ஆரம்பிக்கப்பட்ட 50வது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டும் இந்த யூபிலி ஆண்டு திருத்தந்தையால் உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படுகின்றது.




## மடுமாதா எரிபொருள் நிரப்பு நிலையம் திறந்துவைக்கப்பட்டது!



மடுவீதிச் சந்தியில் புதிதாக அமைக்கப்பட்ட மடுமாதா எரிபொருள் நிரப்பு நிலையம் (Madhu Maathaa Lanka Filling Station) கடந்த ஒக்ரோபர் மாதம் 2ஆம் திகதி சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது. முன்னைநாள் மீன்பிடித்துறை பிரதியமைச்சர் சரத்குமார குணரெட்ன அவர்கள் இந்நிலயத்தைத் திறந்துவைத்தார்.

மன்னார் மறைமாவட்டத்தினால் நிர்வகிக்கப்படும் இந்த எரிபொருள் நிலையக் கட்டுமானப் பணிகளுக்கு அருட்பணியாளர் சீமான் மரியதாசன் அடிகளார் பொறுப்பாக இருந்து இந்தக் கட்டுமானப் பணிகளைச் சிறப்பாகப் பூர்த்திசெய்திருந்தார்.

## யாழ் புதிய ஆயரின் அருட்பொழிவுச் சடங்கு



யாழ் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக நியமிக்கப்பட்டுள்ள பேரருட்திரு. யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் ஆயர் அருட்பொழிவுச் சடங்கு (Episcopal Ordination) இம்மாதம் (நவம்பர்) 28ஆம் திகதி யாழ் தூய மரியன்னை பேராலயத்தில் இடம்பெறும். புதிய ஆயருக்காக செபிக்கும்படி மன்னா இறைமக்கள் அனைவரையும் வேண்டிநிற்கின்றது.

## மன்னார் மறைமாவட்ட மேய்ப்புப் பணித்திட்ட மாநாடு - 2016

மன்னார் மறைமாவட்டத்தின் வருடாந்த மேய்ப்புப் பணித்திட்ட மாநாடு கடந்த நவம்பர் மாதம் 9ஆம் 10ஆம் திகதிகளில் மன்னார் புனித செபஸ்தியார் பேராலய கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது. 9ஆம் திகதி திங்கட் கிழமை மாலை 6.15 மணிக்கு ஆரம்பமாகி அடுத்த நாள் 10ஆம் திகதி மாலை 3.00 மணிக்கு இம்மாநாடு நிறைவுபெற்றது.

மறைமாவட்ட மேய்ப்புப்பணித்திட்டக் குழுவின் செயலாளர் அருட்பணி. எவ். றெஜினோல்ட் அவர்கள் இம்மாநாட்டிற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார். இம்மாநாடு பற்றிய விரிவான செய்திகளை அடுத்த மன்னாவில் எதிர்பாருங்கள்.

## கிறிஸ்மஸ் சிறப்பிதழுக்கு எழுதுங்கள்

அடுத்த மாத (டிசம்பர்) மன்னா கிறிஸ்மஸ் புதுவருட சிறப்பிதழாக வெளிவரவுள்ளது.
உங்கள் ஆக்கங்களை சுருக்கமாக, இறுக்கமாக, சுவையாக, விரைவாக அனுப்பிவையுங்கள்.



## சிறுமலர் புனித திரேசம்மாளின் பெற்றோர் புனிதர்களாகப் பிரகடனம்



சிறுமலர் புனித திரேசம்மாளின் பெற்றோர்கள் லூயிஸ் மார்ட்டின், மரி செலி கெரின் ஆகியோர் கடந்த ஒக்ரோபர் 18ஆம் திகதி திருத்தந்தையால் வத்திக்கானில் புனிதர்களாக அறிவிக்கப்பட்டனர். தம்பதியர் இருவருக்கு ஒரே நாளில் புனிதர் பட்டம் கொடுக்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும்.

## குடும்பம் பற்றிய உலக ஆயர் மாமன்றம் நிறைவு

### 94 தீர்மானங்களுடன் மாமன்ற இறுதி ஏடு திருத்தந்தையிடம் சமர்ப்பிப்பு



கடந்த ஒக்ரோபர் மாதம் 4ம் திகதி முதல் 25ம் திகதிவரை இடம்பெற்ற உலக ஆயர் மாமன்றத்தின் (Synod of Bishops) 94 தீர்மானங்கள் [illegible] அங்கத்தினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டு திருத்தந்தையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(இந்த ஆயர் மாமன்றம் தொடர்பான சிறப்பிதழை 4ஆம் பக்கத்தில் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

## மனப்பொழிவு
பதிப்பாசிரியர் பகர்வது

## ஓர் ஆயரின் வகிபாகமும் அவருடைய தெரிவும்

***வெற்றிடங்கள் நிரப்படுகின்றன***

*ஆயர் பணிநிலை இடங்கள் வெற்றிடமாக இருந்த மூன்று தமிழ் மறைமாவட்டங்களில் திருகோணமலை மற்றும் யாழ்ப்பாண மறைமாவட்டங்களுக்கான புதிய ஆயர்கள் அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளனர். தற்போது மன்னார் மறைமாவட்டம் புதிய ஆயரை எதிர்நோக்கிக் காத்திருக்கின்றது. ஏனெனில் மன்னார் மறைமாவட்டத்திலும் ஆயருக்கான வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.*

***மன்னார் வெற்றிடம் இயல்பானதே***

*மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை திடீர் சுகவீனமடைந்த காரணத்தால் இந்த வெற்றிடம் ஏற்படவில்லை. மாறாகத் திருச்சபைச் சட்டத்தின்படி "எழுபத்தைந்து வயதை நிறைவுசெய்த ஒரு மறைமாவட்ட ஆயர் தமது பணித்துறப்பை (Resignation) உச்சத் தலைமைக் குருவிடம் (திருத்தந்தையிடம்) கையளிக்கும்படி கேட்டுக்கொள்ளப் - படுகிறார். உச்சக் தலைமைக்குரு அனைத்துச் சூழ்நிலைகளையும் ஆராய்ந்தபின் உரிய ஏற்பாடு செய்வார்." (திருச்சபைச் சட்டம் 401 பிரிவு 1) என்ற அடிப்படையில் தனது எழுபத்தைந்தாவது வயதை (2015 ஏப்ரல் 16) எட்டமுன்னரே மன்னார் ஆயர் அவர்களும் திருச்சபைச் சட்டத்திற்கு அமைவாகத் தனது பணித்துறப்புக் கடிதத்தை திருத்தந்தைக்கு அனுப்பியிருந்தார். ஆகவே மன்னார் மறைமாவட்டத் திருச்சபையில் ஆயர் பணிநிலைக்கான வெற்றிடம் சட்டப்படியான, இயல்பான வெற்றிடமாகவே அமைந்துள்ளது.*

*வழக்கமாக பணித்துறப்புக் கடிதத்தை ஏற்றுக்கொள்ளும் திருத்தந்தை, புதிய ஆயர் நியமிக்கப்படும்வரை தொடர்ந்து ஆயர் பணிக்கான கடமைகளைக் கவனிக்கும்படி ஓய்வுபெற்றுச்செல்லும் ஆயரைக் கேட்டுக்கொள்வார். அதன்படியே ஆயர் யோசேப்பு ஆண்டகையும் தன் பணியைத் தொடர்ந்துகொண்டிருந்த சூழ்நிலையில்தான் திடீர் சுகவீனத்திற்கு உள்ளானார்.*

***நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன***

*மன்னார் மறைமாவட்டத்திற்கு புதிய ஆயரைத் தெரிவுசெய்வதற்கான நடவடிக்கைகளை திருத்தந்தையின் இலங்கைக்கான தூதர் (Papal Nuncio) ஊடாக வத்திக்கான் திருத்தூதரக ஆட்சிப்பீடம் (Apostolic See) ஏற்கனவே ஆரம்பித்துள்ளது. இந்நிலையில் தமிழ் மறைமாவட்டங்களில் புதிய ஆயர்கள் நியமிக்கப்பட்டுள்ள, நியமிக்கப்படவுள்ள இன்றைய சூழ்நிலையில் ஆயர்நிலை என்பது என்ன? ஆயர்கள் என்போர் யார்? ஆயர்நிலைக்கான தகுதிகள் எவை? ஓர் ஆயர் எவ்வாறு நியமிக்கப்படுகின்றார்? புதிய ஆயர் நியமனத்தில் இறைமக்களின் பங்கு என்ன? போன்ற விடயங்கள் குறித்து திருச்சபைப் படிப்பினைகளின் ஒளியில் ஆராய்வதும் அறிவதும் இன்றைய காலத்தின் தேவையாகும்.*

***ஆயர் நிலை என்பது என்ன?***

*திருச்சபையிலே ஆயர்நிலை என்பது உண்மையில் ஓர் **அருளடையாளம்** என்றும், அது **குருத்துவத்தின் முழுமை** என்றும் இரண்டாம் வத்திக்கான் சங்கம் அறுதியிட்டுக் கூறியுள்ளது (திருச்சபை, எண் 21).*

*தலைமைப் பெரியகுருவான ஆண்டவர் இயேசு விசுவாசிகள் நடுவில் ஆயர்களில் இருக்கிறார். ஆயர் திருநிலைப்பாட்டில் குருத்துவம் என்னும் அருள் அடையாளத்தின் முழுமை வழங்கப்படுகிறது. இந்த முழுமையே **குருத்துவத்தின் உச்சநிலை; திருப்பணியின் சிகரம்.** ஆயர் திருநிலைப்பாடு புனிதப்படுத்தும் அலுவலுடன் கற்பித்து, ஆளும் அலுவல்களையும் தருகின்றது. ஓர் ஆயர் மற்ற ஆயர்களுடனும், உரோமை ஆயரான திருத்தந்தையுடனும் இணைந்தே தன் ஆணையுரிமையைச் செயல்படுத்த முடியும் (திருச்சபைச் சட்டத் தொகுப்பு 375 பிரிவு 2).*

***ஆயர்கள் என்போர் யார்?***

*ஆயர்களைப்பற்றி இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூறியுள்ளதைத்தான் திருச்சபைச் சட்டத் தொகுப்பும் கூறுகிறது. இறை ஏற்பாட்டினால் ஆயர்கள் தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள தூய ஆவியின் வழியாக, **திருத்தூதர்களின் வழிவருபவர்கள்.** திருச்சபையின் **திருமேய்ப்பர்கள்;** விசுவாசக் கோட்பாட்டின் **போதகர்கள்;** திருவழிபாட்டின் **குருக்கள்;** ஆளுகையின் **பணியாளர்கள்** (தி.ச.375).*

***ஆயர்நிலைக்கான தகுதிகள் எவை?***

*ஆயராக நியமனம்பெறும் ஒரு குரு முப்பத்தைந்து வயது நிரம்பியவராகவும், குருப்பட்டம் பெற்று ஐந்து ஆண்டுகளை நிறைவுசெய்தவராகவும் இருத்தல் வேண்டும்.*

*மேலும் அவர் உறுதியான விசுவாசம், நல்லொழுக்கம், பக்தி, அருள்வாழ்வு சார்ந்த தாகம், அறிவுநுட்பம், விவேகம் மற்றும் மனிதப் பண்புகள் கொண்டவராகவும், மக்களின் நன்மதிப்பைப் பெற்றவராகவும் திருவிவிலியம் அல்லது இறையியல் அல்லது திருச்சபைச் சட்டத்தில் வல்லுனராகவும் இருத்தல் வேண்டும் (தி.ச.378 - 1) எனத் திருச்சபைச் சட்டம் கூறுகின்றது.*

*(தொடர்ச்சி 12ஆம் பக்கம்)*

### கலையருவியின் ஏற்பாட்டில் நடாத்தப்படும்
### மன்னார் மறைமாவட்ட மட்டத்திலான

# மாபெரும் கரோல் பாடல் போட்டி - 2015

**பங்குப்பாடகர் குழாமினரின் திறமைகளை வெளிக்கொணரவும், புதிய பாடலாசிரியர்கள், இசையமைப்பாளர்களை அறிமுகம் செய்து ஊக்குவிக்கவும், கிறிஸ்மஸ் மகிழ்வினை கரோல் பாடல்களின்வழி பகிர்ந்துகொள்ளவும் வழிசமைக்கும் வகையில் கலையருவியினால் இந்தக் கரோல் பாடல் போட்டிகள் நடாத்தப்படுகின்றனது**

1. இப்போட்டி கீழ்ப்பிரிவு மேற்பிரிவு என இரண்டு பிரிவுகளாக நடைபெறும். கீழ்ப்பிரிவில் பாடசாலை மாணவர்களும், மேற்பிரிவில் பாடசாலைக் கல்வியை நிறைவுசெய்த பெரியவர்களும் உள்ளடக்கப்படுவர். வயதெல்லை கிடையாது.

2. ஒவ்வொரு பிரிவினரும் ஒரு தமிழ்ப் பாடலையும், ஒரு ஆங்கிலப் பாடலையும் பாடலாம்.

3. எனவே ஒரு பங்கில் இருந்து நான்கு குழுக்கள் இப்போட்டியில் பங்கெடுக்கலாம் (கீழ்ப்பிரிவு தமிழ் பாடல் குழு, கீழ்ப்பிரிவு ஆங்கிலப் பாடல் குழு, மேற்பிரிவு தமிழ் பாடல் குழு, மேற்பிரிவு ஆங்கிலப் பாடல் குழு).

4. ஒரு பிரிவைச் சார்ந்தவர்கள் விரும்பினால் இரண்டு பாடல்களிலும் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) பங்கெடுக்கலாம். ஆனால் ஒரு பிரிவைச் சேர்ந்தவர் மற்றைய பிரிவில் இணைய முடியாது.

5. ஒரு குழுவில் 08 தொடக்கம் 20 பேர் வரையில் மட்டுமே பங்கெடுக்கலாம்.

6. ஒரு பாடல் 10 நிமிடங்களுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.

7. தமிழ்ப் பாடல் புதிய படைப்பாக இருக்க வேண்டும். பாடல் வரிகள், இசை என அனைத்தும் புதிதாக ஆக்கப்பட்டதாக இருக்க வேண்டும். ஏற்கனவே இருக்கும் பாடலாகவோ அல்லது தழுவலாகவோ இருக்கக்கூடாது. ஆங்கிலப் பாடல் சென்ற வருடத்தைப்போன்று ஏற்கனவே இருக்கும் பாடலாக இருக்கலாம்.

8. தமிழ் கரோல் பாடல் இறுதிப் போட்டியில் முதலிடம் பெறும் பாடலின் வரிகளை எழுதியருக்கும், அப்பாடலுக்கு இசை அமைத்தவருக்கும் தனியான விருதுகள் வழங்கப்படும்.

9. எந்த இசைக்கருவியையும் பயன்படுத்தலாம். உங்கள் பாடலுக்குத்தேவையான இசைக்கருவிகளை, தொழில்நுட்ப சாதனங்களை (Code wires etc.) நீங்களே கொண்டுவரவேண்டும்.

10. ஐந்து நடுவர்களுக்கும் பாடல் வரிகளை வழங்க வேண்டும். போட்டியின்போது பின்வரும் விடயங்களின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும் :

| | | |
|---|---|---|
| பாடும் திறன் | - - | 15 |
| சுருதி, பாவம் | - - | 15 |
| லயம் | - - | 15 |
| பாடல் வரிகள், இசையமைப்பு | | 15 |
| உச்சரிப்புத் தெளிவு | - | 10 |
| ஆடை, ஒப்பனை | - - | 10 |
| ஒத்திசைவு | - | 10 |
| நிலை, சமர்ப்பணம் (முடிவு) | - | 10 |
| | மொத்தம் | 100 |

### குழுக்களாக உங்கள் திறமைகளை வெளிப்படுத்த சிறந்த அரிய சந்தர்ப்பம்!



12. இப்போட்டிகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் பங்குத்தந்தையர்களுக்கும், கன்னியர் இல்ல முதல்வர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. பங்கெடுக்க விரும்புவோர் இவ்விண்ணப்பப் படிவங்களை பூர்த்திசெய்து நவம்பர் மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும். கடித உறையின் வலது பக்க மேல் மூலையில் *'கரோல் பாடல் போட்டி விண்ணப்பம்'* என்று குறிப்பிடவும்.

தமிழ் பாடலுக்கான பாடல் வரிகளை எழுதியவர், இசை அமைத்தவர் பெயரையும் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடவும்.

3. ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் குழுவுக்கு ***'புனித சிசிலியா பாடகர் குழு விருது'*** வழங்கப்படும்.

4. முதல் கட்டப்போட்டிகள் டிசம்பர் மாதம் 12ஆம் ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மன்னார் புனித செபஸ்தியார் பேராலய மண்டபத்தில் இடம்பெறும். இப்போட்டியின்போது ஒவ்வொரு குழுவிலும் முதல் நான்கு இடங்கள் தெரிவுசெய்யப்பட்டு இறுதிப்போட்டிக்கு அனுமதிக்கப்படுவர். போட்டியாளர்கள் காலை 8.00 மணிக்கே சமூகம் தந்து தம்மை தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும்.

5. இறுதிப்போட்டி டிசம்பர் மாதம் 19ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெறும். இது இறுதிப் போட்டி நிகழ்வாகவும், மறைமாவட்ட கிறிஸ்மஸ் கரோல் சிறப்பு விழாவாகவும் அமைந்திருக்கும்.

6. இறுதிப்போட்டியில் பங்கெடுக்கும் குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும். (எனவே விண்ணப்பப்படிவத்தில் பெயர்களை எழுதும்போது சரியான முழுப்பெயரை எழுதவும்)

7. இறுதிப்போட்டி நிகழ்வுகள் ஒலிப்பதிவு, ஒளிப்பதிவுகள் செய்யப்பட்டு உள்ளூர், தேசிய மற்றும் எவ்.எம். வானொலி மற்றும் தொலைக்காட்சிகளினால் ஒலி, ஒளி பரப்ப ஏற்பாடுகள் செய்யப்படும்.

8. சென்ற ஆண்டு நடைபெற்ற கரோல் இறுதிப்போட்டி இறுவட்டு (VCD) இவ்வாண்டு முதல்கட்டப் போட்டி நிகழ்வின்போது வெளியிடப்படும். விரும்பியவர்கள் இந்த இறுவட்டைப் பெற்றுக்கொள்ள முடியும். (விலை விபரம் பின்னர் அறிவிக்கப்படும்)

*போட்டிகளில் பங்கெடுத்து உங்கள் திறமைகளை வெளிப்படுத்த கலையருவியின் வாழ்த்துக்கள்.*

*உங்கள் ஒத்துழைப்பிற்கு நன்றி! இறையாசீர்!*

***அருட்பணியாளர் நேசன், இயக்குனர், கலையருவி,***
***மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையம்***

## மன்னார் மறைமாவட்டம்

### திருவழிபாட்டு நாட்காட்டி - 2015

### கார்த்திகை

01 - அனைத்துப் புனிதர்கள் பெருவிழா
02 - இறந்த விசுவாசிகள் நினைவு நாள்
04 - அன்புக் கன்னியர் சபை விழா
09 - இறந்துபோன ஆயர்கள், குருக்கள், துறவிகள் ஆன்ம இளைப்பாற்றிக்கான திருப்பலி - பேராலயம் மாலை 5.00 மணி.
22 - தூய சிசிலியம்மாள் - பாடகர் குழாமினரின் விழா
22 - கிறிஸ்து அரசர் திருவிழா - முருங்கன், நெடுங்கேணி, சாந்திபுரம், குருமன்காடு, தாலிக்குளம், கீரிசுட்டான் (காணிக்கைகள் ஆயர் இல்லத்திற்கு அனுப்பிவைக்கப்படும்)
30 - புனித அந்திரேயா திருவிழா - தோட்டவெளி

■ மாதத்தின் 2வது, 4வது சனி உபவாசத் தியானம் - தோட்டவெளி ஆன்மீக இல்லம்.

### உண்மை உறைக்கும் கமிலஸ்




(நன்றி - தி மெசஞ்சர்)

### ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்

*- மன்னா நிர்வாகம் -*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தைக் கடத்தாமல் உடன் தீர்வு காணுங்கள்

## - அரசை வலியுறுத்துகிறார் யாழ். புதிய ஆயர் -

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், வீட்டுத்திட்டம் மற்றும் வாழ்வாதார முன்னேற்றத்தில் காலத்தை இழுத்தடிக்காமல் உடனடியாகத் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவது அவசியமாகும்.

இவ்வாறு அரசை வலியுறுத்தியுள்ளார் யாழ் மறைமாவட்டத்தின் புதிய ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை. போரின்போது இடம்பெற்ற விடயங்கள் தொடர்பில் இடம்பெறப்போகும் விசாரணைகள் முடிவுபெறுவதற்கு இன்னமும் ஐந்து, ஆறு வருடங்களோ அதற்கும் அதிகமான காலப்பகுதியோ எடுக்கக்கூடும். அப்படியான நிலையில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை சுமுகநிலைக்குக் கொண்டுவருவதற்குத் தேவையான நடவடிக்கைகளை விரைந்து எடுப்பது அவசியமாகும் எனவும் யாழ். ஆயர் சுட்டிக்காட்டினார்.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி ஆகியவற்றின் அதிபராக போர்க்காலப்பகுதியில் கடமையாற்றியிருந்தவரான யாழ். மறை மாவட்டத்தின் புதிய ஆயர், கடந்த 25 வருடங்களுக்கு மேலாக வலிகாமம் மக்கள் போரால் இடம்பெயர்ந்து வீதிகளிலும், அகதி முகாம்களிலும் வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கும் அவலநிலையைத் தாம் நேரில் கண்டுள்ளதாகவும், இவர்களின் பிரச்சினைகளுக்கு வெகுவிரைவாகத் தீர்வு காணப்படுவது இன்றியமையாததாகும் என்றும் குறிப்பிட்டார்.

யாழ். மறை மாவட்டத்தின் புதிய ஆயராக கடந்த ஒக்ரோபர் மாதம் 13ஆம் திகதி பாப்பரசரால் நியமிக்கப்பட்ட பின்னர் அண்மையில் கொழும்பு, வெள்ளவத்தையிலுள்ள மிராஜ் ஹோட்டலில் தமிழ்ப் பத்திரிகைகளின் ஆசிரியர்களுடன் அறிமுக மதிய போசன விருந்துபசார நிகழ்வில் ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை கலந்துகொண்டார்.

மதிய போசன விருந்துபசாரத்துக்கு முன்னதாக உதயன் பத்திரிகையாளருடன் சில நிமிடங்கள் பிரத்தியேகமாகக் கலந்துரையாடியபோதே யாழ். ஆயர் இந்தக் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டார்.



வடக்குக்கும் தெற்கிற்கும் இடையே புரிந்துணர்வைக் கட்டியெழுப்புவதற்கு தன்னால் இயன்ற பங்களிப்பை வழங்குவதற்கு எண்ணியுள்ளதாகத் தெரிவித்த யாழ் ஆயர், நாட்டில் நிரந்தர நல்லிணக்கத்துக்கு இது அவசியமானது என்றும் சுட்டிக்காட்டினார். யாழ் கத்தோலிக்க மறைமாவட்டத்தைச் சீரமைத்து புதுப்பிப்பதற்குத் திட்டமிட்டுள்ளதாகவும் இதன்போது அவர் மேலும் தெரிவித்தார்.

## சாலக்குடி டிவைன் இல்லத் தியானத்தில் பங்கெடுத்த மன்னார் மறைமாவட்டக் குழுவினர்



இந்தியாவின் கேரளா மாநிலத்தில் உள்ள சாலக்குடி டிவைன் தியான இல்லத்தில் கடந்த செப்ரம்பர் 6ஆம் திகதி தொடக்கம் ஒரு வாரம் நடைபெற்ற இளைஞருக்கான விசேட தியானத்தில் பங்கெடுத்த மன்னார் மறைமாவட்டக் குழுவினரை படத்தில் காணலாம். தேசிய கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இலங்கையின் எல்லா மறைமாவட்டங்களில் இருந்தும் ஏறத்தாள 60ற்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகள் இதில் பங்கேற்றனர். மன்னார் மறைமாவட்டத்தில் இருந்து இத்தியானத்தில் பங்கேற்ற இளைஞர் பணி இயக்குனர் அருட்பணி. நெவின்ஸ் யோகராஜ், அலைக்ஸ் லெளசன், பிறிடா டபரேரா, றொகான், கவிதா, புனிதராஜ் ஆகியோரை இப்படத்தில் காணலாம். இவர்களின் 'பசுமையான நினைவுகளை' 14ஆம் பக்கத்தில் காணலாம்.

## மன்னார் குருமுதல்வருடன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் சந்திப்பு

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. ஏ. விக்ரர் சோசை அடிகளாரைச் சந்தித்தனர்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 29ஆம் திகதி காலை 9.00 மணிக்கு மன்னார் ஆயர் இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. திருவாளர்கள் பற்றிக் மொறின், கிறிஸ்ரோபர் பூடன் மற்றும் பலரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படவேண்டிய உதவிகள் குறித்து இவர்கள் கலந்துரையாடினர். இக்குடும்பங்களுக்கான உளவியல் - ஆற்றுப்படுத்தல் தொடர்பான உதவிகள் மற்றும் பொருளாதார உதவிகள் குறித்து இக்கலந்துரையாடலில் பேசப்பட்டதாக ஆயர் இல்ல வட்டாரங்கள் மன்னாவுக்குத் தெரிவித்தன.

## சிலாப மறைமாவட்ட இளம் குரு விபத்தில் மரணம்

சிலாப மறைமாவட்டத்தைச் சேர்ந்த புத்தளம் உதவிப் பங்குத்தந்தையாகப் பணியாற்றிய அருட்பணியாளர் மார்லன் விஜேந்திரா தாமல் அடிகளார் (வயது 29) விபத்தில் சிக்குண்டு பலியானார்.

வென்னப்புவ புனித ஜோசவ்வாஸ் கல்லூரியின் பழைய மாணவனாகிய இவர், நீர்கொழும்பு வைக்காலில் 17.02.1986இல் பிறந்தார். நல்லடக்கச் சடங்குகளைத் தொடர்ந்து இவருடைய உடல் கடந்த ஒக்ரோபர் 23ஆம் திகதி மாரவில சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அருட்தந்தையின் ஆன்மா அமைதியில் இளைப்பாறச் செபிப்போம்.

## நவம்பர் 25 முதல் 30 வரை திருத்தந்தை ஆபிரிக்காவுக்குப் பயணம்

கென்யா, உகாண்டா மற்றும் மத்திய ஆபிரிக்கக் குடியரசு ஆகிய ஆபிரிக்க நாடுகளின் அரசுத் தலைவர்களும் ஆயர்களும் விடுத்துள்ள அழைப்பினை ஏற்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நவம்பர் மாதம் 25ம் தேதி முதல் 30ம் தேதி முடிய இம்மூன்று நாடுகளில் திருத்தூதுப் பயணம் மேற்கொள்வார் என்று திருப்பீடம் கடந்த செப்ரம்பர் 10ஆம் திகதி அறிவித்தது.

நவம்பர் 25 முதல் 27 வரை கென்னியாவிலும், 27 முதல் 29 வரை உகண்டாவிலும், 29, 30 ஆகிய தேதிகளில் மத்திய ஆபிரிக்கக் குடியரசிலும் திருத்தந்தையின் பயணம் அமையும் என்றும், இப்பயணத்தின் முழு விவரங்கள் விரைவில் வெளியிடப்படும் என்றும் திருப்பீடச் செய்தித் தொடர்பகம் கூறியுள்ளது.

இம்மாதம் கியூபா, மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மேற்கொண்டது அவரது 10வது பயணமாகவும், ஆபிரிக்க நாடுகளுக்கு அவர் செல்வது 11வது திருத்தூதுப் பயணமாகவும் அமையும்.

இந்த 11 திருத்தூதுப் பயணங்களில் அவர் 19 நாடுகளில் தன் காலடித் தடங்களைப் பதித்துவிடுவார் என்பதும், இவற்றில் ஆசிய நாடுகளான தென் கொரியா, இலங்கை, பிலிப்பின்ஸ் ஆகியவை அடங்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### 'இரக்கத்தின் திருமுகம்' தொடராக வெளிவரும்

இரக்கத்தின் யூபிலி ஆண்டை முன்னிட்டு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்ட 'இரக்கத்தின் திருமுகம்' (Misericordiae Vultus) என்ற திருமடலின் தமிழாக்கம் அடுத்த மன்னாவில் இருந்து தொடராக வெளிவரும். (பதிப்பாசிரியர்)

## திருத்தந்தையை இந்தியாவுக்கு அழைப்பதில் இந்திய அரசு ஆர்வம்

அடுத்த வருடம் அனேகமாக இடம்பெறும் என எதிர்பார்க்கப்படும் அன்னை திரேசாவின் புனிதர் பட்ட நிகழ்வையொட்டி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை இந்தியாவுக்கு அழைப்பதில் இந்திய அரசாங்கம் ஆர்வம்கொண்டிருப்பதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் டெய்லி என்ற பத்திரிகையின் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அடுத்த வருடம் பெப்ரவரியில் அன்னை திரேசாவின் புனிதர் பட்டம் நடைபெறும் திகதி, இடம் தொடர்பாக அறிவிப்பதற்காக திருத்தந்தை கர்தினால் அவையைக் கூட்டவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இரக்கத்தின் ஆண்டை முன்னிட்டு பசிலிக்கா கதவுகள் திறக்கப்படுகின்றன

2015ம் ஆண்டு டிசம்பர் 8ஆம் திகதி அமல அன்னை பெருவிழாவன்று வத்திக்கான் தூய பேதுரு பசிலிக்கா பேராலயத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் புனிதக் கதவைத் திறந்து வைப்பதோடு இரக்கத்தின் யூபிலி ஆண்டு தொடங்குகின்றது.

டிசம்பர் 13ம் திகதி திருவருகைக் காலத்தின் மூன்றாம் ஞாயிறு அன்று உரோம் தூய ஜோன் இலாத்தரன் பசிலிக்கா, உரோம் தூய பவுல் பசிலிக்கா மற்றும் உலகின் அனைத்துப் பேராலயங்களின் தூய கதவுகள் திறக்கப்படும்.

## பிரான்ஸ் ஆன்மீகப் பணியகத்திற்கு புதிய இயக்குனர்

பிரான்ஸ் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் புதிய இயக்குனராக இலங்கை யாழ் மாகாண அமலமரித்தியாகிகள் சபையைச் சார்ந்த அருட்பணியாளர் யோசவ் யுவனேஸ் கமலானந்தன் (அமதி) அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தனது புதிய பணிப்பொறுப்புக்களை ஏற்பதற்காக ஏற்கனவே பிரான்ஸ் சென்றுள்ளார். புதிய இயக்குனருக்கு மன்னா தனது வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்து நிற்கின்றது.


## மன்னா விநியோகஸ்தர்களுக்கான வருடாந்த ஒன்றுகூடல்

- மன்னா பத்திரிகை விநியோகத்திற்கு அரும்பணியாற்றிவரும் மன்னா பணியாளர்களுக்கான வருடாந்த கிறிஸ்மஸ் ஒன்றுகூடல் இரு தினங்களில் இரு இடங்களில் நடைபெறும்.

வவுனியா மறைக்கோட்டப் பங்கு விநியோகஸ்தர்களுக்கு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு வவுனியா இறம்பைக்குளம் பங்கு மண்டபத்திலும், மன்னார், முருங்கன், மடு மறைக்கோட்டப் பங்கு விநியோகஸ்தர்களுக்கான ஒன்றுகூடல் டிசம்பர் மாதம் 27ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10.30 மணிக்கு மன்னார் கலையருவியிலும் இடம்பெறும்.

- பங்குத்தந்தையர்கள் உங்கள் பங்கில் மன்னா விநியோகஸ்தர்களாக இருப்போரின் விபரங்களை எமக்கு அனுப்பிவைப்பதற்கான விண்ணப்பப்படிவம் பங்குத்தந்தையர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த விண்ணப்பப் படிவத்தை நிரப்பி நவம்பர் 25ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு அனுப்பிவைக்கவும். - பதிப்பாசிரியர், மன்னா

## தீபாவளி வாழ்த்து!




இம்மாதம் (நவம்பர்) 10ஆம் திகதி தீபாவளித் திருநாளைக் கொண்டாடும் அனைத்து இந்துசமய சகோதர்களுக்கும் மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னாவின் இனிய வாழ்த்துக்கள்!

## திருத்தொண்டர்களாக திருநிலைப்படுத்தல் நிகழ்வு

இரண்டு அருட்சகோதரர்கள் கடந்த ஒக்ரோபர் மாதம் 31ஆம் திகதி காலை 9.00 மணிக்கு மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் திருத்தொண்டர்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டனர்.

தோட்டவெளிப் பங்கு புனித யோசவ்வாஸ்நகர் ஆலயத்தைச் சேர்ந்த திருவுளப்பணியாளர் சபையின் அருட்சகோதரர் மரியசெல்வம் பிராங் டன் மற்றும் செட்டிகுளம் பங்கு முதலியார் குளம் ஆலயத்தைச் சேர்ந்த அமலமரித் தியாகிகள் சபையின் அருட்சகோதரர் அ. சேவியர் அமல்ராஜ் ஆகியோரே திருத்தொண்டர்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டவர்கள் ஆவர்.

அருட்பணி எம். வினோதன் பிரன்சிஸ் குலாஸ் (SDS) அவர்களின் குருப்பட்ட திருப்பொழிவு நிகழ்வோடு இணைந்ததாக இந்தத் திருத்தொண்டர் திருநிலைப்படுத்தல் நிகழ்வும் இடம்பெற்றது. திருகோணமலை மறைமாவட்ட ஆயர் மேதகு கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்கள் இத்திருநிகழ்வுகளை நடத்திவைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக ஆயர்கள் மாமன்றம் - சிறப்புப் பொழிவு

# உலக ஆயர்கள் மாமன்றம் - 2015

## மையப்பொருள் : "திருஅவையிலும், உலகிலும் குடும்பத்தின் அழைப்பும், பணியும்"



### பங்கேற்பாளர்கள்

"திருஅவையிலும், உலகிலும் குடும்பத்தின் அழைப்பும், பணியும்" என்ற தலைப்பில் கடந்த ஒக்ரோபர் மாதம் 4ஆம் திகதிமுதல் 25ம் திகதிவரை வத்திக்கானில் நடைபெற்றுவந்த 14வது உலக ஆயர்கள் மாமன்றத்தில் 74 கர்தினால்கள், 06 முதுபெரும் தந்தையர்கள், உயர் பேராயர் ஒருவர், 72 பேராயர்கள், 102 ஆயர்கள், 02 பங்குத்தந்தையர்கள் மற்றும் 13 துறவற சபையினர் என 270 மாமன்றத் தந்தையர்கள் இன்னும் திருமணமான தம்பதியரும் கலந்துகொண்டனர்.

### 120 கோடி உறுப்பினர்களைக் கொண்ட திருஅவைக்காக இறைவன் பேச விரும்புவதற்குச் செவிமடுக்க முயற்சிக்க வேண்டும்

#### தொடக்க உரையில் திருத்தந்தை

இம்மான்றத்தின் முதல் அமர்வில் 05.10.2015 அன்று தனது தொடக்க உரையில் திருத்தந்தை அவர்கள் ஆயர்கள் மாமன்றம் விருந்தினரை உபசரிக்கும் ஓர் அறையோ, ஒரு பாராளுமன்றமோ அல்லது ஒரு செனப் அறையோ அல்ல. மாறாக விசுவாசக் கண்களோடும் இறைவனின் இதயத்தோடும், உண்மையை கண்டறிவதற்கு ஒன்றுசேர்ந்து செல்வதாகும் என்றார்.

ஆயர்கள் மாமன்றத்தில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகள் வெறுமனே பேசுவதோடு மட்டும் நில்லாமல், 120 கோடி உறுப்பினர்களைக்கொண்ட திருஅவைக்காக இறைவன் பேச விரும்புவதற்குச் செவிமடுக்க முயற்சிக்க வேண்டும் என அழைப்புவிடுத்தார்.

இம்மாமன்றம் தூய ஆவியாரின் தூண்டுதலுக்குச் செவிமடுக்கும் இடமாகும். இதில் கலந்துகொள்ளும் ஆயர்கள், திருத்தூதர்களின் துணிச்சலையும், நற்செய்தி கூறும் மனத்தாழ்ச்சியையும், விசுவாசம் நிறைந்த செபத்தையும் கொண்டிருக்க வேண்டும் என அழைப்பு விடுத்தார்.

### திருமணத்திற்குப் போதிய ஆயத்தம் செய்யப்படாமை திருமணங்கள் முறிந்துபோவதற்கான காரணங்களில் ஒன்று

#### அமெரிக்கக் கர்தினால் கருத்து

தற்போதைய நவநாகரீக உலகின் சவால்களை எதிர்கொள்ளுமளவுக்கு திருமணத் தம்பதிகள் தம்மைப் போதிய ஆயத்தம் செய்யாத நிலையில் திருமண பந்தத்துக்குள் நுழைவதினாலேயே இன்று அதிகமான திருமணங்கள் விவாகரத்தில் முடிகின்றன என்று குடும்பம் பற்றிய உலக ஆயர்கள் மாநாட்டில் உரையாற்றிய அமெரிக்காவைச் சேர்ந்த கருதினால் ஒருவர் குறிப்பிட்டார்.

தம்பதிகளைத் திருமணத்திற்கு ஆயத்தம் செய்யும் பொறுப்பிலுள்ளவர்கள் இவ்விடயத்தில் கூடிய கவனம் செலுத்தி தற்கால உலகின் சவால்களை எதிர்கொள்ளும் சக்தியைப் பெற்றவர்களாக அவர்களைத் திருமண வாழ்விற்கு அனுப்பிவைக்கும் வகையில் தகுந்த ஆழமான ஆயத்தங்களை அவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

## பிறரை ஏற்கவும், மன்னிக்கவும், மன்னிப்புப் பெறவும் கற்றுக்கொள்ளும் இடம் குடும்பம்

### ஆயர்கள் மாமன்றத்தையொட்டி இடம்பெற்ற திருவிழிப்பு வழிபாட்டில் திருத்தந்தை





இம்மாமன்றத்தின் தொடக்கத்தின் ஆரம்பமாக ஒக்ரோபர் 3ஆம் திகதி சனிக்கிழமை புனித பேதுரு பசிலிக்கா பேராலய வளாகத்தில் திருவிழிப்பு நடைபெற்றது. அன்று பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் திருத்தந்தை பிரான்சிஸ் மறையுரை ஆற்றினார். இருளில் சிறிய மெழுகுவர்த்தியை ஏற்றுவது எத்துணை நல்லது. இருளை விரட்டுவதற்கு இதைவிடச் சிறந்த வழி இருக்கின்றதா? இருளைப் போக்க முடியுமா? என்ற கேள்வியுடன் தன் மறையுரையைத் தொடங்கினார்.

இறைவன் தன் வாழ்வுக்காக வைத்துள்ள திட்டத்தை உணர்ந்து, நம்பிக்கையோடு அதை ஏற்பதற்குக் கற்றுக்கொள்ளும் இடம் குடும்பம் என்று கூறிய திருத்தந்தை நன்றியுணர்வு, உடன்பிறப்பு, உணர்வின் பிரசன்னம் மற்றும் தோழமையின் இடம் குடும்பம் என்பதையும், பிறரை ஏற்கவும், மன்னிக்கவும், மன்னிப்புப் பெறவும் கற்றுக்கொள்ளும் இடம் குடும்பம் என்பதையும் வலியுறுத்தினார்.

ஒவ்வொரு குடும்பமும் எந்த நிலையில் இருந்தாலும், இவ்வுலக இருளின் மத்தியில் எப்போதும் ஒளியாக உள்ளது. இதை ஏற்று குடும்பத்தில் உள்ள அழகு, நன்மை, புனிதம் ஆகியவற்றை மாமன்றத் தந்தையர் அறிவிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

குடும்பங்கள் சந்திக்கும் கடினமான சூழல்களை எடுத்துரைத்த திருத்தந்தை போர், நோய், துன்பம், காயப்பட்ட உறவுகள் மற்றும் முறிவுகள் மனச்சோர்வையும், பிரிவையும் மனத்தாழ்ச்சியையும் உருவாக்குகின்றன என்றார். மக்கள் பெரிய பெரிய இலக்குகளையும், பலவிதமான பொழுதுபோக்குகளையும் கொண்டிருந்தாலும், அவற்றை அனுபவிப்பதற்குச் சிறிதளவு நேரத்தையே அல்லது சுதந்திரத்தையே கொண்டிருக்கின்றனர் என்றும், உள்ளத்தில் ஓர் ஆழமான வெறுமை ஏற்பட்டு அது வளர்ந்து வருகிறது என்றும் கூறினார்.

தன்னலம், மனச்சோர்வு, அழிவை ஏற்படுத்தும் வன்முறை, பணத்திற்கும், வீண் ஆடம்பர இன்பங்களுக்கும் அடிமையாதல் போன்றவற்றால் ஆட்கொள்ளப்படும் மனிதரின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க, தனிமையை உணர்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது என்று திருத்தந்தை சுட்டிக்காட்டினார்.

அதிக வளர்ச்சியடைந்த சமூகங்களில் மிகக்குறைவான பிறப்பு விகிதமும், மிக அதிகமான விகிதத்தில் கருக்கலைப்பு, திருமண முறிவு, தற்கொலை, சமூக மற்றும் சுற்றுச்சூழல் மாசுகேடு இடம்பெறுவதாகத் தெரிகின்றது என்ற தன் கவலைகளை திருத்தந்தை தன் மறையுரையில் பகிர்ந்துகொண்டார்.

திருமணம் என்பது, ஏதோ வளர் இளம்பருவக் கற்பனை உலகு அல்ல என்று கூறிய திருத்தந்தை, ஓர் ஆணுக்கும், ஒரு பெண்ணுக்கும் இடையே நிலவும் அன்புப் பிணைப்பு இறைவன் வகுத்துள்ள திட்டத்தின் அடித்தளமாக அமைந்துள்ளது என்றும், இறைவன் தமது அன்புப் படைப்புக்காக கொண்டுள்ள கனவு இதுவே என்றும் திருத்தந்தை வலியுறுத்தினார்.

கடும் சமூக மற்றும் திருமண வாழ்வுச் சூழலில் திருஅவை தனது பணியைப் பற்றுறுதியிலும், உண்மையிலும், அன்பிலும் வாழ அழைக்கப்பட்டுள்ளது என்று மறையுரையாற்றிய திருத்தந்தை குடும்பத்தின் பங்கு பற்றியும் விளக்கினார்.

திரு அவையில் நடைபெறும் 14வது ஆயர்கள் மாமன்றத்தில் பங்கேற்கும் தந்தையருக்காகச் செபித்து, தன் மறையுரையை திருத்தந்தை நிறைவுசெய்தார்.

### திருமணத்தின் அடிப்படைப் பண்புகள்பற்றி புதிதாக எதுவுமில்லை

#### திருத்தந்தை திட்டவட்டமாகத் தெரிவிப்பு



வத்திக்கானில் நடைபெற்றுவந்த குடும்பம் பற்றிய உலக ஆயர்கள் மாமன்றத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய திருத்தந்தை இம்மாநாடு குடும்பத்தின் அல்லது திருமணத்தின் அடிப்படைப் பண்புகள்பற்றி புதிதாக எதுவும் எடுத்துக்கூறவோ, அல்லது மாற்றவோ கூட்டப்படவில்லை என்றும் மாறாக, திருமணம் என்பது ஒரு ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே இறைவனால் ஏற்படுத்தப்பட்ட ஒருமையான, கட்டவிழாமையான உறவு என்றும் அதன் புனிதத்துவத்தைத் தொடர்ந்து எவ்வாறு காப்பாற்றலாம் என்பதை ஆராய இம்மாமன்றம் முயற்சிக்கும் என்றும் கூறினார்.

## குடும்பம் பற்றிய உலக ஆயர் மாமன்றம் - 94 தீர்மானங்களுடன் மாமன்ற இறுதி ஏடு திருத்தந்தையிடம் சமர்ப்பிப்பு

கடந்த ஒக்ரோபர் மாதம் 4ம் தேதி முதல் 25ம் தேதி வரை இடம்பெற்ற உலக ஆயர் மாமன்றத்தின் (Synod of Bishops) 94 தீர்மானங்கள் அடங்கிய ஏடு, பெரும்பான்மை அங்கத்தினர்கள் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டு திருத்தந்தையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குடும்பம் குறித்த இம்மாமன்றத்தின் முடிவுகளை ஏற்றுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அவற்றை உன்னிப்பாக வாசித்த பின்னர், தன் கருத்துக்களை வெளியிடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகில் உள்ள அனைத்துக் குடும்பங்களின் மகிழ்வையும், நம்பிக்கைகளையும், சோகங்களையும், எதிர்பார்ப்புக்களையும் மனதிற்கொண்டு, இரக்கத்தின் உண்மை அர்த்தத்தைக் காண்பித்த இயேசுவின் பாதையில் இந்த 94 தீர்மானங்களையும் எடுத்ததாக, திருத்தந்தையிடம் சமர்ப்பிக்கப்பட்ட ஏட்டின் முகவுரையில் கூறப்பட்டுள்ளது.

குடும்பங்களுக்கு உதவ விரும்பும் திருஅவை, சில நேரங்களில் குடும்பங்களின் அருகே மௌனமாக நின்று செவிமடுப்பதாகவும், வேறு சில நேரங்களில் குடும்பங்களின் முன்னே சென்று வழிகாட்டுவதாகவும், ஏனைய வேளைகளில் அவற்றின் பின்நின்று ஆதரவையும் ஊக்கத்தையும் கொடுப்பதாகவும் இருக்கவேண்டும் என அவ்வேடு வலியுறுத்துகின்றது.

திருஅவையின் அனுமதியின்றி மணமுறிவு பெற்று, மறுமணம்



புரிந்தவர்களை, திருஅவை தாய்க்குரிய பண்புடன் புரிந்துகொண்டு வழிநடத்த வேண்டியது குறித்து இவ்வேட்டில் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# மன்னார் ஆயர் சுகவீனம் அடைந்தமை எமது போராட்டத்துக்குப் பெரும் பலவீனம்

## தமிழ் அரசியல் கைதிகள் கவலை

அனுராதபுரச் சிறைச்சாலையில் அரசியல் கைதிகள் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவந்த நிலையில், அவர்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுவின் பிரதித்தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் மூவர் அடங்கிய குழுவினர் அனுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்று சந்தித்திருந்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை சார்பாக மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை அ. விக்ரர் சோசை மற்றும் பொறியியலாளர் ஏ. தேவதானந் ஆகியோரே செல்வம் எம். பி.யுடன் அனுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுவந்த சுமார் 30 அரசியல் கைதிகளைச் சந்தித்து உரையாடியுள்ளனர். இதன்போது சுமார் 20 முதல் 30 வருடங்கள்வரை சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தம்மைப் பொது மன்னிப்பளித்து விடுதலை செய்ய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் எனக் குறித்த அரசியல் கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமக்கு உரிய தீர்வு கிடைக்கும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை எனத் தெரிவித்த அரசியல் கைதிகள், மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை திடீர் சுகவீனமடைந்து உள்ளமை நமது விடுதலைப்போராட்டத்தில் தமக்கு வலது கரம் உடைந்தது போன்று உள்ளது எனவும் கவலை தெரிவித்துள்ளனர்.

## மாகாண மட்டப் போட்டிகளில் மன்/ அடம்பன் றோ.க.த.க பாடசாலை சாதனை

2015ஆம் ஆண்டு வடமாகாண மட்டத்தில் நடைபெற்ற ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெற்ற மடுவலயத்தைச் சேர்ந்த மன்/ அடம்பன் றோ.க.த.க. பாடசாலை மாணவர்கள் :



இடமிருந்து வலமாக :- ஜெ. சர்மிளா (திருக்குறள் 4ம் இடம்), ஆ. தபித்தா (ஆங்கில உறுப்பெழுத்து 3ம் இடம்), யே. ஆன் கிறிஸ்னிகா (துரித கணிதம் 1ம் இடம்), ஏ. அனுக்ஷியா (சித்திரம் 1ம் இடம்), ஸ். ஜதுசிக்கா (சித்திரம் 4ம் இடம்), நி. சுஜானி (திருக்குறள் 2ம் இடம், சித்திரம் 4ம் இடம்)

*தகவல் : அருட்சகோதரி மரிய வசந்தி, மன்/ அடம்பன் RCTMS*

## தேவன்பிட்டியில் மறைக்கல்வி வார நிகழ்வுகள்

தேவன்பிட்டிப் பங்குத்தந்தை அருட்திரு. ச. அருட்குமரன் தலைமையில் தேவன்பிட்டிப் பங்கில் மறைக்கல்வி வார நிகழ்வுகள் இனிதே நடைபெற்றன.

வாரநாட்களில் முறையே சிரமதானம், திரைப்படக்கண்காட்சி, திருவழிபாடு பகிர்வு, மாணவர் சந்தை, விவிலிய விளையாட்டுக்கள் என நிகழ்வுகள் நடைபெற்றன. இறுதிநாள் 27.09.2015 அன்று ஞாயிறு காலைத் திருப்பலியை மறையாசிரியர்களும் மறைக்கல்வி மாணவர்களும் சிறப்பித்தனர்.

மாலை 6.00 மணிக்கு ஆலய வளாகத்தில் அனைத்துத் துணையாலயங்களையும் உள்ளடக்கிய பங்கு மறைக்கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் அருட்சகோதரர் எஸ். ஈ. விஜயதாசன் (FSC) அவர்கள் பிரதம விருந்தினராகவும், பங்குக்குட்பட்ட பாடசாலை அதிபர்களும், அரச அதிகாரிகளும் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பித்தனர்.

இச்சிறப்பு நிகழ்வுகள் மூலம் பங்கில் மறைக்கல்வி உற்சாகப் - படுத்தப்பட்டுள்ளதோடு மாணவர் வரவும் அதிகரித்துள்ளது. இது துறவற ஆண்டைச் சிறப்பிக்கும் ஒரு நிகழ்வாகவும் அமைந்திருந்தது.

### பங்குச் செய்திகளை அனுப்புவோர் கவனத்திற்கு

உங்கள் பங்கில் வழக்கமாக நடைபெறும் நிகழ்வுகளான திருவிழா, அருட்சாதனக் கொண்டாட்டங்கள் போன்றவற்றை அனுப்பாமல், புதுமையான - வித்தியாசமான செயற்பாடுகளை சுருக்கமாக, சுவாரஸ்யமாக எழுதி அனுப்புங்கள்.

- மன்னா நிர்வாகம்

## வேப்பங்குளப் பங்கில் மறையறிவுத் திறனாய்வு இல்ல விளையாட்டுப் போட்டி







கடந்த ஒக்ரோபர் மாதம் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 3.00 மணிக்கு வேப்பங்குளப்பங்கின் மறையறிவுத் திறனாய்வு இல்ல விளையாட்டுப் போட்டி முதன் முதலாக பங்குத்தந்தை அருட்பணி. லக்ஸ்ரன் டி சில்வா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக அருட்பணி. அருள்ராஜ் (CMF) அவர்களும், சிறப்பு விருந்தினராக அருட்பணி. அந்தோனிமுத்து (OMI) அவர்களும், கௌரவ விருந்தினராக அருட்பணி. நெவின்ஸ் யோகராஜ் பீரிஸ் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இவ்வாண்டு மறைக்கல்வி வாரத்தின் இறுதிநாள் சிறப்பு நிகழ்வாக ஞாயிறு மறைப்பாடசாலையின் இல்ல விளையாட்டுப்போட்டி நடைபெற்றது. குழந்தை இயேசு, தூய அந்தோனியார், தூய செபஸ்தியார் இல்லங்கள் பங்கெடுத்த இப்போட்டியில் குழந்தை இயேசு இல்லத்தினர் 1ஆம் இடத்தினைத் தட்டிக்கொண்டனர். இந்நிகழ்வுகள் யாவற்றையும் தூய சூசையப்பர் மறைப்பாடசாலையின் உபஅதிபர் திருமதி. தஸ்நேவிஸ், மறைப் பாடசாலைத் தலைவி திருமதி. ம. ஸ்ரெலா, அருட்சகோதரி கத்தரின், திரு. தாசன், திருமதி. கெனடி மற்றும் அனைத்து மறையாசிரியர்களும் முன்னின்று சிறப்பாக நடாத்தியமை குறிப்பிடத்தக்கது.

## நானாட்டான் பங்கில் கலைவிழாவும் முதியோர் தின நிகழ்வும்

நானாட்டான் பங்கில் புதிதாகக் கட்டப்படும் தூய ஆரோக்கிய அன்னை ஆலயக்கட்டிட நிதிக்காகவும், மக்களின் கலை ஆர்வத்தினை வளர்ப்பதற்காகவும் கடந்த செப்ரம்பர் மாதம் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 7.15 மணிக்கு மாபெரும் கலைவிழா நிகழ்வு ஆலய அரங்கில் இடம்பெற்றது. நானாட்டான் பங்குத்தந்தை அருட்பணி. ஜி. ஏ. அருள்ராஜ் குருஸ் இந்நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார்.

மடு மறைக்கோட்ட முதல்வரும், மடுப் பரிபாலகருமான அருட்பணி ச. எமிலியானுஸ்பிள்ளை அடிகளார் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். ஏனைய பல குருக்களும் கலந்துகொண்டு இந்நிகழ்வினை சிறப்பித்திருந்தனர். இக்கலைவிழாவினைக் கண்டுமகிழ ஏராளமான மக்கள் வருகை தந்திருந்தமை மகிழ்விற்குரிய விடயமாகும்.

நாட்டுக்கூத்து, இசை நிகழ்வு, சமூக ஆன்மீக நாடகங்கள், கலாச்சார நடனங்கள், வில்லுப்பாட்டு போன்ற நிகழ்வுகள் இக்கலைவிழாவினை அலங்கரித்தன. இந்நிகழ்வுகளின் முக்கிய அம்சமாக நானாட்டான் ஆலயக் கட்டட நிதிக்காக அதிஸ்ட இலாபச் சீட்டிழுப்புக் குலுக்கப்பட்டது.

# மன்னார் பேராலயப் பங்கில்

## அர்ப்பண ஆண்டை முன்னிட்டு இடம்பெற்ற கண்காட்சி



அர்ப்பண வாழ்வு ஆண்டைச் (2015) சிறப்பிக்குமுகமாக மன்னார் புனித செபஸ்தியார் பேராலயப் பங்கிலே, "*இறை அழைத்தலும் அர்ப்பணமும்*" எனும் தலைப்பிலான கண்காட்சி கடந்த 11.10.2015 அன்று மன்னார் பேராலயத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

பேராலயப் பங்கிலே பணிபுரிகின்ற துறவற சபையினர் பக்திச் சபையினர், அன்பிய வலய ஊக்குவிப்பாளர்கள் ஆகியோர் இக்கண்காட்சியை முன்னின்று நடத்தினர். இறை அழைத்தல் பற்றிய பல்வேறு தலைப்புக்களில் இக்கண்காட்சி இடம்பெற்றது.

**இக்கண்காட்சியில் வெற்றிபெற்றவர்கள் வருமாறு:**

1ம் இடம் : வழிபாட்டுக்குழு.

2ம் இடம் : CIC அருட்சகோதரிகள், இருதயபுரம், சாவற்கட்டு வலயங்கள்.

3ம் இடம் : FMP அருட்சகோதரிகள், எமில்நகர் வலயம்.

**இக்கண்காட்சியின் வினாவிடைப் போட்டியில் வெற்றிபெற்றவர்கள் வருமாறு:**

1ம் இடம் : டி. ரஜீந்தனா புனோஷா, பனங்கட்டுக்கொட்டு கிழக்கு வலயம்

1ம் இடம் : ஈ. பௌஸ்ரீனா பீரிஸ், பனங்கட்டுக்கொட்டு கிழக்கு வலயம்

3ம் இடம் : பி. ஸ்ரெபீனா, சாவற்கட்டு வலயம்

3ம் இடம் : கி. ஆன் மதுசன், எமில்நகர் வலயம்

## மறைபரப்பு ஞாயிறை முன்னிட்டு இடம்பெற்ற சந்தையும் கலைநிகழ்வும்





2015 ஒக்ரோபர் 18ஆம் திகதி கொண்டாடப்பட்ட உலக மறைபரப்பு தினமானது மன்னார் பேராலயப் பங்கிலே சிறப்பாக அனுஸ்ரிக்கப்பட்டது. மறைபரப்பு நிதியைச் சேகரிக்கும் பொருட்டு, திருப்பலி முடிவிலே பங்குத்தந்தை அருட்பணி. பெப்பி சோசை அடிகளார் பாப்பரசரின் கொடியினை ஏற்றி விற்பனைச் சந்தைகளை ஆசீர்வதித்து ஆரம்பித்து வைத்தார். இச்சந்தையானது, அருட்சகோதரிகள், வலயங்கள், பணிக்குழுக்கள், பீடப்பணியாளர்கள் போன்றோரினால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து பேராலய உதவிப்பங்குத் தந்தையர் அருட்பணி. றொசான் அருட்பணி. தயாளன் அடிகளார் ஆகியோரின் நெறிப்படுத்தலோடு மாலை 6.30 மணிக்கு இந்நாளைச் சிறப்பிக்கும் முகமாக கலைநிகழ்வுகள் நடாத்தப்பட்டன. இதற்கு மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மைய இயக்குனர் அருட்பணி. தமிழ் நேசன் அடிகளார் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

## யோசவ்வாஸ் நகரில் மறைக்கல்வி வாரம்

கடந்த செப்ரம்பர் மாதம் 21 – 27ஆம் திகதி வரை ஜோசப்வாஸ் நகரில் மறைக்கல்வி வாரம் கொண்டாடப்பட்டது. முதல்நாள் நிகழ்வைப் பங்குத்தந்தை ஆசீர்வதித்து ஆரம்பித்து வைத்தார். சிரமதானம், நோயாளர் தரிசிப்பு, அவர்களுக்கு பொருட்கள் வழங்கல், ஊரைச்சுற்றி இறைவார்த்தையைக் காட்சிப்படுத்தல், விவிலிய விளையாட்டுக்கள், மறை சம்பந்தமான படக்காட்சிகள் போன்ற நிகழ்வுகள் இந்த வாரத்தில் இடம்பெற்றன. ஒவ்வொரு நாள் நிகழ்வின்போதும் ஆசிரியர் மரியசெல்வனால் அர்ப்பண வாழ்வு என்ற மையப்பொருளில் உரைகள் நிகழ்த்தப்பட்டது.

மறைக்கல்வி ஞாயிறு திருப்பலியை ஆசிரியர்களும், மாணவர்களும் சிறப்பித்தனர். அன்றைய திருப்பலியை குருமுதல்வர் அருட்பணி. ஏ. விக்ரர் சோசை அடிகளார் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தார். ஆலய வளாகத்தின் இருமருங்கிலும் மாணவர்கள் மலர்கள் ஏந்தி நின்று அவரை வரவேற்று ஆராத்தி எடுத்தனர். அதைத்தொடர்ந்து திருப்பலி நடைபெற்றது.

### மன்னா விநியோகஸ்தர்களே!

உங்கள் கைகளுக்குக் கிடைக்கும் மன்னாவை காலம் தாமதிக்காமல் உடனடியாக விநியோகிங்கள்!

- மன்னா நிர்வாகம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவழிபாடு

## திருவழிபாடு பற்றிய கேள்வி பதில்களும் இறையியல் விளக்கங்களும்

## தொடர் 1 - 2.1. திருவழிபாட்டிற்கான இடங்கள்

### 2.1.1 கோவில்

**14. திருவழிபாட்டை நடத்துவதற்கு முதன்மையான தேவை என்ன?**

இறைப்பணியாளர்கள் திருச்சடங்குகளை நடத்துவதற்காகவும் நம்பிக்கையாளர்கள் ஒன்றாய்க்கூடி இறைவேண்டல் செய்வதற்காகவும் இறைவழிபாட்டிற்கு என்றே குறிக்கப்பட்ட சிறப்பான ஒரு பொது இடம் தேவை. அது கோவில் அல்லது சிற்றாலயம் என அழைக்கப்படுகிறது.

**15. கோவிலில் நடைபெறும் திருநிகழ்வுகள் என்ன?**

அ) திருப்பலி
ஆ) அருளடையாளக் கொண்டாட்டங்கள்
இ) திருச்சடங்குகள்
- திருவிழிப்புச் சடங்குகள்
- இருபால் துறவியர்க்கான திருச்சடங்குகள்
- அடக்கச் சடங்குகள்

ஈ) பக்தி முயற்சிகள்
- நற்கருணை
- புனிதர்கள்

உ) இறைவேண்டல்கள்
- வேண்டல்கள்
- வார்த்தை வழிபாட்டு நிகழ்வு

**16. கோவில்கள் எல்லாம் ஒரே தரமானவையா?**

அல்ல. மறைமாவட்டக் கோவில்கள் (Cathedral Churches), பங்குக் கோவில்கள் (Parish Churches), பொதுவான கோவில்கள் (Public Churches), முழுமையற்ற பொதுவான (Semi-Public Churches) கோவில்கள் என நான்கு விதங்கள் உண்டு.

**17. மறைமாவட்டக் கோவில் என்றால் என்ன?**

இது மறைமாவட்டத்தின் தாய்க்கோவில். அதிலே மறைமாவட்ட ஆயருடைய இருக்கை அமைக்கப்பட்டுள்ளது. இங்கு பற்பல திருவழிபாட்டுச் சடங்குகள் அவரால் நிறைவேற்றப்படுவதால் இக்கோவில் மறைமாவட்டக் கோவில் எனப்படுகிறது.

**18. பங்குக் கோவில் என்றால் என்ன?**

பங்கு அருள்பணியாளரின் கண்காணிப்பில் உள்ள ஒரு தனிப் பங்கில் திருவழிபாட்டுச் சடங்குகளை நிறைவேற்றுவதற்காகக் குறிக்கப்பட்ட கோவில்.

**19. பொதுவான கோவில்கள் என்றால் என்ன?**

அந்தந்த அருள்பணியாளர்களின் (பொறுப்பாளர்கள்) உத்தரவு இல்லாமலேயே நம்பிக்கையாளர் தாராளமாய் செல்லக்கூடிய மருத்துவமனைகளிலும், துறவற மடங்களிலும், கல்விச் சாலைகளிலும் உள்ள கோவில்களாகும். மேலும் ஒரு குன்றிலோ சிறு மலையின்மீதோ உள்ள திருயாத்திரைக்கோவில்களும் ஆகும்.

**20. முழுமையற்ற பொதுவான கோவில்கள் என்றால் என்ன?**

அந்தந்த தரத்து அருள்பணியாளர்களது (பொறுப்பாளர்கள்) உத்தரவு பெற்றிருப்பவர்கள் மட்டும் செல்லக்கூடிய துறவற மடத்துக் கோவில்கள்.

**21. ஒரு கோவிலைத் திருப்பலிக்காக/ இறைப்பணிக்காகப் பயன்படுத்துமுன் என்ன செய்யவேண்டும்?**

அது மறைமாவட்ட ஆயரால் நேர்ந்தளிக்கப்பட்டோ புனிதப் படுத்தப்பட்டோ இருக்க வேண்டும். அல்லது ஆயரிடமிருந்து அனுமதிபெற்ற அருள்பணியாளராலாவது புனிதப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

**22. ஒரு கோவிலுக்குள் நுழையும்போது நாம் முதன்முதல் காணும் பொருள் என்ன?**

தீர்த்தத் தொட்டி. நாம் கோவிலுக்குள் நுழையும்போது தீர்த்தத்தைத் தொட்டு நம்மீது சிலுவை அடையாளம் வரைந்து, நமது ஆன்மாவைத் தூய்மைப்படுத்தும்படியாக அந்தத் தொட்டி கோவில் கதவருகே வைக்கப்பட்டிருக்கிறது. தீர்த்தம் ஓர் அருள்வேண்டல் குறி.

**23. கோவிலின் தலைவாயில் அருகே இன்னும் இருப்பது என்ன?**

திருமுழுக்கு கொடுக்கும் இடம். இதில் பொதுவாக திருமுழுக்குத் தண்ணீர் உள்ள தொட்டி வைக்கப்பட்டு இருக்கும். திருமுழுக்குபெறத் தயாரிக்கும் ஆயத்தநிலையினர் திருவழிபாட்டில் பங்கெடுக்கக்கூடாது என்பது தொடக்ககால பழக்கமாகும். எனவே இந்தத் தொட்டி கோவில் கதவு அருகே வைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொட்டி கண்ணாடியினாலோ, உலோகத்தினாலோ, மண்ணாலோ, பளிங்கினாலோ உருவாக்கப்பட்டிருக்கும்.

**24. கோவிலில் உள்ள இன்னும் குறிப்பிடத்தக்க பொருள் யாவை?**

- பலி பீடம், பாடுபட்ட இயேசுவோடு சிலுவை, நற்கருணைப் பேழை.



- ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும் இடம் (Confessional Stand)
- வாசக மேடை
- புனிதர்களுடைய திரு உருவங்கள் சிலுவைப்பாதை திரு உருவங்கள்/ படங்கள்
- காணிக்கைப் பெட்டி
- திரு இசைக் கருவிகள்

**25. கோவிலில் முதன்மையான, முக்கியமான, தூய்மையான இடம் எது?**

பலிப்பீட முற்றம் (Sanctuary). இதில் பலிப்பீடமும், நற்கருணைப் பேழையும் இருக்கின்றன. இந்த இடம் இறைபணியாளர்களுக்கும் (Sacred Ministers) பிறபணியாளர்கள், பீடப்பணியாளர்கள் (Ministers and Altar Servers) அனைவருக்கும் உரியது.

**26. கோவிலில் காணப்படுகின்ற கண்ணாடி சன்னல்களின் சிறப்பு அம்சம் என்ன?**

இவை புனித உருவங்களை/ கிறிஸ்தவ மறைச்சித்திரங்களை விவரிக்கின்றன. கிறிஸ்துவின் எக்காலத்துக்கும் உரிய மீட்புச்செயலை கற்றுக்கொடுக்கின்றன. அவை கத்தோலிக்க நம்பிக்கையின் மறைபொருளைத் தொடர்புபடுத்துகின்றன. மறு உலகிற்கு நம் உள்ளங்களை இட்டுச்செல்கின்றன.

இந்த சன்னல்கள் (Stained glass windows) புனித உருவங்களைத் தங்கியிருப்பதால் 'புனித சன்னல்கள்' என்றுகூட அழைக்கப்படுகின்றன.

### 2.1.2. பலிப்பீட முற்றம்

**27. பலிப்பீட முற்றத்தில் காணப்படும் பொருள்கள் யாவை? இம்முற்றத்தின் சிறப்பு அம்சம் என்ன?**

பலிப்பீடம், வாசக மேடை, பாடுபட்ட சிலுவை, நற்கருணைப் பேழை, அணையா விளக்கு, மெழுகுதிரிகளும் தண்டுகளும், தூபம், திருப்பலிக்குத் தேவையான பொருள்கள் வைக்கப்படும் சிறு மேசை, பணியாளர்களுக்கான இருக்கைகள் ஆகியன காணப்படுகின்றன.

இம்முற்றம் மக்கள் அமரும் இடத்தைவிட சற்று உயர்ந்து, தனிப்பட்ட வடிவமைப்புடன் அழகுசெய்யப்பட்டிருக்கும். மேலும் மக்கள் நற்கருணைக் கொண்டாட்டத்தைப் பார்க்கும் விதத்தில் பெரிதாகவும் அமைந்திருக்கலாம்.

**28. பலிப்பீட முற்றத்தைச் சுற்றிய கிராதி இப்போது காணப்படவில்லையே? ஏன்?**

இரு காரணங்கள் உள்ளன.

அ) பீடத்தில் நடைபெறுபவற்றைப் பார்க்க எதுவும் தடையாக இருக்கக்கூடாது. பலிப்பீட முற்றத்தையும், இறைமக்கள் இருக்கும் பகுதியையும் எதுவும் பிரிக்கக்கூடாது.

ஆ) இறைமக்கள் நற்கருணை விருந்தில் பங்கேற்கொள்ளப் பவனியில் வருவதால் கிறிஸ்துவின் திரு உடலையும், திரு இரத்தத்தையும் பெற்றுக்கொள்ள எளிதாக இருக்கிறது. அதாவது மக்களின் முழுமையான பங்கேற்புக்கு எதுவும் தடையாக இருக்கக்கூடாது. எனவேதான் பீடத்தின் அருகில் மலர்களால் அலங்கரிக்கும் போதும்கூட அவை திருப்பலி நிறைவேற்றும் பணியாளரையும் அதில் நிறைவேற்றப்படும் திருநிகழ்வுகளையும் எந்த விதத்திலும் மறைக்கக்கூடாது என்றும் அறிவுறுத்தப்படுகிறது.

**29. பலிப்பீடம் என்பது என்ன?**

திருப்பலி ஒப்புக்கொடுப்பதற்காகவும், திருவிருந்துக்காகவும் நேர்ந்தளிக்கப்பட்ட/ அர்ச்சிக்கப்பட்ட ஒரு பீடம் / மேசை. இது நற்கருணை வழியாக நிகழும் நன்றியறிதலின் மையமாகவும் விளங்குகிறது.

**30. பலிப்பீடம் எதைக் குறிக்கிறது?**

பலிப்பீடம் நம் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து நற்கருணையை உண்டாக்கிய இரவுணவு மேசையையும், கல்வாரி மலையையும் குறிக்கின்ற காரணத்தினால் இது உயிருள்ள கல்லாகிய (1 பேது 2:4) கிறிஸ்துவையே அடையாளப்படுத்துகிறது.

**31. பலிப்பீடம் எவ்விதமாய் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்? அதில் என்ன பயன்படுத்த வேண்டும்?**

தூண்கள் தாங்கிய ஒரு நீள்சதுர கல் மேசையாய் அல்லது மரமேசையாய் இருக்க வேண்டும். பீடத் துகிலும், திருமேனித் துகிலும், சிலுவையும் மெழுகுத்திரிகளும் பலி பீடத்தில் பயன்படுத்தப்பட வேண்டும்.

**32. எத்தனை வகையான பீடங்கள் உண்டு? விளக்குக.**

அசையாப் பீடம், அசையும் பீடம் என இரு வகையான பீடங்கள் உண்டு.

- அசையா பீடம் : பெயர்க்கப்படாத விதமாய் ஒற்றைக் கல்லால் நிறுவப்பட்டு மறைமாவட்ட ஆயரால் நேர்ந்தளிக்கப்பட்ட/ அர்ச்சிக்கப்பட்ட பீடம்.
- அசையும் பீடம் : இது வேறு இடங்களுக்கு கொண்டு செல்லப்படக்கூடிய பீடம். இதைப் புனிதப்படுத்தினாலே போதுமானது.

குறிப்பு : நேர்ந்தளிக்கப்பெறும் பீடத்துக்கு அடியில் மறைச்சாட்சியருடைய அல்லது புனிதர்களுடைய திருப்பண்டங்களை வைக்கும் வழக்கம் இன்றும் தொடர்கிறது.

**33. திருப்பலிக்குமுன் பீடம் எதனால் மூடப்பட்டிருக்கவேண்டும்?**

(வெண்) துணியினால். இது நம் ஆண்டவர் இயேசுவின் அடக்கத்தின்போது அவருடைய உடலைச் சுற்றியிருந்த துணியைக் குறிக்கிறது (லூக் 24:12).

**34. பீடத்தின் நடுவில் அல்லது பலிப்பீட முற்றத்தில் என்ன வைக்கப்பட்டிருக்கிறது?**

நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து கல்வாரி மலையில் ஒப்புக்கொடுத்த சிலுவைப்பலி தொடர்ந்து இடைவிடாது புதுப்பிக்கப்படுவதை திருப்பலி நினைவூட்டுகிறது. இதற்காகப் பீடத்தின் நடுவிலோ, பலிப்பீட முற்றத்தின் நடுவிலோ, வேறொரு சிறப்பான இடத்திலோ ஒரு பாடுபட்ட திருஉருவம் வைக்கப்பட்டிருக்கிறது.

**35. பாடுபட்ட சிலுவையின் பக்கத்தில் இருப்பது என்ன?**

சுத்தமான மெழுகுதிரிகள். இவை தொடக்கத் திருச்சபை மிகப் பயங்கரமான துன்பங்களுக்கு ஆளான காலங்களில் கல்லறைக் குகைகளில் அல்லது அடக்கச் சுரங்கங்களில் (Catacombs) விளக்கேற்றி வைத்துத் திருப்பலி ஒப்புக்கொடுத்து வந்த வழக்கத்தை நினைவுறுத்துகிறது. மெழுகுதிரிகளை ஏற்றுவது இயேசு உலகின் ஒளியாய் இருக்கிறார் என்பதைக் காட்டுகிறது.

**36. பலிப்பீடத்தின்மேல் வைக்கப்படுவது என்ன?**

நற்செய்தி வாசக நூல், திருப்பலி நூல், திருப்பலி ஒப்புக்கொடுக்கத் தேவையான பொருள்கள் ஆகியன. பலிப்பீட முற்றத்தின் நடுவில் பாடுபட்ட சிலுவை இல்லையெனில் பீடத்தின்மேல் நடுவிலோ பீடத்தின் அருகிலோ அதுபோன்ற சிலுவையை வைக்கலாம். அல்லது பலிப்பீட முற்றத்தின் நடுவில் பாடுபட்ட சிலுவை இருந்தால், பீடத்தின்மேல் அதை வைக்க வேண்டிய அவசியமில்லை.

குறிப்பு : பலிப்பீடத்தின்மேலோ அதன் அருகிலோ வைக்கப்படும் சிலுவை மக்களை நோக்கியவாறு இருக்க வேண்டும்.

**37. பீடத்தின் மேலோ அருகிலோ எத்தனை எரியும் மெழுகுதிரிகள் வைக்கப்படலாம்?**

| | |
|---|---|
| வார நாள், நினைவு திருப்பலி | – 2 |
| ஞாயிறு, திருவிழா திருப்பலி | – 4 |
| ஆடம்பர திருப்பலி | – 6 |
| ஆயர் நிறைவேற்றும் திருப்பலி | – 7 |

**38. சுவரோடு ஒட்டிய பீடத்தில் அமைக்கப் பட்டிருப்பது என்ன?**

நற்கருணையைப் பாதுகாப்பதற்கான ஒரு நற்கருணைப் பேழை. இந்தப் பேழையின் உட்புறம் வெண்பட்டுத் துணியால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். ஆனால் இதன் வெளிப்புறம் வெள்ளை அல்லது அந்தந்த திருவழிபாட்டுக் காலத்தின் நாள்களுக்கு ஏற்றவாறு உள்ள திருப்பலி உடையின் நிறத்தையொட்டிய திரையால் மூடப்பட்டிருக்க வேண்டும்.

**39. வாசக மேடையைப்பற்றிக் குறிப்பிடவும்**

இது வார்த்தை வழிபாடு நடைபெறும் இடம்: கடவுள் நம்மோடு உரையாடும்/ உறவாடும் ஓர் இடம். கடவுளின் உடனிருப்பை வெளிப்படுத்தும் இடம். பழைய ஏற்பாடும் (எபிரேய மறைநூல்) புதிய ஏற்பாடும் (கிறிஸ்தவ மறைநூல்) இணையும் ஓர் இடம். இங்கு இறைவார்த்தை அறிவிக்கப்படுகிறது, விளக்கப்படுகிறது. வாசக மேடை நிலையான கலைநயத்தோடு அலங்கரிக்கப்பட்ட ஒன்றாக இருக்க வேண்டும். பலிப்பீடத்திற்கு இது ஒத்திருப்பதால் பலிப்பீடத்தில் காணப்படும் கலைநயம் இதிலும் இருப்பது பொருத்தமானது. வாசக மேடையின் அருகிலும் இரு மெழுகுதிரித் தண்டுகள் இருக்கலாம். அது உலகின் ஒளியாகிய கிறிஸ்து எபிரேய, கிறிஸ்தவ மரபுகள் வழியாக நம்மோடு பேசுகிறார் என்பதைக் குறிக்கும். இதைத்தான் இரண்டாம் வத்திக்கான் சங்கம், புனித மறைநூல்கள் வாசிக்கப்படும்பொழுது அங்கு கிறிஸ்துவே பேசுகிறார் என்று கூறுகிறது.

**40. நற்கருணைப் பேழையில், தூய்மைமிகு நற்கருணை இருக்கிறது என்று எதனால் அறிந்துகொள்ளலாம்?**

இரவும் பகலும் அப்பேழைக்கு முன்பாக அல்லது பக்கத்தில் எரிந்துகொண்டிருக்கும் ஓர் அணையா விளக்கினால்தான். இது எண்ணெயினாலோ, மெழுகினாலோ எரியும் ஒரு சிறப்பு விளக்கு ஆகும். இது நற்கருணையில் உண்மையாகவே உடனிருக்கின்ற இயேசுவின்மீது நாம் கொண்டுள்ள உறுதியான நம்பிக்கையையும் உண்மையான அன்பையும் வெளிக்காட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் திருச்சபைச் செய்திகள்


## அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக கர்தினால் மல்கம் ஆண்டகை ஜனாதிபதியுடன் பேசுவார்

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் உடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகள் தமக்கு பொது மன்னிப்பளித்து விடுதலை செய்யவேண்டும் என்பதை வலியுறுத்தி கடந்த ஒக்ரோபர் மாதம் 12ஆம் திகதி முதல் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்து தொடர்ந்துவந்த நிலையில், அவர்களின் நிலைமை குறித்து மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் விக்ரர் சோசை அடிகளார் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் கவனத்திற்கு ஒக்ரோபர் 16ஆம் திகதி கொண்டுவந்திருந்தார்.


இதன்போது கருத்து வெளியிடுகையிலேயே பேராயர் மேற்கண்டவாறு தெரிவித்ததாகக் குருமுதல்வர் தெரிவித்தார். அத்துடன் கைதிகளின் விடயம் தொடர்பாக தான் ஏற்கனவே நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுடன் கலந்துரையாடியதாக குறிப்பிட்ட அவர், இவ்விடயம் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குக் காணப்படுவதால் அவரை விரைவில் சந்திக்கவுள்ளதாகவும் பேராயர் தெரிவித்ததாக குருமுதல்வர் மேலும் தெரிவித்தார்.

முன்னதாக அநுராதபுரம் மற்றும் மகசின் சிறைச்சாலைக்கு விஜயம் செய்திருந்த குருமுதல்வர் விக்ரர் சோசையிடம் தமது



விடுதலை தொடர்பில் பேராயரின் கவனத்திற்கு கொண்டுவருமாறு உண்ணாவிரதமிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## செபமாலை மாதா துறவற சபையைச் சேர்ந்த அருட்பணி. மனுவல் சவிரிமுத்து அடிகளாரின் குருத்துவ வெள்ளி விழா



செபமாலை மாதா துறவற சபையைச் சேர்ந்த அருட்பணி. மனுவல் சவிரிமுத்து அடிகளார் தனது பணிக்குருத்துவத்தின் 25ஆவது ஆண்டு நிறைவு வெள்ளி விழாவைக் கொண்டாடினார்.

இவர் நெடுந்தீவு கிழக்கு மரியன்னை ஆலயத்தை சேர்ந்த மனுவல், பவுலீனம்மா தம்பதிகளின் புதல்வன் ஆவார். இவர் தனது குருத்துவ வெள்ளி விழா நன்றித் திருப்பலியை கடந்த ஒக்ரோபர் மாதம் 31ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு, யாழ்ப்பாணம் கோவில் வீதி இல. 05இல் அமைந்துள்ள அருள் ஆச்சிரமத்தில் நிறைவேற்றினார். இத்திருப்பலியில் இவருடைய உற்றார், உறவினர், நண்பர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

*தகவல்: சொமாலை மாதா துறவற சபை*

## இலங்கைக்கு வருவதுபற்றி இன்னும் தீர்மானிக்கவில்லை

### அருட்தந்தை எஸ். ஜே. இம்மானுவேல் அடிகளார்




இலங்கையில் போருக்குப் பின்னரான ஒப்புரவு முன்னெடுப்புக்களுக்கு உதவிபுரிய இலங்கைக்கு வருமாறு ஜனாதிபதியும், வெளியுறவு அமைச்சரும் தன்னை அழைத்துள்ளதாகத் தெரிவித்த உலகத் தமிழர் பேரவைத் தலைவர் அருட்தந்தை எஸ். ஜே. இம்மானுவேல் அடிகளார், தான் அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டுள்ள பொழுதிலும் இலங்கைக்கு வருவதுபற்றிய எவ்வித முடிவையும் தான் இன்னும் எடுக்கவில்லையென பாதுகாவலனுக்குத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஒப்புரவுபற்றி தான் தொடர்ந்தும் குரல் கொடுத்துக்கொண்டும், எழுதிக்கொண்டும் இருப்பேனென்று கூறிய அருட்தந்தை இது அங்குள்ள கிறிஸ்தவர்களுக்கும், எல்லா சமயத்தைச் சார்ந்தவர்களுக்கும் முன்வைக்கப்பட்டுள்ள பெரும் சவால் என்றும் குறிப்பிட்டார். உலகத் தமிழர் பேரவை உட்பட 15 தமிழர் அமைப்புக்கள் இலங்கையில் தடைசெய்யப்பட்ட அமைப்புக்களாகும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## டிலாசால் துறவற சபை

### உலகத் தலைவரின் இலங்கை விஜயம்




கத்தோலிக்க பாடசாலைகளின் சகோதரர்கள் என்று அழைக்கப்பட்டுவரும் டிலாசால் துறவற சபையினர் இன்று உலகின் 82 நாடுகளில் தமது பணியை மேற்கொண்டு வருகின்றனர். இன்று உலகில் 4,100 சகோதரர்கள் 1050 பாடசாலைகளை நிர்வகித்து வருகின்றனர். இவர்களோடு இன்று 85,000ற்கும் மேற்பட்ட துணைப்பணியாளர்கள் (Lasallian Partners) சுமார் 1,000,000 மாணவர்களுக்குக் கல்விபுகட்டி எதிர்கால வாழ்வில் ஏற்படும் சவால்களுக்கு அவர்கள் முகங்கொடுக்கக்கூடியவிதமாக வழிகாட்டி வருகின்றனர்.

இந்தப் பின்னணியில் இலங்கை மண்ணிலே இத்துறவற சபையினர் கால்பதித்து 148 வருடங்கள் ஆகின்றன. துறவற அர்ப்பண ஆண்டைக் கொண்டாடும் இவ்வேளையில் இலங்கை மண்ணில் பணிபுரிந்துவரும் அருட்சகோதரர்களையும், மாணவர்களையும், ஆசிரியர்களையும், பழைய மாணவர்களையும், பெற்றோர்களையும் சந்தித்து உற்சாகமூட்ட, வழிகாட்ட கடந்த ஒக்ரோபர் மாதம் 17ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதிவரை இலங்கை மண்ணுக்கு இச்சபையின் உலகத்தலைவர் (Superior General) அருட்சகோதரர் றொபேட் ஷீலர் (Very Rev. Bro. Robert Schieler) விஜயத்தை மேற்கொண்டார்.

இவர் கடந்த ஆண்டு இடம்பெற்ற சபையின் 45வது பொது மாநாட்டில் புனித டிலாசாலுக்குப் பின்னர் இத்துறவற சபையை வழிநடத்தும் 27வது தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். இவர் இச்சபையின் 3வது அமெரிக்க நாட்டைச் சேர்ந்த உலகத் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது இந்த இலங்கை விஜயமானது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க அம்சமாக இருப்பதற்குக் காரணம் இவ்வாண்டு துறவற அர்ப்பண ஆண்டு. எனவே இவ்வேளையில் இந்நாட்டின் பழைமைவாய்ந்த கத்தோலிக்க கல்வி நிறுவனங்களில் ஒன்றாகிய புனித ஆசீர்வாதப்பர் கல்லூரியின் 150வது ஜுபிலிப் பரிசளிப்பு விழாவில் கடந்த ஒக்ரோபர் மாதம் 19ம் திகதி பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்ததும், அதேபோன்று நாட்டின் வடபகுதியில் ஒன்றாகிய மன்னார் மறைமாவட்டத்தில் 60 வருடங்களுக்கு மேலாக டிலாசால் சகோதரர்கள் தமது பணியை ஆற்றி வைரவிழாவைப் பூர்த்திசெய்யும் இவ்வேளையில் அதன் நினைவாக அமைக்கப்பட்டுள்ள லாசால் ஆங்கிலப் பாடசாலையைத் திறந்து வைத்ததும் (La Salle English Medium) கொழும்பிலும், மன்னாரிலும் அருட்சகோதரர்களுடன் பணியாற்றிய உடன்பணியாளர்களுக்குப் பரிசளிப்பு விழாவினை ஏற்பாடு செய்ததும் இவரது விஜயத்தின் முக்கிய நிகழ்வுகளாக அமைந்திருந்தது.

இவரோடு சபையின் ஆசியப் பிராந்தியத்திற்கான பொது ஆலோசகர் அருட்சகோதரர் றிக்கி லகுடாவும், எமது மண்ணின் மாகாணத் தலைவர் அருட்சகோதரர் கிறிஸ்ரி குரூசும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

## என்னை அழைத்தவர் இறுதிவரை என்னோடு துணையிருப்பார்

### புதிய யாழ் ஆயரின் முதலாவது உரை



கடந்த ஒக்ரோபர் மாதம் 13ஆம் திகதி அன்று யாழ் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக அறிவிக்கப்பட்ட பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் தனது நியமன அறிவித்தலைத் தொடர்ந்து ஆற்றிய முதல் உரையில் மேற்கண்டவாறு கூறினார். அவர் ஆற்றிய உரையின் தமிழாக்கம் இது :

இறைவனின் அன்பான பராமரிப்பில் நான் கொண்டுள்ள ஆழமான நம்பிக்கையோடு, யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயராகத் திருத்தந்தை என்னை நியமித்து என்னிடம் ஒப்படைத்துள்ள பணியை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

அர்ப்பண ஆண்டிலே என் ஆண்டவரும் போதகருமான இயேசுக்கிறிஸ்து எனக்களித்த இந்த நியமனத்தை தாழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வது எனக்கு மகிழ்ச்சியளிக்கின்றது. அவர் இறுதிவரை என்னோடு துணையிருப்பார் என்பதில் நான் முழு நம்பிக்கை கொள்கிறேன்.

புனித பத்திமா அன்னையின் திருநாளாகிய ஒக்ரோபர் மாதம் 13ம் திகதி அன்று எனது ஆயர் நியமனத்தை அறிவிப்பதற்கு உதவிய எமது திருத்தந்தையின் பிரதிநிதி பேரருட்திரு பியர் குயென் வான் ரொட் அவர்களுக்கு நான் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். ஏனெனில் நான் பிறந்தது புனித பத்திமா அன்னையின் திருநாளாகிய மே மாதம் 31ம் திகதியேயாகும்.

எமது ஆயராகிய பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களுக்குப்பின் இந்த மறைமாவட்டத்தைப் பொறுப்பெடுப்பதை எனது பாக்கியமாகக் கருதுகிறேன்.

ஆயர் அவர்களே! எமது நாட்டின் மிகவும் கொந்தளிப்பான, இடர்கள் நிறைந்த ஒரு காலத்தில் தாங்கள் எமது மறைமாவட்டத்தை வழிநடத்தவேண்டியிருந்தது. அதிலும் எமது யாழ். மறைமாவட்டம்தான் போரின் பாரதூரமான தாக்கத்தைத் தனக்குள் தாங்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

அழிக்கப்பட்ட ஆலயங்களையும், சிதைந்துபோன பங்குமனைகளையும், கொல்லப்பட்ட, காணாமல்போன குருக்கள் துறவிகளையும், மக்களின் பாரிய இடப்பெயர்வுகளையும் தாங்கள் எதிர்நோக்கவேண்டியிருந்தது எவ்வளவு கடினமானது என்பது எல்லாருக்கும் தெரியும். மக்களினதும், குருக்கள், துறவிகளினதும் இத்தகைய துன்பங்களையெல்லாம் தாங்கியவராக தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மந்தையை அன்போடும் அக்கறையோடும் பராமரித்து வழிநடத்தி வந்ததற்காக தங்களுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம். இவற்றுக்கெல்லாம் அடிப்படையாகத் தங்கள் இறக்கைகளின்கீழ்க் காற்றாக அமைந்தது தங்கள் ஆழமான விசுவாசமே என்பது மிகவும் உறுதியான உண்மையாகும்.

எனது அன்பான குருக்களே, எமது மறைமாவட்டத்தில் பணியாற்றும் துறவிகளே, இறைமக்களே, மற்றும் பங்குகள், பாடசாலைகள், ஆன்மீகப் பணியகங்கள், மேய்ப்புப்பணி, இரக்கப்பணி சார்ந்த நிறுவனங்கள் ஆகியவற்றின் பணியாளர்களே! நான் உங்களோடு இணைந்து பணியாற்ற மிக ஆவலாக இருக்கின்றேன்.

அத்துடன் இறைவனை அன்புசெய்யவும், அடுத்தவருக்குப் பணிபுரியவும் ஏனைய கிறிஸ்தவ சபைச் சகோதரங்களோடும், ஏனைய சமயங்களின் அங்கத்தவர்களோடும், நல்மனத்தோர் அனைவரோடும் இணைந்து பணியாற்றவும் ஆவலாகவுள்ளேன்.

வடபகுதிவாழ் தமிழ் மக்களின் ஏக்கங்கள், அபிலாஷைகள் மட்டில் தேவையான கவனம் செலுத்தி, உரிய அதிகாரிகளுக்கு அவற்றைத் தெரியப்படுத்தி, மக்களின் துன்பங்கள் நீக்கத் தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுக்க என்னாலான முயற்சிகளையும் மேற்கொள்ள விரும்புகின்றேன்.

"உங்களுக்காக நான் ஒரு ஆயன். ஆனால், உங்களோடு நான் ஒரு கிறிஸ்தவன். முன்னையது அலுவலைக் குறிக்கிறது. பின்னையது அருளைக் குறிக்கிறது. முன்னையது ஆபத்தின் தலைப்பு, பின்னையது மீட்பின் தலைப்பு..... உங்கள் செபத்தினாலும், கீழ்ப்படிவினாலும் எனக்குத் துணையாகவிருங்கள், இதனால், நான் உங்களுக்கு அதிகாரியாயிருப்பதில்லை, மாறாக, துணையாக இருப்பதில் மகிழ்ச்சியடைவேன்"

உங்கள் எல்லாருக்கும் எனது நன்றிகளைக் கூறுவதோடு உங்கள் செபங்களையும் கேட்டுநிற்கின்றேன். பரிசுத்த கன்னிமரியாள் எம்மோடு வழிநடந்து தனது மைந்தனிடம் எம்மை அழைத்துச் செல்வாராக!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ப்பண வாழ்வின் ஆண்டு

## இலங்கையில் பணியாற்றும் துறவற சபைகள்

மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள துறவற சபைகள் பற்றிய விரிவான கட்டுரை இப்பகுதியில் இடம்பெறும்.

## அமலமரித் தியாகிகள் சபை (OMI)




பிரான்சியப் புரட்சியின் பின்னர் போர் ஓய்ந்திருந்த வேளையில், அன்றைய கலாசார, சமூக, அரசியல் மற்றும் சமய சூழமைவுகளைத் தியானித்து, அதற்கு மேலாக இறையரசைப் பறைசாற்ற புனித இயூஜின் டி மசனட் ஏற்படுத்திய அமலமரித்தியாகிகள் சபை கத்தோலிக்க திருச்சபை வரலாற்றில் 200 வருடங்களாக பல நாடுகளில் பணியாற்றிவருகின்றது.

இன்று 4,440 அமலமரித்தியாகிகள் குருக்களாக, அருட்சகோதரர்களாக, முதல் வாக்குத்தத்தத்துடன் உருவாக்கம் பெறுபவர்களாக உலகின் பலபாகங்களிலும் பணியாற்றிவருவது வெளிப்படையுண்மை.

"எளியோர்க்கு நற்செய்தி நவில" என்ற விருதுவாக்குடன் பணியாற்றும் அமதிகள் சபையின் உருவாக்கம், நோக்கம், பணிவாழ்வுபற்றி எடுத்துரைப்பது சாலச்சிறந்தது. பலருக்கு பலவிதமாக இறையனுபவத்தைக் காண்பிக்கும் ஆவியானவர், பிரான்சு நாட்டு புறவான்ஸ் நகரின் சின்னப்பிரபு புனித இயூஜின் டி மசனட் மேலும் நிழலிட்டார். இறைவனில் ஆழ்ந்த விசுவாசம், செபம், மரியன்னையில் நம்பிக்கை, நேர்மையான நேரடிப் பேச்சு, கூர்மையான அறிவு, ஈகையுள்ளம், ஏழைகள் மட்டிலான அன்பு போன்ற நல்ல பண்புகள் அவரின் இதயத்துடிப்பிலும், மூச்சிலும், பேச்சிலும் கலந்துவளர்ந்தன. 1807இல் பெரிய வெள்ளியன்று சிலுவையில் அறையுண்ட இயேசுவை உற்றுநோக்கினார், தன் நிகழ்கால வாழ்வை நினைத்தார், தெளிவுபெற்றார், உள்ளம் உருகினார். இயேசுவிடம் சரணடைந்து தன்னை அவருக்கே கையளித்தார். குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு இறை பணியைத் தொடர்ந்தார். இவர்தான் உலகெங்கும் பணியாற்றும் அமலமரித் தியாகிகளின் இதயத்துடிப்பு. அமலமரித் தியாகிகள் சபையின் நிறுவுனர்.

சிறுவயதில் அவர் அனுபவித்த துன்ப வடுக்கள், அகதி வாழ்க்கை போன்றவை அவரை இயேசுவின் சிலுவையின் கண்ணோட்டத்தில் சிந்திக்கத் தூண்டியது. அக்காலத்தில் மக்களின் துன்பநிலையைக் கண்டு அவர்களுக்கு வாழ்வு கொடுக்க, இயேசுவின் நற்செய்தியின் ஒளியில் மக்களை ஒன்றிணைக்கப் புறப்பட்டார். கடவுளுடைய மகிமைக்காகவும், திருச்சபையின் நன்மைக்காகவும், ஏழை மக்களின் நல்வாழ்விற்காகவும் தன்னை அர்ப்பணித்த புனித இயூஜின் டி மசனட், தன்னுடன் பயணிக்கக்கூடிய சில குருக்களையும் இணைத்து 25.01.1816இல் அமலமரித் தியாகிகள் சபையை நிறுவினார்.

அங்கத்தவர்களின் குழும வாழ்க்கை, "ஏழைகளுக்கு நற்செய்தி நவிலல்" என்னும் விருதுவாக்கோடு உருவாக்கப்பட்ட அமலமரித் தியாகிகள் சபையானது 'புறவான்சின் மறைபரப்பாளர் சபை' என அம்மறைமாவட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டது. பின்னர் முழுத் திருச்சபையின் அங்கீகாரத்தைப்பெற சபையின் நோக்கம், வாழ்வு என்பவற்றை சபைச்சட்டமாக எழுதி, திருத்தந்தை 12ம் லியோவிடம் கையளித்து அனுமதி வேண்டினார். காலத்தின் தேவை கருதிப் பணிசெய்யும் அச்சபைக்கு 'அமலமரித் தியாகிகள்' எனப்புதுப்பெயர் சூட்டி 17.02.1826இல் திருச்சபையில் ஒரு துறவறசபையாக பணியாற்ற திருத்தந்தை அங்கீகாரம் வழங்கினார். மிகவும் குறைந்த உறுப்பினர்களைக்கொண்டு தங்கள் பணியைத் தொடங்கினாலும் உலகனைத்திற்கும் இயேசுவின் நற்செய்தியை எடுத்துச்செல்ல வேண்டும் என்பதே இவர்களது விருதுவாக்கு. இதனால்தான் அன்று, "புனித பவுலுடைய இதயத்தைப் போன்றவர்" என்று புனித இயூஜின் டி மசனட் அடையாளம் காட்டப்பட்டார்.

சபையின் ஆரம்பகாலம் தொடக்கம் இன்றுவரை பணித்துடிப்பினாலும், இறை அனுபவத்தினாலும், மனித உணர்வுகளினாலும் உந்தப்பட்ட அமலமரித்தியாகிகள், பொய்யான உலகத்தின் போக்கை மாற்றி, பழமைகள் களைந்து, மனிதம் வாழ புதுமைகள் புகுத்தி, உண்மையைப் போதித்து, போதனையை வாழ்வாக்கி, வாழ்க்கையினைப் பணியாக்கி, வலுவிழந்தோருக்கு வலிமையும், நோயுற்றோருக்கு சுகவாழ்வும், ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வும் அளித்து மனிதத்தை மேம்படுத்திய இயேசு ஆண்டவரின் இறையாட்சிப் பணிக்கான ஊழியர்களாக உலகம் முழுவதும் தங்களை அர்ப்பணித்துள்ளார்கள்.


"நீங்கள் செய்யும் திருப்பணிக்கு நீங்கள் அணியும் திருச்சிலுவையே சாட்சி" என்ற தூய இயூஜினின் வார்த்தைக்கேற்ப ஒவ்வொரு அமலமரித்தியாகியும் திருச்சிலுவை அணிந்து, அமலமரிக்குத் தங்களை ஒப்புக்கொடுத்து பணியாற்றுவதனால் திருச்சபை வரலாற்றில் அவர்களின் பணியினைக் கட்டமிட்டுக் காட்டமுடியும்.

ஒல்லாந்த ஆணவத்தால் அழிந்துகொண்டிருந்த இலங்கைத் திருச்சபைக்கு புத்துயிர் அளித்த பெருமை புனித யோசேவ்வாஸையே சாரும். அவரைத் தொடர்ந்து இலங்கைத் திருச்சபையின் வளர்ச்சிக்கு பல வழிகளிலும் உதவியவர் புனித இயூஜின் டி மசனட். இலங்கைத் திருச்சபை மட்டில் அவருக்கு அளவுகடந்த கரிசனையும், அன்பும் இருந்ததை அவர் ஆயர் செமெரியாவுக்கு எழுதிய கடிதங்களில் காணமுடிகிறது.

ஈழ மண்ணில் அமலமரித் தியாகிகள் கால்பதித்து ஏறத்தாழ 168 வருடங்களில் கடந்துவிட்டன. இவர்கள் நற்செய்திப்பணி, சமூகப்பணி, உருவாக்கல்பணி என தனி மனிதர்களையும், சமூகங்களையும் கட்டியெழுப்பிய சிற்பிகளாகத் திகழ்கிறார்கள்.

இலங்கையில் யாழ் - மாகாணம், கொழும்பு - மாகாணம் என இரு மாகாணங்களாக அமலமரித்தியாகிகள் இலங்கை முழுவதிலும் பணிபுரிகிறார்கள். இலங்கையில் கொடிய யுத்தகாலத்தில் வடக்கில் அமதிகள் மக்களோடு வாழ்ந்து, அவர்களின் தேவைகளில் கரம்கோர்த்து, இன்று தங்கள் பணிகளை காலத்திற்கு ஏற்றவிதத்தில் விசாலமாக்கி பணியாற்றிவருகிறார்கள். கலாபனையும் துன்பங்களும் சூழ்ந்த வேளையில் இலங்கைத் திருச்சபைக்கு கரம் கொடுத்தவர்கள் அமலமரித்தியாகிகள் சபையினர். இறையாட்சிப்பயணத்தில் எல்லா மக்களையும் அழைத்து இறைச்சித்தத்தை நிறைவேற்ற தொடர்ந்து இறைவன் இவர்களுக்கு அருள்புரிவாராக.

## ஒன்பது மாத காலப்பகுதிக்குள் 2200 பேர் வீதி விபத்துக்களால் உயிரிழப்பு




2015ஆம் ஆண்டின் முதல் 09 மாத காலப்பகுதிக்குள் 2,200 பேர் வீதி விபத்துக்களால் உயிரிழந்துள்ளதாகப் போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது. 2014ஆம் ஆண்டு வீதி விபத்துக்களால் 36,050 பேர் காயமடைந்த நிலையில் அவர்களுள் 2,440 பேர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வீதி விபத்துக்களால் உயிரிழப்புக்கள் அதிகரிக்கின்றமை கவனித்துப் பார்க்கவேண்டியதொரு விடயமாகும். எனவே வீதி விபத்துக்களைக் குறைத்து அதன்மூலம் உயிரிழப்புக்களைக் குறைக்க உடனடி நடவடிக்கைகளை ஏ்டுக்கவேண்டியது அவசியமாகும் எனப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

வீதி விபத்துக்களைக் குறைக்கவேண்டுமாயின் அது தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியமாகும். அத்துடன் வீதிப் பாதுகாப்புத் தொடர்பில் புதிய சட்டதிட்டங்களையும் அமுலுக்குக் கொண்டுவரவேண்டும். வீதிப் பாதுகாப்புத் தொடர்பில் புதிய தேசியக் கொள்கையை அமுல்படுத்துவது அவசியமாகும். இதற்கென நீண்டகாலத் திட்டமொன்றினை அமுல்படுத்த வேண்டுமெனவும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

## மன்னார் மறைமாவட்ட மரியாயின் சேனையினரின் செபமாலைப் பேரணி - 2015




அன்னை மரியாயின் புகழ் பரப்ப ஒக்ரோபர் மாதத்திலே செபமாலைப் பக்தியைப் பரப்பிடும் வழியாக ஒவ்வொரு வருடமும் மன்னார் மறைமாவட்ட மரியாயின் சேனையினரால் முன்னெடுக்கப்படுகின்ற செபமாலைப் பேரணியானது இவ்வருடம் மடு மறைக்கோட்டத்தில் நடைபெற்றது.

கடந்த ஒக்ரோபர் மாதம் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மன்னார் கொமிசியத்தின் தலைமையின்கீழ் வவுனியா, வேப்பங்குளம், முருங்கன், தேவன்பிட்டி, மன்னார், பேசாலை ஆகிய கியூரியாக்களிலுள்ள 74 பிரசீடியங்களை உள்ளடக்கிய 1,200க்கும் மேற்பட்ட மரியாயின் சேனையாளர்களுடன், மறைமாவட்டத்திலுள்ள மாதா கூட்டத்தினர், காத்தாங்குளம், ஆட்காட்டிவெளி பங்கு மக்களும் ஒன்றிணைந்து, "அர்ப்பணிக்கப்பட்ட குடும்பங்களே தேவ அழைத்தலின் விளைநிலங்கள்" எனும் கருப்பொருளில் இச்செபமாலைப் பேரணி இடம்பெற்றது.

உலகின் தேவைகளுக்காகவும், எமது நாட்டிற்காகவும், மன்னார் மறைமாவட்டக் கருத்துக்களுக்காகவும், திருச்சபைக் கருத்துக்களுக்காகவும், துன்புறும் மக்களுக்காகவும் செபமாலை செபிக்கப்பட்டது.

அடம்பன் பங்குத்தந்தை அருட்பணி. நியூட்டன் அடிகளார் இப்பவனி நல்லவிதமாக அமையவேண்டுமென்ற கருத்தை முன்வைத்து ஆரம்ப வழிபாட்டை நடத்தினார்.

தொடர்ந்து மன்னார் மறைமாவட்ட மரியாயின் சேனையின் ஆன்ம இயக்குனர் அருட்பணி. எஸ். கே. தேவராஜா அடிகளார் தமது ஆரம்ப மறையுரையில் பல விடயங்களைச் சுட்டிக்காட்டினார். செபமாலையின் ஆரம்பம், வரலாறு, சாமிநாதர் வழியாக அன்னை அருளியவை, அன்னையின் திருக்காட்சிகளின்போது அவர்கள் கூறிய செய்திகள், அல்பிஜென்ஸ் கலாபனை செபமாலை ஓதியபோது முறியடிக்கப்பட்ட விதம், செபமாலையின் ஐந்து வகையான நிறங்கள் குறிக்கும் ஐந்து கண்டங்களின் கருப்பொருள், திருத்தந்தையர்களினால் செபமாலைப் பக்திபற்றிக் கூறப்பட்டுள்ள செய்திகளின் விளக்கங்கள், மேலும் செபமாலைப் பேரணியின் முக்கியத்துவம் போன்றவற்றை எடுத்து விளக்கினார்.

பிற்பகல் 3.30 மணிக்கு அலங்கரிக்கப்பட்ட தேரில் பற்றிமா மாதாவின் திருச்சுருபம் ஏற்றப்பட்டது. கறுக்காக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் இருந்து இச்செபமாலைப் பவனி ஆரம்பமாகி, பிரதான வீதி வழியாக இப்பவனி ஆட்காட்டிவெளிப் பங்கு புனித சவேரியார் ஆலயத்தில் நிறைவுபெற்றது.

ஆட்காட்டிவெளி ஆலயத்தில் மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அடிகளார் தலைமையில் கூட்டுத்திருப்பலி இடம்பெற்றது. மரியாயின் சேனை ஆன்ம இயக்குனர் அருட்பணி. எஸ். கே. தேவராஜா, விடத்தல்தீவு பங்குத்தந்தை அருட்பணி. செல்வநாதன், காத்தான்குளம் பங்குத்தந்தை அருட்பணி. வசந்தகுமார், ஆட்காட்டிவெளிப் பங்குத்தந்தை அருட்பணி, டெஸ்மன் ஆஞ்சலோ ஆகியோர் இணைந்து இக்கூட்டுத்திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர்.

"சந்திரனைப்போல் ரூபவதியான சூரியனைப்போல் இலங்குகிறவளாய், அருனோதயம்போல் எழுந்து வருகின்ற இவள் யார்?" எனக் கூறி, அன்னை மரியாள்பற்றி குருமுதல்வர் மறையுரையாற்றி ஆசீர் வழங்கினார்.

திருப்பலி நிறைவில் சேனைச்செபங்கள் செபிக்கப்பட்டு, கொமிசியச் செயலாளரது நன்றியுரையுடன், அன்னையின் திருச்சுருப ஆசீர்வாதத்துடன் இச்செபமாலைப் பேரணியானது நிறைவுற்றது.

அன்னை மரியாளின் கையளிப்பு நமக்கெல்லாம் விசுவாச வாழ்வில் மிகப்பெரிய பாடம். மரியாள் வைத்திருந்த ஆழமான விசுவாசம் நமதாக வேண்டும். இறைவன் திருவுளம் எதுவென்றாலும், அதை முழுமையாக நிறைவேற்ற நம்மையே கையளிக்கவேண்டும். இறைவனால் நமக்குக் கொடுக்கப்பட்ட உயர்ந்த கொடையான அன்னை மரியாள் நமக்காக எந்நாளும் தந்தையாகிய இறைவனிடம் பரிந்துபேசிக்கொண்டே இருக்கிறாள். அன்னையின் உதவியை மன்றாடியவர்கள் யாரும் கைவிடப்பட மாட்டார்கள். அந்த அன்னையிடம் நாம் முழுமையான நம்பிக்கை வைப்போம். அவளிடத்தில் நம்மை ஒப்புக்கொடுப்போம்.

*தகவல் : மன்னார் மறைமாவட்ட மரியாயின் சேனை கொமிசியம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகத் திருச்சபைச் செய்திகள்

# பணத்தின்மீது அன்பு செலுத்துவது சிலை வழிபாடாகும்

### திருத்தந்தை பிரான்சிஸ்


இயேசு செல்வத்திற்கு எதிராகக் கண்டனம் தெரிவிக்கவில்லை. ஆனால் குடும்பங்களைப் பிரித்து, போர்களுக்குக் காரணமாகும் செல்வத்தின்மீதான பற்றையே கண்டனம் செய்கிறார் என்று திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார்.

கடந்த ஒக்ரோபர் 15ஆம் திகதி அன்று காலையில் வத்திக்கான் சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் நிறைவேற்றிய திருப்பலியில், அன்றைய நாளைய வாசகங்களை (உரோ.4: 20-25, லூக். 12: 13-21) மையமாக வைத்து மறையுரையாற்றிய திருத்தந்தை, இறைவனுக்கும் செல்வத்திற்கும் நாம் ஒரே நேரத்தில் ஊழியம்புரிய முடியாது என்பதை விசுவாசிகளிடம் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

இயேசு செல்வத்திற்கு எதிராகப் பேசவில்லை. ஆனால் ஒருவர் தனது பாதுகாப்பைப் பணத்தில் வைப்பதற்கு எதிராகப் பேசினார். செல்வத்தை இவ்வாறு ஒருவர் சேமித்து வைப்பது, மதத்தை, ஆயுள்காப்பீட்டு நிறுவனமாக மாற்றும் ஆபத்தாக உள்ளது என்று திருத்தந்தை கூறினார்.

சொத்துக்காக எத்தனை குடும்பங்கள் சண்டையிட்டு, தங்களுக்கிடையே ஒரு வணக்கம்கூட சொல்லாமல் ஒருவர் ஒருவரை வெறுத்து வாழ்வதைப் பார்க்கிறோம். குடும்ப அன்பு, பிள்ளைகள் அன்பு, பெற்றோர் உறவுகள் அன்பு மிகவும் பெரிதாக இல்லாமல் பணமே முக்கியமாக இருக்கின்றது. இது அழிவைக்கொணர்கின்றது. நாம் இக்காலத்தில் காணும் போர்களுக்குப் பின்புலத்தில் பணமே இருக்கின்றது. பணத்திற்காக ஆயுத வர்த்தகம் நடக்கின்றது. இந்த வர்த்தகர்கள் போரிலிருந்து பணத்தை ஆதாயமாகப் பெறுகின்றனர்.

ஏழையரின் உள்ளம்பற்றிய இயேசுவின் மலைப்பொழிவுபற்றிப் பேசிய திருத்தந்தை, செல்வத்தின்மீது பற்று இல்லாதவர்கள்



அதனைப் பிறரின் பணிக்காகச் செலவழிக்க முன்வருவார்கள். அச்செயல், சிலைவழிபாடு என்ற பாவத்தில் விழாமல் இருப்பதன் அடையாளமாக உள்ளது என்றும் திருத்தந்தை கூறினார்.

ஒருவர் தனக்கு எஞ்சியதிலிருந்து கொடுப்பதல்ல, ஆனால் தன்னை வருத்தும் அளவுக்குத் தர்மம் செய்ய வேண்டும். நான் கொடுக்கின்றேனா? எவ்வளவு கொடுக்கின்றேன்? எப்படிக் கொடுக்கின்றேன்? இயேசு கொடுப்பதுபோல் நான் கொடுக்கின்றேனா? என்ற கேள்விகளையும் ஒவ்வொருவரும் கேட்குமாறு திருத்தந்தை விசுவாசிகளிடம் கூறினார்.

ஒருவருக்குக் கொடுக்கும்போது அவரது கண்ணைப் பார்த்து கொடுக்கின்றேனா? அந்த நபரின் கையைத் தொடுக்கின்றேனா? அவர்கள் கிறிஸ்துவின் சொந்த சதை. அவர்கள் உங்கள் சகோதர சகோதரிகள். மேலும் சிலை வழிபாடாகிய பணத்தின்மீது பற்று வைக்காதிருப்பதற்கு இயேசுவிடம் செபிப்போம் என்றும் திருத்தந்தை கூறினார்.

# “அக்கறையின்மையை அகற்றி அமைதியை வெல்வோம்”

### 2016 ஜனவரி முதலாம் திகதி சிறப்பிக்கப்படும் 49வது உலக கத்தோலிக்க அமைதி தினத்திற்கான மையப்பொருள்



“அக்கறையின்மையை அகற்றி, அமைதியை வெல்வோம்” என்பது வருகின்ற 2016 ஜனவரி முதலாம் திகதி சிறப்பிக்கப்படும் 49வது உலக கத்தோலிக்க அமைதி தினத்திற்கான தலைப்பாகத் திருத்தந்தை பிரான்சிஸ் தேர்ந்தெடுத்துள்ளார்.

2016ம் ஆண்டு ஜனவரி முதலாம் நாள் சிறப்பிக்கப்படும் 49வது உலக கத்தோலிக்க அமைதி தினத்திற்குத் திருத்தந்தை தேர்ந்தெடுத்துள்ள இத்தலைப்பை வெளியிட்டுள்ள திருப்பீடம், அக்கறையின்மை, இக்காலத்தில் அமைதி குறைவதற்கு அடிப்படைக் காரணங்களில் ஒன்றாக உள்ளது என்று கூறியுள்ளது. இக்காலத்தில் புறக்கணிப்பு தனிமனிதக் கோட்பாட்டின் பல்வேறு வடிவங்களோடு தொடர்புகொண்டுள்ளது என்றும், தனிமை, அறியாமை, தன்னலம் ஆகியவற்றுக்கு இது காரணமாகி, அக்கறை மற்றும் அர்ப்பணப் பண்புகளைக் குறைக்கின்றது என்றும் திருப்பீடம் கூறியுள்ளது.

ஒவ்வொரு மனிதனின் உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டு மதிக்கப்படும்போது அமைதி இயலக்கூடியதே என்றுரைத்துள்ள திருப்பீடம், உலகில் நன்மனம் கொண்ட அனைவரும், குறிப்பாக கல்வி, ஊடகம், கலாச்சாரம் ஆகிய துறைகளில் பணியாற்றுபவர்கள் தங்களால் இயலக்கூடியவகையில் கருணையும், மனச்சாட்சியும் உள்ள உலகை ஒன்றிணைந்து கட்டியெழுப்புமாறு 2016ஆம் ஆண்டு அமைதி தினம் அழைப்பு விடுக்கின்றது என்று தெரிவித்துள்ளது.

இதன் வழியாக இன்னும் அதிகமான சுதந்திர மற்றும் நீதி நிறைந்த உலகு உருவாகும் என்றும் திருப்பீடம் கூறியுள்ளது. ஒவ்வோர் ஆண்டும் தை முதலாம் திகதி கத்தோலிக்கத் திரு அவையில் சிறப்பிக்கப்படும் உலக அமைதி தினம் முத்திப்பேறுபெற்ற திருத்தந்தை 6ம் பவுல் அவர்களால் 1967ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. 1968ஆம் ஆண்டு முதல் உலக அமைதி தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த உலக தினத்திற்கான திருத்தந்தையின் செய்தி உலகின் அனைத்து வெளியுறவு அமைச்சர்களுக்கும் அனுப்பப்படுகிறது.

# திருஅவைத் தலைவர்கள் இறைவாக்கினர் பணியை ஆற்றவேண்டும்

### சீரோ மலபார் வழிபாட்டுமுறை திருஅவைத் தலைவர் கர்தினால் ஜோர்ச் அலன்ஜேரி

இக்காலத் திருஅவைத் தலைவர்கள் துன்பம் மற்றும் தன்னையே வெறுமையாக்கும் இறைவாக்கினரின் பணியை ஆற்ற அழைக்கப்பட்டுள்ளனர் என்று கர்தினால் ஜோர்ச் அலன்ஜெரி (George Alencherry) அவர்கள் மாமன்றத் தந்தையரிடம் கூறினார்.


திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பிரசன்னத்தில் கடந்த ஒக்ரோபர் 06ஆம் திகதி செவ்வாய் காலை ஒன்பது மணிக்குத் தொடங்கிய 14வது உலக ஆயர்கள் மாமன்றத்தின் மூன்றாவது பொது அமர்வில் முதல் நிகழ்வாக இடம்பெற்ற காலை திருப்புகழ்மாலை செபத்தில் மறையுரையாற்றிய சீரோ மலபார் வழிபாட்டுமுறை திருஅவைத் தலைவரும், ரட்னாகுளம் - அங்காமலி (Rtnakulam-Angamaly) உயர் பேராயருமான கர்தினால் ஜோர்ச் அலன்ஜெரி அவர்கள் தமது மறையுரையின்போது இவ்வாறு கூறினார்.



இறைவார்த்தையாலும், சொந்த வாழ்வின் சான்றாலும் மக்களுக்கு ஆதரவளித்த இறைவாக்கினர் எரேமியா போன்று பணியாற்ற திருஅவைத் தலைவர்கள் முன்வர வேண்டும் என்றுரைத்த கர்தினால் அவர்கள், எரேமியா இறைவாக்கினர் பணியை ஆற்றியதால் துன்புற்றார் என்றும் கூறினார்.

காயமடைந்த, புண்பட்ட மற்றும் அழுக்காய் இருக்கும் திருஅவையை நான் விரும்புகிறேன். ஏனெனில் அது தெருக்களில் இருக்கின்றது என்றும், தனது சொந்தப் பாதுகாப்புக்குள்ளே தன்னை முடக்கிக்கொண்டு இருப்பதைவிட, தெருக்களில் அழுக்காய் இருக்கும் திருஅவையை விரும்புகிறேன் என்றும் கர்தினால் அலன்ஜெரி கூறினார்.







கடந்த செப்ரம்பர் மாதம் 25ஆம் திகதி திருத்தந்தை பிரான்சிஸ் ஐக்கிய நாடுகள் சபையின் பொது அமர்வில் உரையாற்றியபோது!

# புனிதர்களின் பாதையில்

## புனித ஸ்தனிஸ்லோஸ் கோஸ்கா சே.ச.

*இளந்துறவி (கி.பி. 1550 - 1568)*



மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

இவர் போலந்து நாட்டில் ராஸ்கோவ் என்ற நகரில் உயர்குலத்தில் தோன்றியவர். 1564ஆம் ஆண்டு தம் சகோதரருடன் கல்விகற்க வியன்னாவுக்கு அனுப்பப்பட்டார். சென்ற இடத்தில் ஒரு புராட்டஸ்டன்ட் வீட்டில் குடியிருந்தனர். ஒருமுறை இவர் கடும் காய்ச்சலால் படுத்த படுக்கையாகிவிட்டார். அந்நிலையில் தம் அண்ணனிடம் தமக்குத் திவ்விய நன்மைதர ஒரு குருவானவரை அழைத்துவருமாறு கேட்டார். பலமுறை கேட்டும் பயனில்லை. அண்ணன் எரிச்சலுடன் இவரைத் தடியால் அடித்துவிட்டு ஓடினான்.

இந்நிலையில் புனிதர் நற்சாவுக்குப் பாதுகாவலியான புனித பார்பராவிடம் உருக்கமாக வேண்டினார். அவரது வேண்டுதல் கேட்கப்பட்டது. ஒரு நள்ளிரவு, இருள் படர்ந்திருந்த இவரது அறையில் எதிர்பாராமல் ஓர் ஒளி தோன்றியது. பார்பராவும், 2 வானதூதர்களும் தோன்றினர். அந்த வானதூதர்களில் ஒருவர் கையில் திவ்விய நற்கருணையை ஏந்தி நின்றார். புனிதர் முழங்கால் இட்டு அதனைப் பக்தியுடன் பெற்றுக்கொண்டார். உடனே நோய் நீங்கி நலமடைந்தார்.

இன்னொரு நாளும் ஒரு புதுமை நிகழ்ந்தது. மீண்டும் இவரது அறையில் ஓர் ஒளி தோன்றியது. உடனே மரியன்னை குழந்தை இயேசுவுடன் தோன்றினார். புன்முறுவலுடன் மரியன்னை சற்றே குனிந்து ஸ்தனிஸ்லாசிடம் தம் மகனைக் கொடுத்தார். தேவபாலனும் தம் கைகளால் புனிதரைத் தழுவினார். இந்த நேரத்தில் மரியன்னை புனிதரைப் புதிதாகத் தோன்றிய இயேசு சபையில் சேருமாறு கூறிவிட்டு மறைந்தார்.

தந்தையோ இதற்கு உடன்படவில்லை. எனவே புனிதர் தம் 17 வயதில் சாக்குத் துணியைத் தம்மீது போட்டுக்கொண்டு கால் நடையாக உரோமை நோக்கிப் புறப்பட்டார். முதலில் ஜெர்மனியை அடைந்து பீற்றர் கனிசியுசிடம் தம்மைச் சபையில் சேர்க்க வேண்டுமெனக் கேட்டார். ஆனால் சூழ்நிலையின் காரணமாக உரோமை செல்வதே மேல் என்று கனிசியுஸ் சொல்லிவிட்டார். அதனால் மேலும் 800 கல் தொலைவு நடந்து உரோமையை அடைந்தார். அங்கே பிரான்சிஸ் போர்ஜியா இவரைச் சபையில் சேர்த்துக்கொண்டார். 9 மாதங்களே இவர் இளந்துறவு நிலையில் இருந்தார். அதற்குள் நோயினால் தாக்கப்பட்டார்.

இவர் மரியன்னையிடம் ஆழ்ந்த பக்திகொண்டு இருந்தவர். தம் இறப்பு அண்மையிலிருப்பதை உணர்ந்தார். அன்னையின் விண்ணேற்புப் பெருவிழாவன்று, தாம் இறக்கப்போவதாகக் கூறி வந்தார். ஆகஸ்டு 14ஆம் நாள் நள்ளிரவில் அவரின் முகம் ஒளிர்ந்தது. அருகிலிருந்த ஒருவரிடம் “மரியன்னை கன்னியர் பலருடன் என்னை விண்ணகம் எடுத்துச்செல்ல வந்திருக்கின்றார்” என்று சொல்லிப் புன்முறுவலுடன் தம் ஆன்மாவை இறைவனிடம் கையளித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிர்வுகள் .....!

## அருட்பணியாளர் செ. அன்புராசா, அ.ம.தி எழுதும்

சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 47

# வாசிப்பை நேசிப்போம்!

### *நூல்கள் புத்துயிர் அளிப்பவை*

மாவீரன் பகத்சிங் தூக்குத்தண்டனைக் கைதியாக சிறைவைக்கப்பட்டிருந்தான். தண்டனை நிறைவேற்றும் நாள் வந்தது. அன்றும் ஆர்வத்தோடு ஒரு நூலைப் படித்துக்கொண்டிருந்தான். அது, லெனின் அவர்களின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் ஒரு நூல். தண்டனையை நிறைவேற்ற சிறைக்காவலர்கள் வந்து பகத்சிங்கை அழைத்தார்கள். அப்போது பகத்சிங், "தயவுசெய்து ஐந்து நிமிடங்கள் பொறுத்துக் கொள்ளுங்கள்! இங்கே, ஒரு புரட்சியாளன் இன்னுமொரு புரட்சியாளனோடு உரையாடிக்கொண்டிருக்கிறான்..!" என்றானாம்.

இதனால்தானோ என்னவோ, 'துப்பாக்கிகளைவிட பயங்கரமான ஆயுதங்கள் நூல்கள்' என்றார் மாட்டின் லூதர் கிங். அணுக்குண்டு ஒருமுறைதான் வெடிக்கும். நல்ல நூல்கள் பக்கத்திற்குப் பக்கம் வெடிக்கும்' என்றார் கால் மாக்ஸ். 'நல்ல நூல்கள் சிந்தனை நிரம்பிய பீரங்கிகள்' என்றார் மாண்டேயின். ஆக, நல்ல நூல்களின் வாசிப்பு வாசகர்களை மிக உயர்ந்த இலக்குகளை அடையத் தூண்டுவதை பலருடைய வாழ்க்கை அனுபவங்களில் இருந்து பார்க்கலாம்.

இவ்வுலகத்தில் வாழ்ந்த பல பெரியவர்களை, அறிஞர்களை, தொண்டர்களை அறிந்துகொள்வதற்கு மிகவும் உதவியாக இருப்பது அவர்கள் எழுதிய நூல்கள் அல்லது அவர்களைப்பற்றி எழுதப்பட்ட நூல்கள் ஆகும். அந்தவகையில் நூல்கள் காலங்கள் கடந்தும் பேசுபவை. நூலை எழுதியவரோ அல்லது யாரைக் குறித்து எழுதப்பட்டதோ அவர் உயிருடன் இல்லாது போனாலும் நூலைப் படிப்பவர்க்கு அந்நபரை உயிரோடு படம் பிடித்துக்காட்டும் ஒப்பற்ற ஓவியமாக நூல்கள் விளங்குகின்றன.

### *புத்தகக் கடைகளைவிட உடுப்புக் கடைகளே நிரம்புகின்றன!*

நல்ல நூல்களை விலைகொடுத்து வாங்கிப் படிக்கவேண்டும் என்ற எண்ணம் முன்னைய காலங்களோடு ஒப்பிடுகையில் இக்காலத்தில் குறைந்துவருவதை அவதானிக்கலாம். ஒருவர் ஒரு மாதத்தில் எத்தனை நூல்களை விலைகொடுத்தோ அல்லது இரவலாகவோ வாங்கிப் படிக்கிறார் என்பதைக் கணக்கிட்டால் மேற்சொன்ன அவதானிப்பை மேலும் உறுதிப்படுத்தலாம். இன்று புத்தகக் கடைகளைவிட உடுப்புக் கடைகளே மக்களால் நிரம்பி வழிகின்றன. புத்தகக் கடைகள் கேட்பாரற்று கிடப்பில் கிடக்கின்றன. இல்லையென்று, வாசிப்பில் இன்னும் வாசனையுள்ள சிலர் புத்தகக் கடைகளுக்குள் நுழைந்தால், "கடைமாறி அங்கு செல்கிறார்களோ?" என்று எண்ணுபவர்களாகத்தான் பலர் உள்ளனர்.

### *பரிசுப் பொருளாக நூல்கள்*


பரிசுப் பொருளாக நூல்களை வாங்கும் பழக்கமோ, பரிசுப் பொருளாக நூல்களைக் கொடுக்கும் கலாசாரமோ நம்மிடையே மிகமிகக் குறைந்த அளவிலேயே இருக்கிறது. அப்படி யாராவது நூல்களைப் பரிசாக கொடுத்துவிட்டால் அவற்றை வேண்டாத பொருளாகப் பார்க்கின்ற நிலைமையே நிலவுகிறது. பரிசுப் பொருளாக நூல்களை வாங்கும் அல்லது கொடுக்கும் கலாசாரம் மேற்குலகத்தவரில் மிக அதிகளவில் காணப்படுகின்றது.

விருந்தினர்களாச் செல்கின்றபோது சிறுவர்களுக்காக 'மிக்ஸ்சர்'ரையும், பொரியல்களையும் (மீன் பொரியலையல்ல, மரவள்ளிப் பொரியல் கடலைப் பொரியல் போன்றவை), தீன்பண்டங்களையும் அளவுக்கதிகமாக வாங்கிக் கொடுத்து 'அல்சர்'ரையும், 'டயபெற்றிஸ்'சையும் பரிசளிக்காமல் பயனுள்ள நூல்களைப் பரிசளித்து புதிய கலாசாரத்தைத் தோற்றுவிக்க முன்வரவேண்டும். அல்லது தற்போது வளர்ந்துவரும் நடைமுறையைப்போன்று வளரும் பிள்ளைகளைச் சீரழிக்கும் தொடர்புசாதனங்களைப் பெரும் தொகைப் பணத்தைக் கொடுத்து பரிசளிப்பதை முற்றாகத் தவிர்த்துக்கொள்ளவேண்டும். அறிவை வளர்க்கும், சிந்தனையைத் தூண்டும், நம்பிக்கையை உருவாக்கும், நம்மை வாழவைக்கும், வாழ்வுக்கான வழியைக் காட்டும் நூல்களைப் பரிசளிக்கும் கலாசாரத்தை உருவாக்க பெற்றோர், பெரியோர், பாடசாலைகள், ஏனைய கல்வி நிறுவனங்கள், விழாக்களை ஏற்பாடு செய்வோர், பரிசளிப்போர் முன்வரவேண்டும்.

### *'நேரம் போகுதில்லை'- 'நேரமில்லை' என்பர்களுக்கும்!*

சிலருக்கு நேரம் போவதில்லை என்ற பிரச்சினை இருக்கிறது. அப்படியானவர்களுக்கு ஆஸ்டின் மெல்ப்ஸ் சொல்கின்ற ஆலோசனை அருமையானது. 'பொழுதுபோகவில்லை என்று சொல்பவர்கள் எப்போதும் கையில் ஒரு நூலை வைத்திருக்கட்டும்' என்கிறார். பாருங்கள் பொழுதைப் போக்குவதற்கு - மன்னிக்கவும் ஆக்குவதற்கு, இதனைவிடச் சிறந்தது ஏது இருக்கிறது?

பலர் இன்று, "என்னுடைய வேலையை முடிப்பதற்கு நேரமில்லை, பிறகு, வாசிப்பதற்கு எப்படி நேரமிருக்கும்!" எனக் கூறுவதைக் கேட்டிருக்கலாம். 'நேரமில்லை' என்ற சாக்குப்போக்கை ஓரே ஒரு எதிர்வினையின் ஊடாக வலுவற்றதாக்கலாம். ஒரு நாளில் எத்தனை மணித்துளிகளை



தொலைக்காட்சிக்கு முன்பாகச் செலவழிக்கிறார்கள் என்பதைக் கணக்கிட்டால் மேற்சொன்ன காரணத்தின் தாற்பரியத்தைப் புரிந்துகொள்ளலாம்.

நேரமில்லை என்று சொல்பவர்கள் வேண்டுமென்று சொல்வதுமில்லை அல்லது நேரமில்லை எனப் பொய்சொல்வதுமில்லை. உண்மையில், அவர்கள் தங்களின் பல்வேறுபட்ட வேலைகளின் மத்தியில் வாசிப்புக்கு நேரத்தைக் கண்டுபிடிக்கவில்லை என்பதுதான் அர்த்தமாகிறது. அவர்கள் தங்களின் மிகவும் அதிகமான வேலைகளின் மத்தியிலும் வாசிப்புப் பழக்கத்தினை ஏற்படுத்துவார்களேயானால் அவர்களின் வேலைப்பழுவால் ஏற்படக்கூடிய அழுத்தங்கள் குறையக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு.

வாசிப்பை ஒரு நாளில் உள்ள முக்கியமான வேலைகளுள் ஒன்றாகவும் பார்க்கலாம் அல்லது அதிக வேலைகளின் மத்தியில் அயர்வு நீக்கி மனதுக்கு மகிழ்ச்சி ஊட்டும் வேலையாகக்கூட நோக்கலாம். அது ஒவ்வொருவரினதும் மனநிலையையும் களநிலையையும் பொறுத்தது. அந்தவகையில் வாசிப்பை எங்கும் செய்யலாம். பயணிக்கும்போது, ஒருவர் வரத் தாமதமாகும்போது, ஓய்வுநேரத்தின்போது, வேலைகளின் நடுவே இடைவெளிகள் கிடைக்கின்றபோது என வாசிப்பதற்கான நேரத்தை ஒருவர் விரும்பினால் எவ்வேளைகளிலும் கண்டுகொள்ளலாம்.

### *சீரியலில் சீரழியாமலிருக்க வாசிப்புக் கலையாகட்டும்*

சீரியலில் (தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள்) மூழ்கித் தொலைந்துபோகாமல் - வாழ்க்கையைத் தொலைத்துவிடாமல் வாழ்க்கைக்கு நன்மை பயக்கும் - வாழ்வுக்கு வழிகாட்டும் நூல்களை வாசிக்கும் பழக்கத்தினை அனைவரும் உருவாக்கிக் கொள்வார்களேயானால் அது உயர்வான வாழ்க்கைப் பாதையை வகுத்துக்கொள்வதற்கு மிக உதவியாக இருக்கும்.

ஊடகங்களின் வழியாக விளம்பரப்படுத்துபவைகளைப் பார்த்துப் பார்த்து அவற்றை அப்படியே விழுங்கிவிடுகின்ற ஓர் அபாயகரமான காலமாக இக்காலத்தைப் பார்க்கவேண்டி இருக்கிறது. ஊடகங்களால் பரிமாறப்படும் விடயங்கள் எந்தளவிற்கு ஏற்றுக்கொள்ளக்கூடியவை, அவற்றின் உண்மைத்தன்மை எத்தகையது என்பதைச் சிந்திக்கமுடியாத அளவுக்கு ஊடகங்கள் இன்று மூளைச் சலவை (Brain Wash) செய்கின்றன. இது மிகவும் ஆபத்தானது. ஏனெனில் உண்மைகளைக் கண்டறிவதைவிடுத்து ஊகங்களை (ஊடகங்களையும் ஓரளவிற்குச் சேர்த்துக்கொள்ளலாம்) நம்பிவிடுகின்ற பேராபத்து இருக்கின்றது.

பொய்யான, போலியான ஒரு தகவலையே நவீன தொழில் நுட்பங்கள் ஊடாக உண்மையான ஒன்றாகச் சித்தரித்து மக்களை நம்பச் செய்கிறவையாக சில ஊடகங்கள் இன்று மாறிவருவதைப் பார்க்கலாம். எனவே, இப்பயங்கரத்தில் இருந்து தப்பிக்கவும், போலிகளை இனம்காணவும், உண்மைத்தன்மையை உறுதிப்படுத்தவும் சுயசிந்தனை இன்றியமையாதது. ஆக, வாசிப்புப் பழக்கம், குறிப்பாக நல்ல நூல்களைத் தெரிவுசெய்து வாசிக்கும் பழக்கம் சுயமாகச் சிந்திக்கக்கூடிய, சுயசிந்தனையை தூண்டக் கூடியவையாக வாசகர்களை மாற்றவல்லது.

"பிள்ளைகளின் பாதுகாப்பில் பெற்றோர் மற்றும் குடும்பத்தினர் விழிப்புணர்வுடன் செயற்படவேண்டும். சமகாலப் பகுதியில் பிள்ளைகளில் ஏற்படும் மாறுபாடான செயற்பாடுகள் மற்றும் மனக்கிளர்ச்சிகளுக்குத் தொலைக்காட்சி நாடகங்கள் மற்றும் சினிமாப் படங்களில் காணும் காட்சிகள் தூண்டுகோலாக அமைகின்றன. பிள்ளைகளின் மனங்களை மாசுபடுத்துகின்றன. தொலைக்காட்சிகள் மற்றும் திரைப்படங்களில் காணும் காட்சிகள் பிள்ளைகளின் மனதில் மாறுபட்ட மனக்கிளர்ச்சியை ஏற்படுத்தும்போது அதனை செயல்முறைப்படுத்த முற்படுகின்றனர்" எனத் தெரிவித்திருக்கிறார். கோப்பாய் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி கலாநிதி எஸ். ஜெயசீலன். அவர் தொடர்ந்து கூறுகையில், "...திரைப்படங்கள், தொலைக்காட்சிகளில் காண்பிக்கப்படும் சமூகவிரோதச் செயல்கள், பாலியல் நிகழ்வுகள் இளைய தலைமுறையினர் மத்தியில் மனக்கிளர்ச்சியை ஏற்படுத்துகின்றன. அவை பொருத்தமான நேரங்களில் முறைகேடான சட்டவிரோத செயற்பாடுகளை மேற்கொள்ள வைக்கின்றது" என்றும் கோடிட்டுக்காட்டியதாக உதயன் நாளிதழ் 28.08.2015 அன்று சுட்டிக்காட்டி இருந்தது.

ஆக, இன்றைய வளர்ந்துவரும் மாணவர் - இளையோர் மத்தியில் உருவாகியிருக்கும் புதிய புதிய பிரச்சினைகளை வெற்றிகொள்ளவும், தொலைக்காட்சி நிகழ்வுகளுக்கும், சினிமாவுக்கும் அடிமையாகாமல் இருப்பதற்கான மாற்றீடுகளைக் கண்டுபிடிப்பதும் அவற்றை இளையோரின் பயன்பாட்டிற்கு துரிதப்படுத்துவதும் அவசியமானது. வாசிப்புக் கலையை வளர்த்தெடுப்பதன் வழியாக வளரும் இளம் சமூகத்தினர் சுய சிந்தனையை வளர்த்துக்கொள்ள – சுய உருவாக்கத்தில் வளர நிச்சயமாக உதவும்.

### *தனியாக வாசிப்பது வேறு, மற்றவர்களுக்காக வாசிப்பது வேறு*

தனிப்பட்ட ஒருவர் தனக்காக வாசிப்பது ஒன்று, ஒருவர் மற்றவர்களுக்காக பொதுவான இடங்களில் வாசிப்பது இன்னொன்று. உதாரணமாகக் கூட்ட அறிக்கை வாசித்தல், வழிபாடுகளில் செபங்களை வாசித்தல் போன்றவற்றைக் கூறலாம். சிலர் தனியே தமக்கு விளங்கக்கூடிய வகையில் முணுமுணுத்தபடியோ அல்லது தொணதொணத்தபடியோ வாசிப்பார்கள். அது அவர்களுக்கு விளங்குமேதவிர கேட்பவர்களுக்கு விசர்தான் பிடிக்கும். ஆகவேதான், பொது இடங்களில் மற்றவர்கள் கேட்க ஒருவர் வாசிக்கவேண்டி இருப்பின் அவர் தெளிவாக, விளக்கமாக, உரத்த குரலில், பொருள் உணர்ந்து வாசிக்கவேண்டும்.

ஒருவர் தனியே தனக்காக வாசிக்கும்போது தலைகீழாக நின்று வாசித்தாலும் அதில் எவ்விதமான பிரச்சினையும் இல்லை (எனக்குப் பிரச்சினை இல்லை, உங்களுக்கும் பிரச்சினை இருக்காது என நினைக்கிறேன்). ஏனெனில் எவ்வாறான நிலையில் இருந்து வாசிக்க விரும்புகிறார் என்பது வாசிப்பவரின் விருப்பத்தைப் பொறுத்தது. மற்றவர் முன்பாக வாசிக்கும்போது தெளிவாகவும் பொருள் விளங்கக்கூடியவகையிலும் வாசித்தல் வேண்டும்.

### *எப்படி வாசிப்பது?*

மார்டிமர் ஜே அட்லர் How to Read a Book (ஒரு நூலை எப்படி வாசிப்பது) என்ற ஆங்கில நூலை 1940இல் எழுதியுள்ளார். ஏன் படிக்க வேண்டும்? எவ்வாறு படிக்கவேண்டும்? நூலை விளங்கிக்கொள்வதில் உள்ள சிரமங்கள் என்ன? அவற்றை எவ்வாறு நீக்கமுடியும்? என்பவற்றுக்கான கையேடுபோல அந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளதாக அறியக்கூடியதாக இருக்கிறது.

வாசிப்பை பொதுவாக இரண்டு வகையாகப் பார்க்கலாம். ஒன்று, மேலெழுந்தவாரியான அல்லது மேலோட்டமான வாசிப்பு. இரண்டு, கவனக்குவிப்புடனான வாசிப்பு. பொதுவாக செய்திக் குறிப்புக்களை, தகவல்களை, சாதாரண கதைப் புத்தகங்களை மேலோட்டமான வாசிப்புக்குள் வகைப்படுத்தலாம். அறிவியல்சார் படைப்புக்களையும், ஆக்கப்படைப்புக்களான கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், நாவல்கள், போன்றவைகளையும் கவனக்குவிப்புடனான ஆழ்ந்த வாசனைக்குள் சேர்த்துக்கொள்ளலாம்.

### *எதற்காக வாசிப்பது?*

"பொழுதுபோவதற்காக வாசிப்பது ஒருவிதம். அறிவையும், அனுபவத்தையும், ஆளுமையையும் வளர்த்துக்கொள்ள வாசிப்பது இன்னொரு விதம். வாசிப்பின் குறிக்கோள்தான் எதை வாசிக்கிறோம் என்பதைத் தீர்மானிக்கிறது" என்கிறார் ஓர் எழுத்தாளர்.

மேலும், கற்றுக்கொள்வதற்கு பொதுவான இரண்டு வழிகளுள்; ஒன்று, சுயமாகக் கற்றுக்கொள்வது. இரண்டு, ஆசிரியர் வழியாகக் கற்றுக்கொள்வது என்றும் மேற்சொன்ன எழுத்தாளர் குறிப்பிடுகிறார். இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டதாயினும் சுயமாக ஒன்றைக் கற்றுக்கொள்வதுதான் வாசிப்பின் முதல் செயலாகும். ஒவ்வொரு நூலும் ஓர் அரூப ஆசிரியன். அதில் குரல் மட்டும் ஒலிக்கும் ஆளைக் காணமுடியாது. அவ்வகையில் ஒவ்வொரு நல்ல நூலும் ஓர் ஆசிரியனே, அதாவது உருவம் இல்லாத நல் ஆசிரியனே!

நிறைவாக, பெட்ரண்ட் ரஸ்சல், 'இங்கே ஒரு புத்தகம் உறங்குகிறது' எனத் தன் கல்லறையில் எழுதும்படியாக கூறிச்சென்றார். நம்மில் சிலருக்கு கல்லறையில் ஏதாவது எழுதவேண்டி ஏற்பட்டால்: 'எந்த ஒரு சீரியலையும் விட்டுவிடாமல் மெய் வருத்தம் பாராது, பசி நோக்காது, கண் துஞ்சாது பார்த்து - இளைத்து - களைத்து - சலித்துப்போன ஒரு சீவன் - சீதேவி உறங்குகிறது!' என குறித்து விடலாம்போல் தோன்றுகிறது.

(கருத்துக்களுக்கும் விமர்சனங்களுக்கும்
anpuomi1970@gmail.com)!


## மன்னா
## சந்தாதாரர் கவனத்திற்கு!

மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவை செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள்.

உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

சந்தாவைப் புதுப்பிக்காதவர்களுக்கு பத்திரிகை அனுப்புவதை நிறுத்திவிடவேண்டிய இக்கட்டான நிலையில் உள்ளோம் என்பதையும் மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

- மன்னா நிர்வாகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு ஆண்டு – சிறப்புக் கட்டுரை

# பழைய ஏற்பாட்டில் இறையழைத்தல்

*அருட்சகோதரி இ. யோகா (scjm)*

## முன்னுரை

இறைசாயலாகவும் பாவனையாகவும் படைக்கப்பட்ட (தொ.நூ 1:7) மனிதன், ஒரு சமூகமாக வாழப் (தொ.நூ 2: 22-24) படைக்கப்பட்டுள்ளான். சமூகத்தில் வாழும் மனிதன், திருமணத்திலோ அல்லது இறைபணிக்காகவோ தன்னை அர்ப்பணித்து வாழும் ஏதோ ஒரு நிலையில் வாழ அழைக்கப்படுகிறான். இன்றைய சமூக வாழ்க்கை முறைமைகளுக்கமைய, மூவித நிலைப்பாட்டில் வாழ மனுக்குலம் நிர்ணயிக்கப்பட்டிருப்பதை நாம் அவதானிக்கலாம். அவையாவன: **இல்லற வாழ்வு, துறவற வாழ்வு, தனியாளாக வாழ்தல்**

இங்கு திருச்சபையினால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் ஏழு அருளடையாளங்களில், மக்கள் பணிக்காக அல்லது சேவைக்கென இரு அருளடையாளங்கள் முன்னிலைப்படுத்தப்படுகின்றன. திருமணம், குருத்துவம் / துறவறம் ஆகிய இரண்டும் அருளடையாளங்களாக அடையாளப்படுத்தப்படுகின்றன. இவ்விரு வாழ்க்கை முறைகளும் இறைவனுடைய அழைத்தல்களே.

இறைவனுடைய மீட்புப் பணியினைத் தொடர்ந்தாற்ற, அவரது அன்பைப் பகிர இறைவன் எமக்குத் தரும் உன்னத அழைப்பு இவை. இதில் இறைவனுக்காக மக்களை வழிநடத்தும் பணிக்கு இறைவன் விடுக்கும் அழைப்பு இறையழைத்தல் எனப்படுகிறது. இத்தேவ அழைத்தலுக்கு (குருத்துவம் /துறவறம்) தொன்றுதொட்டு இன்றுவரை பலர் தம் வாழ்வை அர்ப்பணித்திருக்கின்றனர். இவர்களது வாழ்வும் பணியும் இன்றைய இயந்திர - நவநாகரீக உலகில் வாழும் இளைஞர் யுவதிகளுக்கு சவால் நிறைந்ததாகும். திருத்தந்தை பிரான்ஸ் அவர்களினால் இந்த ஆண்டு அர்ப்பண வாழ்வு ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் பழைய ஏற்பாட்டில் தேவ அழைத்தல் (அர்ப்பண வாழ்வு) எவ்வாறு இருந்தது என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

## ஆபிரகாம்

இறையன்பிலிருந்து பிரிந்துபோன மனுக்குலத்தை மீளவும் தனதன்பினில் இணைத்துக்கொள்ள விரும்பிய இறைவன், ஒரு மீட்புத்திட்டத்தை வரைகிறார். அந்த மீட்புத்திட்டத்தை முனெடுக்க அஞ்ஞானியான ஆபிரகாம் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இறைவன் அழைத்தபோது, பலதெய்வ வழிபாட்டாளரான ஆபிரகாம், தனக்குரிய அனைத்தையும் விட்டுவிட்டு இறையழைத்தலுக்கு நேர்மறையாகப் பதிலளித்தார். “உன் நாட்டிலிருந்தும், உன் இனத்தவரிடமிருந்தும், உன் தந்தை வீட்டிலிருந்தும் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் நாட்டிற்குச் செல்” (தொ.நூ 12:1) என்ற ஆண்டவரின் இந்த அழைத்தலுக்கு ஆபிரகாம் மறுப்புக்கூறவில்லை. மாறாக ஆண்டவர் கூறியபடியே புறப்பட்டுப்போனார் (தொ.நூ 12:4). பின்னர் தன் வாழ்நாளெல்லாம் ஆண்டவர் கூறியபடியே வாழ்ந்து என்றும் வாழும் இறைவனின் ஆசீரைப் பெற்றுக்கொள்கின்றார் (தொ.நூ 12:2-3). ஆண்டவர் அழைத்தார், ஆபிரகாம் பணிவோடு பதிலளித்தார். இறைவன் அழைத்ததைத் தன் வாழ்வாகக் கொண்டு, அழைத்த இறைவனில் முழு விசுவாசத்தையும் நம்பிக்கையையும் வைத்துப் புறப்பட்டுப்போனார். அவர் தமது 75வது வயதில் இறையழைத்தலைப் பெறுகிறார். தனது வயது, காலம், இடம் என்பவற்றை எண்ணி வருந்தாமல் யாவேயின் அழைத்தலுக்குப் பணிகிறார்.


ஆகவே, இறையழைப்பை அன்று ஏற்ற ஆபிரகாமை இன்று நாம் விசுவாசத்தின் தந்தை, குலமுதுவர்களில் மூத்தவர், இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட இனத்தின் தந்தை, மூவினத்தின் (யூதர், இஸ்லாமியர், கிறிஸ்தவர்) தந்தை எனப் போற்றுகிறோம்.

## மோசே

எகிப்திய அடிமைத்தனத்திலிருந்த எபிரேயரை, ஆபிரகாமுக்குத் தாம் வாக்களித்த நாட்டிற்கு அழைத்துச் செல்லவென இறைவன் மோசேயை அழைக்கிறார் (வி.ப 3:8-10). எகிப்திலிருந்து பார்வோனுக்கு அஞ்சி ஓடிவந்தபின், பல ஆண்டுகள் மோசே முதிர்ச்சியடையுமட்டும் இறைவன் காத்திருந்து அவரை அழைக்கின்றார். மோசே ஒரு குடும்பத்தின் தலைவனாகியபோது, (வி.ப 2:21-22) தனது மாமன் யெத்திரோவின் மந்தைகளை மேய்த்துக்கொண்டிருக்கையில் (வி.ப 3:1), இறைவன் மோசேயை தனது பணிக்கென அழைக்கிறார். மோசே தனியாக ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கின்றவேளை இறைவனால் அழைக்கப்படுகின்றார்.

அன்றொரு நாள் எகிப்தில் தன்னினம் படும் வேதனைகளைக் கண்டார். தன் இனம் கொடுமைப்படுத்தப்படுவதைக் கண்டு கொதித்து, எகிப்தியனைக் கொலைசெய்த மோசே (வி.ப 3:11-15) இன்று மிதியானில், பெண்கொண்டு அமைதியாக வாழ்ந்துகொண்டிருக்கின்றார். எகிப்தை, தன் இனத்தை மறந்துவிடுகிறார். மிதியானில் தன் மனைவி பிள்ளை, தன் மந்தை என வாழ்ந்துவிட நினைக்கின்றார். ஆனால் இறைவனின் திட்டம் வேறு. ஆபிரகாம் மூலம் தான் தேர்ந்துகொண்ட இனத்தை மீட்க, எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து இஸ்ராயல் மக்களை விடுவித்து, செழிப்பான கானான் தேசத்திற்குக் கொண்டுவர இறைவன் சித்தமானார். இஸ்ராயேலரை எகிப்தினின்று வெளியேற்ற பொருத்தமான மனிதராக இறைவன் மோசேயைக் கண்டார் (வி.ப 3:10). மோசே பார்வோனின் தண்டனைக்குப் பயந்தவராய், தான் தகுதியற்றவர், திக்கு வாயன் என இறைவனிடம் கூறி (வி.ப 3:11) தப்பிக்க நினைக்கின்றார்.

இறைவன் தன் பணிக்கு தகுதியானவர்களை அல்ல மாறாக தகுதியற்ற மனிதரைத் தெரிந்தெடுத்து அவர்களைத் தயார்ப்படுத்தி, தைரியமூட்டி தன் பணிக்கு தகுதியாளர்களாக



மாற்றுகிறார். “நான் உன்னோடு இருக்கிறேன்” (வி.ப 3:12) என்பதே ஒவ்வொரு முறையும் இறைவன் தன் பணியாளருக்குக் கொடுக்கும் தைரிய மொழி. இறைவன் அழைத்த நிமிடம்முதல் இறுதிவரை அழைக்கப்பட்டவரை முழுமையாக ஆட்கொண்டு அவருடன் இறுதிமட்டும் இருப்பதாக ஆண்டவர் தரும் அருள்வாக்கு, உறுதிமொழி இது (லூக் 1:28, மத் 28: 20, யோசு 1:5, நீதி 6:12).

ஆக, மோசே இறைவனின் பணியைச் செய்ய இறைவனால் அழைக்கப்படுகிறார். இறைவனின் வல்லமையால், எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து இஸ்ராயேல் மக்களை இறை வல்லமையோடு விடுவிக்கின்றார்.

## சாமுவேல்

எப்ராயிமில் இறமதாயிம் ஊரைச் சேர்ந்த, எல்கானா ஹன்னா தம்பதியரின் (1சாமு 1:1) தவப்புதல்வன் சாமுவேல். பிள்ளைபேறற்றிருந்து பல துன்பங்களை, அவமானங்களை, வேதனையை அனுபவித்த ஹன்னா, தவமிருந்து பெற்ற ஒரே பிள்ளை சாமுவேல். ஹன்னா தனது வாக்குத்தவறாமல் குழந்தையை யாவேக்கென குரு ஏலியுடன் யாவேயின் இல்லத்தில் விட்டுவிட்டார்.

சிறுவன் சாமுவேல், பெற்ற அழைப்பு வித்தியாசமானது. சிறுவனாயிருந்தபோது யாவே இறைவனால் சாமுவேல் அழைக்கப்படுகிறார் (1சாமு 3:10). யாவே சாமுவேலைத் தனிப்பட்டமுறையில் அழைக்கிறார். இறைவன் மூன்று முறை அழைத்தபோது சிறுவனான சாமுவேல் புரிந்துகொள்ளவில்லை. ஆகையால், குருவாயிருந்த ஏலி சிறுவனை வழிநடத்துகிறார். யாவே சிறுவனைத் தன் பணிக்கென அழைக்கின்றார் என (1சாமு 3:8) ஏலிக்குப் புரிந்தது. **குரு ஏலி சிறுவனின் இறையழைத்தலுக்கு உதவுகின்றார்.**

சிறுவனாயிருந்த சாமுவேல் யாவேயின் அழைப்பைப் புரிந்துகொள்ளாமல் இருந்த தருணம் ஏலியின் வழிகாட்டுதலின்படி இறைவனின் அழைத்தலுக்கு, “இதோ அடியேன் பேசும்” என பதிலளிக்கின்றார். ஆண்டவர் அழைக்கின்றார், அந்த அழைப்பைப் புரிந்துகொள்ளாதபோது, அதைப் புரிந்துகொண்டவர் அழைக்கப்பட்டவரை சரியான வழியில் வழிநடத்த உதவுவது எத்துணை அவசியமாகிறது.

சில தருணங்களில் தேவ அழைத்தலை அறியாதோருக்கு பெரியோர் சரியான முறையில் வழிகாட்டுதல் மிகவும் இன்றியமையாதது. குரு ஏலி தனது பிள்ளைகள் (1சாமு 2:22-25) தகுதியற்றவர்களானபோது, இறைவன் தான் விரும்பி அழைப்பவரை - சிறுவன் சாமுவேலை வழிநடத்துகின்றார். இறைவனின் அழைப்பிற்குப் பதில் கொடுக்கும்படி சிறுவனை ஆயத்தப்படுத்துகிறார்.

ஆக, இறையழைத்தலை சிறுவயதிலேயே சாமுவேல் மிகவும் தனிப்பட்ட முறையில் யாவேயிடமிருந்து பெற்றுக்கொள்கின்றார். இதை இறைபணியாற்றும் பலர் எமது சொந்த வாழ்வில் அனுபவரீதியாக உணர்ந்திருக்கின்றோம். இச்சிறுவன் சாமுவேல், பின்னர் மிகப்பெரிய நீதித்தலைவராகவும் இஸ்ராயேலரின் முதல் அரசன் சவுலையும் யாவேயின் விருப்புக்குரிய தாவீதையும் அரசனாக அபிஷேகம் செய்யும் இறுதி நீதித்தலைவராகவும் விளங்குகின்றார்.

**அழைத்தல் வாழ்விற்கு பிள்ளைகளை பெற்றோர், பெரியோர் சரியான முறையில் பாரபட்சமின்றி வழிநடத்துவது மிக அவசியமாகிறது.**

## எசாயா

வரையறைக்குட்பட்ட அல்லது எழுத்து வடிவம்பெற்ற பெரிய இறைவாக்கினர் எனப் போற்றப்படும் எசாயா இறைவாக்கினர் இறைவனால் அழைக்கப்படுவது மிகவும் அற்புதமானது. ஏறக்குறைய கி.மு 740வது ஆண்டில், இஸ்ராயேலரின் அரசன் ஊசியா இறந்தபின், எசாயா யாவேயின் ஆலயத்தில் வாக்குறுதிப் பேழையின்முன் இருக்கிறார். அல்லது தான் யாவேயின் பிரசன்னத்தில் இருப்பதாக எசாயா காட்சி காண்கிறார். அங்கு யாவே அரியணையில் வீற்றிருக்க (எசா 6:1) அவரது தொங்கலாடை ஆலயம் முழுவதையும் நிரப்பி வானதூதர்கள் சூழ (எசா 6:2) இறைவல்லமை நிறைந்த ஒரு சூழலாகக் காணப்படுகிறது.

இறைவனின் பிரசன்னத்தில் தனது தகுதியின்மையை எசாயா உணர்கிறார் (எசா 6:5). எசாயா அழைப்புப்பெற்ற காலமானது ஆண்டவருடைய மக்கள் மத்தியிலே அரசியல் அச்சுறுத்தல் நிறைந்த காலமாக இருந்தது. வட அரசு (இஸ்ராயேல்) அழிந்து, சமாரியா அடிமைப்படுத்தப்பட்டு, யூதேயா தனிமைப்படுத்தப்படிருந்த காலம். வடக்கில் அசிரியாவினாலும் தெற்கில் எகிப்தினாலும் யூதேயா அச்சுறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த காலம். இந்தச் சூழ்நிலையில்தான் ஆண்டவர் தான் தேர்ந்தெடுத்த மக்கள் மனந்திரும்பி யாவேயுடன் செய்துகொண்ட உடன்படிக்கைக்கு பிரமாணிக்கமாக வாழும்படி நினைவுபடுத்த அரசன் ஊசியாவின் மரணத்தின்பின் ஒருவரை யூதேயா மக்களிடையே அனுப்பவேண்டிய தேவை இருந்தது. அப்பணியை நிறைவேற்ற யாரை அனுப்புவது என ஏங்கிக்கொண்டிருந்த யாவேயிடம் (எசா 6:8) **‘இதோ! நானிருக்கிறேன், என்னை அனுப்பும்’** என எசாயா தன்னை அர்ப்பணிக்கிறார். தான் இறைபிரசன்னத்தில் தகுதியற்றவன் என எசாயா உணர்ந்தபோது (எசா 6:5) அவரை இறைவன் தூய்மைப்படுத்துகிறார் (எசா 6:6). எசாயா செய்யவேண்டியது என்ன என்பதை அவருக்கு அறிவுறுத்தி (எசா 6:9-13) தம் மக்களிடையே யாவே இறைவன் அனுப்பிவைக்கிறார்.

இறைவனுடைய வல்லமையால் தூய்மைப்படுத்தப்பட்ட எசாயா, இறைவனுடைய வார்த்தையை அவர்தம் மக்களுக்கு எடுத்துச்செல்கிறார். இறைவனுடைய செய்தியை யூதேயா நாட்டில் அறிவிக்கின்றார். மனம்மாறி யாவேயிடம் திரும்பும்படி பணிக்கின்றார். இறைவன் கூறியபடியே யூதேயா அழிவுறும். ஆகவே மனம்மாறுங்கள் என அறிவுறுத்திய மாபெரும் இறைவாக்கினராக இன்றும் போற்றப்படுகின்றார்.

## எரேமியா

இறைவன் தன் பணிக்கென, இஸ்ராயேல் மக்களிடையேயிருந்து தேர்ந்தெடுத்த இன்னுமொருவர்தான் எரேமியா. யூதேயாவில் எசாயா இறைவாக்குரைத்து ஏறத்தாள 60 வருடங்களுக்குப்பின், கி.மு 640ல் ஜோசியா அரசனாகி யாவேயின்மீது விசுவாசம் மீண்டும் துளிர்விட்ட காலமது. சட்டநூல் கண்டுபிடிக்கப்பட்டு ஜோசியா சமய மறுமலர்ச்சியை (2அர 22) கொண்டுவந்த காலத்திற்குச் சில வருடங்களுக்குமுன் எரேமியா இறைவனால் அழைக்கப்படுகின்றார்.

எரேமியா அழைக்கப்பட்டது வெறுமனே இறைவனுடைய வார்த்தைகளைப் போதிக்க மட்டுமல்ல, மாறாக, பிடுங்கவும், தகர்க்கவும், கட்டவும், நடவும் (எரே 1:10) அழைக்கப்படுகின்றார். எரேமியா தனது தாயின் வயிற்றில் கருவாகுமுன்பே (எரே 1:5) யாவே அவரை அழைத்திருக்கின்றார். ஆகவேதான் ‘ஐயோ! நான் சிறுபிள்ளை’ (எரே 1:6) என மறுத்தபோது, இறைவன் சொல்கின்றார், ‘நீ சிறுபிள்ளை எனச் சொல்லாதே’ (எரே 1:7) ஏனெனில் நீ உருவாகுமுன்பே உன்னை நான் அறிவேன். நான் உன்னை அனுப்பப்போவது பெரியதொரு காரியத்தைச் செய்வதற்கு. நான் சொல்வதைதெல்லாம், நீ என் மக்களிடம் சொல்லவும் செய்யவும் போகின்றாய் என்கிறார் (எரே1:7).

சமூக, அரசியல் சூழ்நிலையைக் கண்டு அஞ்சிய எரேமியாவை ‘அஞ்சாதே! நான் உன்னோடு இருக்கிறேன்’ (எரே 1:8) என இறைவன் தைரியப்படுத்தி அனுப்புகின்றார். இறைவன் தனது வார்த்தையை எரேமியாவின் வாயில் (எரே 1:9) வைத்து, உனக்கு நான் சகல அரசின்மீதும், நாடுகளின்மீதும் அதிகாரத்தைத் தருகிறேன் **‘பிடுங்கவும், தகர்க்கவும், அழிக்கவும், கவிழ்க்கவும், கட்டவும், நடவும் இன்று நான் உன்னை மக்களினங்கள்மேலும் அரசுகள்மேலும் பொறுப்பாளனாக ஏற்படுத்தியுள்ளேன்’** (எரே 1:10) என மாபெரும் பணியைக் கொடுத்து, தைரியமூட்டி எரேமியாவை அனுப்பிவைத்தார் இறைவன். எரேமியாவும் இறைவல்லமையால் இறைவன் பணித்த சகலதையும் செய்து இன்று பெரிய இறைவாக்கினருள் ஒருவராகப் போற்றப்படுகிறார்.

## எசேக்கியேல்

இவர்களைப்போலவே எசேக்கியேல் இறைவாக்கினரும், இறைவனால் தேவ அழைத்தலைப் பெற்றுக்கொள்கின்றார். யூதாவின் அழிவிற்குச் சில காலங்களுக்கு முன்னர் ஆண்டவரின் மக்கள் மத்தியில் இறைவாக்குரைக்க அழைக்கப்படுகின்றார்.

குருவாகப் பணிபுரிந்திருக்கக்கூடிய (எசே 1:3) பூசி என்பவரது மகனான எசேக்கியேல் கல்தேயருடைய நாட்டில் கேபார் ஆற்றங்கரையிலிருக்கும்போது (எசே 1:3) ஒரு நீண்ட தெய்வீகக் காட்சியைக் காண்கின்றார். இக்காட்சியில் யாவேயின் மகிமையைக் (எசே 1:4-28) காணும் எசேக்கியேலை இறைவன் நாடுகடத்தப்பட்டிருக்கும் தன் மக்களிடையே இறைவார்த்தையைக் கூற (எசே 2:1) ‘மானிட மகனே எழுந்திரு, நான் உன்னோடு பேசப்போகிறேன்’ என அழைக்கின்றார். அன்னியரால் நாடுகடத்தப்பட்டு, அன்னிய தேசத்தில் சொந்த வீடின்றி சொந்த ஆலயமின்றி, எதிர்காலமே கேள்விக்குறியாகி நின்ற இஸ்ராயேலரிடம், அதேவேளை இறைவனுக்கு எதிராக குற்றம்புரிந்து, யாவேயை மறந்து, கடின உள்ளத்தினரான (எசே 2:3-8) ஆபிரகாமின் மக்களிடம் தனது வார்த்தையை அல்லது செய்தியைப் பயமின்றி (எசே 2:6) எடுத்துரைக்க அழைக்கின்றார். தனது வார்த்தைகளை, இஸ்ராயேலருக்குச் சொல்லப்பட வேண்டிய செய்தியை, ஏட்டுச்சுருளாக சுவைக்கும்படி இறைவன் எசேக்கியேலிடம் கொடுக்கின்றார் (எசே 3:1).

எசேக்கியேலின் காலத்தில் மட்டுமல்ல மாறாக ஒவ்வொரு இறைவாக்கினர் காலத்திலும் இஸ்ரவேலர் யாவேயை மறந்து வாழ்ந்ததுண்டு. எசேக்கியேலின் பணிக்காலமானது, இறுதிக்காலம்போல் காண்பிக்கப்படுகின்றது. இந்த மக்கள் மிகவும் முரண்டுபண்ணுபவர்கள் (எசே 2:3), அவர்கள் நடுவில் தான் செய்யப்போவதை முன்னறிவிக்கவென எசேக்கியேல் அழைக்கப்படுகின்றார்.

ஆக இறைவாக்கினர் எசேக்கியேலும் இஸ்ராயேலர் எத்தனை கடின உள்ளத்தினராயிருப்பினும் இறைவனுடைய அழைத்தலை ஏற்று, புதுப்படைப்பின், புது உலகின் ஆவியினால் நிரப்பப்பட்டு புத்துயிர் பெறப்போகும் நாளைப்பற்றி இறைவாக்குரைத்து ஆண்டவரின் பணியாளனாக போற்றப்படுகின்றார்.

## ஆமோஸ்

பழைய ஏற்பாட்டில், சமூக நீதியின் இறைவாக்கினர் என அழைக்கப்படும் ஆமோஸ், இறைவனால் திடீரென அழைக்கப்படுகிறார். கி.மு ஏறத்தாள 8ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பலஸ்தீனத்தின் வட அரசான இஸ்ராயேல் செல்வம் கொழிக்கும் நாடாகத் திகழ்ந்தது. சிறுபான்மை செல்வந்தர் மேலும் செல்வந்தராக பெரும்பான்மையினரான ஏழைகள் மிக மோசமாக (ஆமோ 2:6-8) வறுமையின் பிடிக்குள் அகப்பட்டனர். இச்செயலானது, யாவேக்கு வெறுப்பூட்டும் செயலாயிருந்தது.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியச் சாளரம்

# கவிதைக் களம்

## முதியோர் நலங்காப்போம்

- காலபூஷணம் மன்னார் மணி

முதியோர் நலங்காப்போம்
மதியுரை கேட்டு நல்வழி நடப்போம்
புதியதோர் உலகம் படைப்போம்
புதுமைகள் பல செய்திடுவோம்

குருத்தோலையும் ஒருநாள்
காவோலையாகுமென்ற
கருதுகோளைக் கருத்திற்கொண்டு
குவலயத்தில் வாழ்ந்திடுவோம்

மூத்தோரைப் பணிந்திடுவோம்
மூதுரைதனை செவிமெடுப்போம்
நித்தமும் அவர்நலங் காத்து
நீசநிலை நீக்கிடுவோம்

பெரியோர்க்கு மதிப்பளிப்போம்
பெருமைதனை விட்டொழிப்போம்
மரியாதை அவர்க்களித்து
மகேசனை வணங்கிடுவோம்

முதியோர் நலம் பேணும் நிலையமாக
நம் இல்லங்கள் மாறவேண்டும்
முதியோர் இல்லங்களை விடுத்து
நம் இல்லமதில் அவர் நலம் காத்திடுவோம்

நாட்டின் சொத்து முதியோரே
நலங்காத்து வாழ்ந்திடுவோம்
வீட்டிலும் அவர்தான் சொத்தெனில்
வேதனை யாவும் விலகிடுமே

கூட்டுக் குடும்ப முறைமையை
மீண்டும் உருவாக்குவோம்
நாட்டமைதிக்கு அது தேவை என்பதை
நயமுடன் அறிவோம் நாளும்

அனுபவ முதிர்ச்சியுடையார்
அவர்தம் அறிவுரை கேட்டு
அவனியில் வாழ்ந்திட்டால்
அவலங்கள் நீங்கிடுமே

விதியொன்று செய்திடுவோம்
வேதனைகள் நீக்கிடுவோம்
முதியோர்தம் தேவையறிந்து
கண் கலங்காது காத்திடுவோம்

## நிம்மதியைக் கண்டுகொண்டேன்!

- ச. லூத்மேரி, கரிசல்

தேடிப்பார்த்தேன் எங்கே நிம்மதி என
மனம் வாடிப்போனேன்
அது எங்குதான் உள்ளதோ என!

ஈரைந்து மாதங்கள் பாரைக்காணாது
தாயின் கருவறைச் சிறையில்
நான் நிம்மதி இழந்தேன்

சிகரம் தொட வேணுமென்றால்
அகர முதல எழுத்துக்களை
தவறாது சொல்ல வேணுமாம்
ஆரம்பப் பள்ளியிலும்
நான் நிம்மதி இழந்தேன்

பத்தோடு பதினொன்றாய்
என் வயதும் ஏறிவிட
அத்தோடு மாறியது என் கல்வி
இடைநிலைப்பள்ளி எனச்சொல்லி
அங்கேயும் நான் நிம்மதி இழந்தேன்

மூவைந்து வயது கடந்துவிட
என் நாவடங்கிப்போனது
சாதாரண தரம் என்ற
அசாதாரண நிலை எண்ணி
அங்கேயும் நான் நிம்மதி இழந்தேன்

எண்கணிதப் பரீட்சையும் எழுதிவிட
நான் எண்ணியபடியே
தேர்ச்சியும் பெற்றுவிட
உயர்தரக் கல்வியும் கற்றுவர
சிரமம் கொண்டது மனது
அங்கேயும் நான் நிம்மதி இழந்தேன்

காலங்கள் உருண்டோட
வருடங்கள் விரைந்தோட
இன்னும் சொற்ப நாளில்
பரீட்சை என்று
என் அப்பாவும் சொல்லிவிட
அப்போதும் நான் நிம்மதி இழந்தேன்

உயர்தரப் பரீட்சையின்
முடிவுகள் வெளிவர
தேர்ச்சி பெற்றதாய்
நானும் சொல்லிவிட
பல்கலைகற்றிட
என் பெறுபேறு தயங்கிட
அப்போதும் நான் நிம்மதி இழந்தேன்

இரண்டாம் முறையாய் கல்விகற்றிட
முரண்டு பிடித்தது என் மனம்
இருந்தும் நான் தொடர்ந்து படித்திட
அப்போதும் நான் நிம்மதி இழந்தேன்

வெட்டியாய் வீட்டிலிருந்து சட்டி
பானை துலக்கிய நான்
சட்டென நிமிர்ந்தேன்
சிட்டெனப் பறந்தேன்
பல்கலைப் பட்டம் இன்றியே
வேலைபெறத் திட்டமும் தீட்டினேன்
அப்போதும் நான் நிம்மதி இழந்தேன்

வேலையும் கிடைத்துவிட
விலைவாசி ஏறிவிட
கால்வாசி கூலிபெற
விடுமுறையும் குறைவு என
அங்கேயும் நான் நிம்மதி இழந்தேன்

ஆண்டுகளும் கரைந்தோட நாம்
மாண்டு போகும்முன்
எம் கண்கள் கண்டுகொள்ளணும்
உன் திருமண வாழ்வு என
எனை வேண்டுகிற பெற்றோரை
எண்ணி நான் நிம்மதி இழந்தேன்

பாரின் தவறுகள் தெரியாமல்
என் தாயின் உணர்வுகள் மதியாமல்
நான் தவறாகச் சொல்லிவிட்டேன்
அறியாமல் பிழை செய்துவிட்டேன்

தாயின் கருவறை என்பது
வரையறை இல்லாத
அன்பு வாழும் உறைவிடம்.
எங்குதான் நிம்மதியோ எனத்
தேடிய நான்
இங்குதான் என் நிம்மதி உள்ளதென
உணர்ந்துகொண்டேன்!

# கொஞ்சம் சிரிங்க

*ஒருவன்* : எரிகின்ற வீட்டில் ஐந்து பேரை காப்பாத்தினதுக்காகவா உன்னைக் கைது செஞ்சாங்க?
*மற்றவர்* : நா வெளியே தூக்கிப் போட்டவங்க எல்லாம் தீயணைப்பு வீரர்களாம்...!

.........................................

*நோயாளி* : டொக்டர்... ஊர்ல உள்ள எல்லா மெடிக்கல்லயும் தேடி அலஞ்சிட்டேன். நீங்க எழுதிக் கொடுத்த மருந்து எங்கேயும் கிடைக்கல...!
*டொக்டர்* : வாடா வா... பேனா எழுதல்லன்னு கிறுக்கிப் பார்த்த பேப்பர.... நீதான் தூக்கிட்டு போனியா?

.........................................

*நோயாளி* : டொக்டர் நூறு வயசு வரைக்கும் வாழுறதுக்கு என்ன பண்ணனும்?
*டாக்டர்* : இதை நீ என்கிட்ட வர்றதுக்கு முன்னாடி யோசிச்சி இருக்கனும்!

.........................................

*அப்பா* : ஏண்டா அழுகிறா?
*மகன்* : அம்மா அடிச்சிட்டாங்கப்பா!
அப்பா : அம்மாதானே அடிச்சாங்க அழாதடா!
மகன் : உங்களுக்கு பழகிப்போச்சி எனக்கு வலிக்குதுப்பா!
அப்பா: ?

.........................................

*கணவன்* : வரதட்சணைய வாங்கிட்டு கல்யாணம் செஞ்சது என் மனசை உறுத்திக்கிட்டே இருக்குது!
*மனைவி* : அதனாலே?
*கணவன்:* வரதட்சணையே வாங்காம இன்னொரு கல்யாணம் செய்துகிட்டு பிராயச்சித்தம் செய்யப்போறேன்!

.........................................

அண்ணா : டேய்! ராமு இந்த பெரிய யானையில எப்படி ஏறுவாங்க?
தம்பி : தெரியாதே! அண்ணா
அண்ணா : இது தெரியாம இருக்கிறியாடா? நான் சொல்லுறன் கேளு. யானை குட்டியாக இருக்கும்போதே ஏறிடுவாங்க.

*. டிலைக்சினி, குழந்தையேசுபுரம், மன்னார்*

# மன்னா விளம்பரப் பலகை

பிறரின் புகழ்ச்சிக்கும் பழிச்சொல்லுக்கும் செவிசாய்ப்பவன் மகத்தான காரியங்கள் எதையும் செய்ய இயலாது!

நீ சிரித்துப் பார். உன்னை உனக்குப் பிடிக்கும். மற்றவர்களை சிரிக்க வைத்துப்பார், உன்னை எல்லோருக்கும் பிடிக்கும்.

.........................................

சிவப்பு மனிதனுக்கு நிழல் கறுப்புத்தான். கறுப்பு மனிதனுக்கு இரத்தம் சிவப்புத்தான். வண்ணங்களில் அல்ல மனித வாழ்க்கை. *- அ. விலோஜினி, கன்னாட்டி*

கடவுளைத் தன் இதயத்தில் கொண்டிருப்பவன் மட்டுமே பிறரது குற்றங்களை மன்னிக்க முடியும்.

.........................................

நெருப்பைக் கறையான் அரிக்க முடியாததுபோல் நேர்மையாளனைப் பழியும் பாவமும் நெருங்க முடியாது.
*- T. தேவலதா, கட்டையடம்பன், மடுறோட்*

புதையலைக் கண்டவன் அதிஷ்டசாலி. உண்மையைக் கண்டவன் புத்திசாலி.

.........................................

வாழ்க்கை என்பது இயற்கை அளிக்கும் செல்வம். ஆனால் நல்ல வாழ்க்கை என்பது ஞானம் அளிக்கும் செல்வம்.

.........................................

நல்லவனாக நீ இருந்தால் உலகம் உன்னை விரும்பும். வல்லவனாக நீ இருந்தாலே உலகம் உன்னை வணங்கும்.
*- அ. கிளேயறா, மன்னார்*

யாராவது உன்னைத் துன்பப்படுத்தும்போது நீ இன்பப்படு. காரணம் அவன் தனக்குரிய தண்டனையைத் தானே தேடிக்கொள்கின்றான்.

# ஓர் ஆயரின் வகிபாகமும் அவருடைய தெரிவும்

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

### *ஓர் ஆயர் எவ்வாறு நியமிக்கப்படுகின்றார்?*

*ஆயர் நியமனம் திருத்தந்தையிடமிருந்தே வரவேண்டும். இதை, "உச்சத் தலைமைக்குரு (திருத்தந்தை) ஆயர்களைத் தன்னுரிமையுடன் நியமிக்கிறார்; அல்லது முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை உறுதிப்படுத்துகிறார்" (தி.ச. 377 பிரிவு 1) எனச் சட்டம் கூறுகின்றது.*

*ஒரு மறைமாவட்டத்தில் ஆயருக்கான வெற்றிடம் ஏற்படும்போது அம்மறைமாவட்டத்திற்கான ஆயரை நியமிக்கும் நடைமுறை தொடர்பாக திருச்சபைச் சட்டம் பின்வருமாறு விளக்குகிறது:*

*"எப்பொழுதெல்லாம் மறைமாவட்ட ஆயர் அல்லது வாரிசு ஆயர் நியமிக்கப்படவேண்டுமோ அப்பொழுது 'மூவர் பட்டியல்' (A Ternus) எனப்படும் பட்டியல் ஒன்று திருத்தூதரக ஆட்சிப்பீடத்திடம் (Apostolic See) முன்மொழியப்பட வேண்டும். இப்பட்டியலைத் தயாரிப்பதில் திருத்தந்தையின் தூதரின் (Papel Legate) பொறுப்பு பின்வருமாறு அமைகிறது: ஏற்பாடு செய்யப்படவேண்டிய மறைமாவட்டம் சார்ந்திருக்கும் அல்லது ஒரு தொகுதியாக இணைக்கப்பட்டிருக்கும் உயர் மறைமாவட்டத்தின் தலைமை ஆயர், சார்புநிலை ஆயர்கள் மற்றும் ஆயர் பேரவையின் தலைவர் ஆகியவர்களின் கருத்துகளைத் தனித்தனியாக அவர் நாடவேண்டும்; மேலும் ஆலோசகர் குழாம் மற்றும் மறைமாவட்ட பேரவைக் குருக்கள் குழுவின் ஒருசில உறுப்பினர்களையும் அவர் கேட்டறிய வேண்டும். அது நலம் பயக்கும் என அவர் கருதினால், மற்ற மறைமாவட்ட, துறவறத் திருப்பணியாளர்கள் மற்றும் அறிவுநுட்பத்தில் தலைசிறந்த பொதுநிலையினர் ஆகியவர்களின் கருத்துக்களையும் தனித்தனியாகவும், இரகசியமாகவும் அவர் கேட்டறிய வேண்டும். அதன்பின் இக்கருத்துக்களை, தம்முடைய சொந்தக் கருத்துடன், திருத்தூதரக ஆட்சிப்பீடத்திற்கு அவர் அனுப்ப வேண்டும்" (தி.ச. 377 பிரிவு 3).*

*இங்கே 'மூவர் பட்டியல்' என்பது ஆயராக நியமிக்கப்படக்கூடிய தகுதியைக்கொண்ட மூன்று பேருடைய பெயர்களும் அவர்கள் பற்றிய விபரங்களும் ஆகும். திருத்தந்தையின் தூதுவர் "கருத்துக்களைக் கேட்டறியும்" இந்த நடைமுறையை மேலே சொல்லப்பட்ட தரப்பினருடன் நேரடியாகவோ கடிதம் மூலமாகவோ மேற்கொள்வார். "ஆயராக உயர்த்தப்படவேண்டியவரின் தகுதியைப்பற்றிய இறுதி முடிவு திருத்தூதரக ஆட்சிப்பீடத்தைச் சார்ந்தது" (தி.ச.378 பிரிவு 2). திருத்தூதரக ஆட்சிப்பீடத்தின் பரிந்துரையின் அடிப்படையில் திருத்தந்தை புதிய ஆயரை நியமிக்கின்றார்.*

*புதிய ஆயரை நியமிக்கும் நடைமுறைகள் மேற்கூறப்பட்ட அடிப்படையில் எந்தவிதமான அவசரமும் இன்றி நிதானமாக, விவேகமாக இடம்பெறும். எனவே இதற்கு காலவரையறையைக் கூறமுடியாது. இது ஓரிரு வாரங்களிலோ அல்லது ஓரிரு மாதங்களிலோ இடம்பெறக்கூடிய செயற்பாடு அல்ல. மாறாக ஒரு வருடமோ, இரண்டு வருடங்களோ ஏன் அதற்கும் மேற்பட்ட காலங்களாகக்கூட இருக்கலாம்.*

*வத்திக்கானின் பட்டறிவு, சாதுரியம் (Diplomacy), இரகசியம் பேணும் தன்மை போன்றவை உலக அரங்கில் பெயர்போனவை. இந்த விடயங்களில் பல நாடுகள் வத்திக்கானையே பின்பற்றுகின்றன. எனவே ஒரு ஆயர் தெரிவு விடயத்தில் வத்திக்கான் மிகவும் நிதானமாக, நேர்மையாக, உறுதியாக செயற்பட்டு தீர்மானங்களை எடுக்கும் என நிச்சயமாக நம்பலாம்.*

*எனவே இது விடயத்தில் ஊகங்களின் அடிப்படையில் கருத்துக்களை வெளியிடுவது, வதந்திகளைப் பரப்புவது பிறர் அன்புக்கும், கிறிஸ்துவின் மனநிலைக்கும் முரணான செயற்பாடுகளாகவே அமையும்*

### *இறைமக்களின் பங்களிப்பு என்ன?*

*ஒரு புதிய ஆயருக்கான தெரிவு என்பது உலகியல் சார்ந்த தேர்தல்கள் போன்று வாக்களிப்பு முறையில் இடம்பெறுவதல்ல. மாறாக இங்கே இறைசித்தமும், தூய ஆவியானவரின் செயற்பாடுமே முன்னிலைப்படுத்தப்படுகின்றது.*

*மனிதர்கள் என்ற வகையில் திருத்தந்தையின் தூதுவர் பல்வேறு தரப்பினரிடமிருந்து தகுதியான நபர்களைப் பற்றிய தகவல்கள், கருத்துக்கள், ஆலோசனைகள், அபிப்பிராயங்கள் போன்றவற்றைக் கேட்டறிந்தாலும் உண்மையில் தூய ஆவியானவரே ஒரு ஆயர் தெரிவில் செயலாற்றுகின்றார் என்று நாம் விசுவசிக்க வேண்டும்.*

*எடுத்துக்காட்டாக இன்றைய திருச்சபையானது உலகியல் நாட்டங்களுக்குள் அடித்துச்செல்லப்படும் ஆபத்தை எதிர்நோக்கியருந்த நிலையில், புதிய திருத்தந்தையாகத் தெரிவுசெய்யப்பட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எளிமையின் இலக்கணமாக, புதிய - மறுமலர்ச்சியான சிந்தனைகளைக் கொண்டவராக, உலகத் தலைவர்களாலும் சாதாரண மக்கள் அனைவராலும் மதிக்கப்படுகின்றவராக, அன்பு செய்யப்படுகின்றவராக விளங்குகின்றார். இந்தப் புதிய திருந்தந்தையின் தெரிவு தூய ஆவியானவரின் செயற்பாடு என்றே பலரும் நம்புகின்றனர்.*

*எனவே இறைமக்களாகிய நாம் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ள திருகோணமலை மற்றும் யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர்களின் நியமனங்கள் இறைசித்தம் எனவும், தூய ஆவியானவரின் வழிகாட்டல் எனவும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.*

*அதேபோல் மன்னார் மறைமாவட்டத்திற்கும் இன்றைய காலத்திற்கு ஏற்ற பொருத்தமான - தகுதியான ஓர் ஆயரை இறைவன் தரவேண்டும் என்றும் தூய ஆவியானவரின் வல்லமையுள்ள செயலாற்றுகை இந்த நியமனத்தில் நிறைவாக இருக்கவேண்டும் எனவும் உருக்கமாகச் செபிக்க அழைக்கப்படுகின்றோம்.*

*மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை*
*அருட்பணியாளர் தமிழ் நேசன்*
*மன்னா பதிப்பாசிரியர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீத்தாரை நினைக்கும் கார்த்திகை மாதம்

## சிறப்புக் கட்டுரைகள்

## கல்லறைகள் கூறும் உண்மைகள்

ஆக்கம் - பெர்னத்



கார்த்திகை மாதம் என்றாலே கல்லறைத் தோட்டங்கள் எல்லாமே அழகுசெய்யப்படுகின்றன. புதர் மண்டிப்போய்க் கிடந்த கல்லறைகள் எல்லாம் மீண்டும் புதுப்பொலிவுடன் தோற்றம் தருகின்றன. கல்லறைகளைச் சுத்தம்செய்து வெள்ளையடித்தல், கல்லறைகளைச் சந்தித்தல், இறந்தவர்களுக்கான திருப்பலி நிறைவேற்றல், இறந்தவர்களை நினைத்து சிறப்பு அன்னதானம் வழங்கல் ....... இப்படியாக பல்வேறு நிகழ்ச்சிகளால் கார்த்திகை மாதம் முக்கியமானதாக அமைந்துவிடுகின்றது. ஏன் இந்தக் கொண்டாட்டங்கள், ஏன் இந்த ஆர்ப்பரிப்பு? ஏன் நாம் இறந்தவர்களை நினைவுகூர்கின்றோம்? அனைத்து ஆன்மாக்களின் நினைவு தினம் என்றால் என்ன? இது நமக்கு எதைக் கற்றுத்தருகிறது?

மரணம் நிகழாத நாளில்லை. மரணம் நிகழாத வீடில்லை என்றே சொல்ல வேண்டும். இயற்கையாக ஏற்படும் மரணம் முதல் தற்கொலை வரை ஏற்படும் மரணச் செய்திகள் பத்திரிகைகளில் ஒவ்வொரு நாளும் வராமல் இருந்ததில்லை. இதனால்தான் மரணம் என்றதுமே எல்லோருக்கும் இயல்பான ஒரு பயம் ஏற்படுகின்றது. மரணம் என்பது ஓர் எதார்த்தம். மரணத்தை இறப்பு என்றும் சாவு என்றும் செத்துப்போதல் என்றும் குறிப்பிடுவர். மரணமா? அது வேண்டாம்! என்று எண்ணுவோரே அதிகம். காரணம் மரணம் வாழ்வில் மிகப்பெரும் இழப்பை ஏற்படுத்துகிறது.

இருப்பினும் மண்ணில் பிறக்கும் ஒவ்வொரு உயிரும் இறப்பைச் சந்தித்தே ஆக வேண்டும். மரணம் எனக்கு வேண்டாம் என்று தப்பித்துக்கொள்ள முடியாது. மாறாக அனைத்து உயிர்களும், அதிலும் குறிப்பாக ஒவ்வொரு மனிதரும் சந்தித்தே ஆக வேண்டிய வாழ்வின் எதார்த்தம் மரணம்!

கார்த்திகை மாதம் 2ஆம் திகதி அனைத்து ஆன்மாக்களின் நினைவுநாளாக, அதாவது இறந்தோர் தினமாக திருச்சபை சிறப்பித்துவருகிறது. பாமர மக்கள் இதைக் கல்லறைத் திருநாள் என்று அழைக்கின்றனர். எவ்வாறு இவ்விழா வழக்கத்திற்கு வந்தது என்பதைச் சற்றுப் பார்ப்போம்.

தொடக்கத் திருச்சபையின் வாழ்வு மிகவும் போராட்டம் நிறைந்த வாழ்வாக அமைந்திருந்தது. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் உரோமையில் அவ்வப்போது ஏற்பட்ட வேதகலாபனையிலே பலரும் யேசுவுக்குச் சாட்சியாக இறந்தனர். குறிப்பாக திருச்சபையின் இரு தூண்கள் எனப்படும் புனித பேதுரு மற்றும் புனித பவுலின் கல்லறைகள் மக்களிடையே விரும்பிச் சந்திக்கப்பட்ட இடங்களாக மாறின.

காலம் செல்லச் செல்ல மறைசாட்சியாக இறந்த இவர்களின் கல்லறைகளில் கி.பி 3ஆம் நூற்றாண்டிற்குப்பிறகு திருச்சபை உரோமையில் வேரூன்ட ஆரம்பித்த பின்னர் ஒவ்வொரு ஆண்டும் அவர்களின் சாட்சிய வாழ்வை நினைவுகூர்ந்து மக்கள் விழாக்கொண்டாடி அவர்களின் கல்லறைகளைச் சந்தித்து வந்தனர்.

வேதகலாபனையில் மறைசாட்சிகளாக இறந்தவர்களை ஒட்டுமொத்தமாக அடக்கம்செய்யும் பழக்கமும் இருந்தது. திருத்தூதர்களின் கல்லறைகள் போன்றே அவர்களின் கல்லறைத்தோட்டங்கள் காலப்போக்கில் மக்கள் விரும்பிச் சந்திக்கும் இடங்களாகவும் மாறின.

இதற்குச் சிறந்த உதாரணம் திருத்தொண்டராக இருந்து மறைசாட்சியாக மரித்த புனித லோறன்ஸ் என்பவரின் இடத்தில் இன்றும் அவரின் பெயரில் ஆலயம் உள்ளது. அதை ஒட்டிய மிகப்பெரிய கல்லறைத்தோட்டம் இன்றளவும் உள்ளது. மக்கள் ஒவ்வொரு ஆண்டும், சிறப்பான வகையில் இங்கு திருப்பலி நிறைவேற்றி மறைசாட்சிகளாக இறந்தவர்களை நினைவு கூர்கின்றனர். இருப்பினும் இக்கல்லறை விழா உலகத் திருச்சபை அளவில் கொண்டாடப்படும் விழாவாக இருக்கவில்லை.

கி.பி 998இல் புனித ஓதிலோ என்பவர் தன்னுடைய குளுனி சபையினருக்கு இதனை அறிமுகப்படுத்தினார். இவர் குளுனி சபையின் முதல் மடாதிபதியாக இருந்தார். தன்னுடைய துறவற மடத்தில் வாழ்வோர் இறந்தவர்களுக்காகச் சிறப்பான செபங்களைச் செய்ய வேண்டும் என்பதற்காக இவ்விழாவை அறிமுகப்படுத்தினார். 11ஆம் நூற்றாண்டில் இறந்தவர்களுக்காக மன்றாடும் குளுனி சபையினரின் வழக்கம் ஐரோப்பிய நாடுகளிலும், இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும் மிக விரைவாகப் பரவியது. இறந்த ஆன்மாக்களுக்காக மன்றாடும் இவ்விழாவைத் தாய்த் திருச்சபை கி.மு 13ம் நூற்றாண்டில் அனைத்துலகின் விழாவாகக் கொண்டாட அனுமதி வழங்கியது.

"நீ இருக்குமிடத்தில் நானும் இருந்தேன் - நானிருக்குமிடத்தில் நீ இருப்பாய்" இது ஒரு கல்லறையின்மேல் எழுதப்பட்டிருந்த வாக்கியம். "இன்று நான், நாளை நீ" இது மரித்தோர் வாகனத்தின்மீது எழுதப்பட்டிருந்த வாக்கியம். "நாங்கள் உயிர்ப்புக்காகக் காத்திருக்கின்றோம் - நீங்கள் மரணத்திற்காக காத்திருக்கின்றீர்கள்" இது ஒரு கல்லறையின் முகப்பில் எழுதப்பட்டிருந்த வாக்கியம். இந்த வாக்கியங்கள் அனைத்துமே நம்மை அச்சுறுத்துவதற்காக எழுதப்பட்ட வாக்கியங்கள் அல்ல. மாறாக நாம் ஆழ்ந்து சிந்திப்பதற்காகவும் அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ்வதற்காகவுமே.

கார்த்திகை மாதம் மரித்தோரின் மாதமாக கத்தோலிக்க திருச்சபையிலே கொண்டாடப்படுவது நாம் எல்லோரும் அறிந்த ஒன்று. இந்த உலகிலே வாழ்ந்துகொண்டிருப்பவர்களைப்பற்றி மட்டுமல்லாமல், வாழ்ந்து மரித்தவர்களைப்பற்றியும் அதிகமாக சிந்திப்பவர்கள் கிறிஸ்தவர்கள் மட்டும்தான் என்று கூறினால் அது மிகையாகாது.

ஒருமுறை மறைக்கல்வி நடத்திக்கொண்டிருந்த ஆசிரியர் ஒருவர் மாணவர்களிடம், "உண்மையான கிறிஸ்தவன் யார்?" என்று கேட்டார். அப்பொழுது ஒரு மாணவன் எழுந்து நின்று, "மரணத்தைக்கண்டு அஞ்சாதவன் எவனோ அவனே உண்மையான கிறிஸ்தவன்" என்று பதில் கூறினான். மோட்சத்துக்குச் செல்ல எல்லோரும் விரும்புகிறார்கள். ஆனால் இறப்பதற்கு யாரும் விரும்பவில்லை என்ற வாக்கியத்தை நிச்சயம் நாம் பலமுறை கேட்டிருப்போம்.

மரணத்தைப்பற்றிய பயம், அச்சம் மனிதனாகப்பிறந்த அனைவருக்குமே உண்டு. விவிலியத்தைப் பொறுத்தவரையில், நமது ஆதிப்பெற்றோர் செய்த பாவத்தினால்தான், மரணத்தைப்பற்றிய பயம் இந்த உலகத்திலும் மனிதனின் உள்ளத்திலும் நுழைந்தது.

ஒவ்வொரு நாளும் நம்மைப்பார்த்து கேட்கவேண்டிய கேள்வி, "எதற்காக நாம் இறக்க வேண்டும்? என்பதல்ல மாறாக, இறப்பதற்கு நாம் ஏன் பயப்படுகின்றோம்? என்பதுதான். ஏனென்றால் கண்ணதாசன் அழகாகச் சொன்னதுபோன்று "சாவுக்கு எவன் அஞ்சுவதில்லையோ, அவனே வாழ்வுக்குத் தகுதி உள்ளவன், இறந்த விசுவாசிகளைப் பற்றி நினைத்துப்பார்க்கும் இம்மாதத்திலே வாழ்வுக்கு நாம் தகுதி உள்ளவர்களா? என்று சிந்தித்துப் பார்ப்போம். எப்போது மரணத்தைப்பற்றிய பயம் நம்மிலிருந்து நீங்குகிறதோ, அன்றுதான் உண்மையிலே நாம் வாழத்தொடங்குகின்றோம். வாழ்வதற்கு தகுதியுள்ளவர்களாகின்றோம்.

## சாவே உன் கொடுக்கு எங்கே?

பீ கிறிஸ்பி குருஸ், பேசாலை

உயிரின் நிறைவு உயிர்ப்பு. சாவை வென்றவர் கிறிஸ்து ஒருவரே. கிறிஸ்து வழியாக நமக்கு வெற்றியை தந்தவர் கடவுள். "சாவே உன் வெற்றி எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கே? (1கொரி 15: 55).

கடவுள் யேசுவை மரண வேதனையில் நின்று உயிர்த்தெழச் செய்தார். ஏனென்றால் மரணம் அவரைத் தன் பிடியில் வைத்திருக்க முடியவில்லை. யேசுவாக இந்த உலகில் மரித்தார். ஆண்டவரும் மெசியாவுமாக உத்தானமானார். நம் குற்றங்களுக்காகச் சாகுமாறு கடவுள் யேசுவை ஒப்புக்கொடுத்தார். நம்மைத் தமக்கு ஏற்புடையவர்களாகுமாறு அவரை உயிர்த்தெழச் செய்தார். கிறிஸ்து வழியாகவே அனைத்தையும் படைத்த இறைவன் அவருடைய உயிர்த்தெழுதல் மூலமாகவே அனைத்தையும் நமக்கு ஏற்புடமை ஆக்கிக்கொணடார்.

ஒரே ஒரு மனிதனின் கீழ்ப்படியாமையால் பாவம் உலகில் நுழைந்தது. அதன் வழியாக சாவும் வந்தது, தண்டனை வந்தது. ஒரே ஒருவரின் ஏற்புடைய செயலால் அனைவரும் மீட்புப் பெற்றனர். விடுதலை வாழ்வு பெற்றனர். உலகில் நுழைந்த பாவம் அப்படியே இருக்குமானால் நாம் செத்தவர்கள்போலாவோம். "கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும், நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும் (1கொரி 15:14). இது நமது திருமறையின் அடிப்படை விசுவாசம். "இறந்த கிறிஸ்துவை மாட்சிமிகு தந்தை உயிர்த்தெழச் செய்தார்" (உரோ 6:4) ஏனெனில் அவர் சாவின் ஆட்சிக்கு உட்பட்டவரல்ல. "நமக்கு மீட்புக் கிடைத்துவிட்டது எனினும் எதிர்நோக்கும் அளவில்தான் கிடைத்துள்ளது" (உரோ 8:24).

சாவில் தோல்வியையும், நரகத்தின் அழிவையும் சிலுவையில் கொண்டாடி, தனது உயிர்ப்பால் ஆண்டவர் நிலைவாழ்விற்கான பாதையைத் திறந்துவிட்டார். இதனால் அழிவிலிருந்து அழியாமைக்கும், சாவிலிருந்து உயிர்ப்புக்கும் உரிமைப்பேறு உடையவர்களானோம்.

தூய பவுல் இவ்வாறு கூறுகின்றார். "சாவே கடைசிப் பகைவன். அதுவும் அழிக்கப்படும் (1கொரி 15: 26). கடைசிப்பகைவனாக சாவையும் வென்று வெற்றிகொண்டார் யேசு. சாவு மற்றும் பாதாளத்தின்மேல் ஆண்டவருக்கு அதிகாரம் உண்டு. உயிர்த்தெழுந்த ஆண்டவரின் மகிழ்ச்சி வெற்றிதான் நமக்கு அனைத்து சோதனைகளிலும், வேதனைகளிலும் ஊக்கமளிப்பதாக இருக்கிறது என்பதை உய்த்துணர்ந்து வாழ வேண்டும். இயேசுக்கிறிஸ்துவிடம் நம்பிக்கைகொண்டோர் இதே பாதையில்தான் வாழவேண்டும்.

இயேசுவின் உயிர்ப்பு என்பது அலகையை இறைவவன் வெற்றிகொண்ட நாளாகும். "ஒளி இருளில் ஒளிர்ந்தது, இருள் அதன்மேல் வெற்றிகொள்ளவில்லை. "இறந்தேன், ஆயினும் இதோ என்றென்றும் வாழ்கிறேன்" (திவெ 1:18). "இதோ உலகம் முடியும்வரை நான் எந்நாளும் உங்களோடு இருப்பேன்" இந்த வார்த்தைகள் யேசு உயிருடன் வாழ்கிறார் என்ற உண்மையை எடுத்துக்காட்டுகின்றது. இதுதான் கிறிஸ்து வேதத்தின் அடிப்படை உண்மையாகும்.

கிறிஸ்து வேதத்தின் மையக்கருத்து யேசுக்கிறிஸ்து. வேறு அடித்தளம் யாராலும் இடமுடியாது. உயிர்வாழும் கிறிஸ்துவை எதிர்நோக்கி வாழ்வதே கிறிஸ்தவம். கடவுளைக் கண்டவர்கள் யாருமில்லை. ஆயினும் நம்பிக்கையின் அடிப்படையில் கிறிஸ்தவன் வாழ்கின்றான். இதுவே எமது எதிர்நோக்கு.

## கத்தோலிக்க மறையாசிரியர் தேர்வுகள்

தேசிய மறைக்கல்வி நடுநிலையத்தினால் வருடந்தோறும் நடாத்தப்படும் **மறையாசிரியர் தேர்வு, மறையாசிரியர் சிறப்புத் தேர்வு, மறையாசிரியர் கௌரவப்பட்டத் தேர்வு** ஆகிய பரீட்சைகள் இவ்வருடம் **கார்த்திகை 21ம் நாள்** (21-11-2015) நடாத்தப்பட உள்ளன.

இலங்கையின் அனைத்து (12) மறைமாவட்டங்களிலுமுள்ள 40 பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படவுள்ள இத்தேர்வுகளில் மறையாசிரியர் தேர்வு, மறையாசிரியர் சிறப்புத் தேர்வு, மறையாசிரியர் கௌரவபட்டத் தேர்வு ஆகிய மூவித தேர்வுகளுக்கும் தமிழ் பிரிவில் முறையே 546, 372, 289 பேரும் (மொத்தம் 1207) சிங்களப் பிரிவில் முறையே 1,477, 717, 457 பேரும் (மொத்தம் 2,651) எல்லாமாக 3,858 பரீட்சார்த்திகள் இத்தேர்வுகளுக்குத் தோற்றவுள்ளனர்.

பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்களை பரீட்சார்த்திகள் உரிய காலத்தில் தமது மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனர்கள் வழியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சை அனுமதிப் பத்திரத்தில் நாம் தந்துள்ள அறிவுறுத்தலின்படி பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெறுவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னர் பரீட்சை நிலையத்திற்கு வந்து தமது ஆசனத்தில் அமருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். அடையாள அட்டையையும் மறக்காது கொண்டுவரவும்.

மேலும் **அரசாங்கத்தினால்** இவ்வருடத்திலிருந்து நடாத்தப்பட உள்ள புதிய தேர்வாகிய, **கத்தோலிக்க மறையாசிரியர் சான்றிதழ் தேர்வு, 2015 கார்த்திகை 22, 28, 29** ஆகிய திகதிகளில் நடாத்தப்பட உள்ளன.

**- தேசிய மறைக்கல்வி நிலையம், கொழும்பு -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.160

## ஓசேயா 8 - ஆம் அதிகாரம் முதல் ஒபதியா முடிய

உங்கள் விடைகளை டிசம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | ❖ | | | 09 |
| | 02 | | | | | | | 10 | |
| | | | 11 | 03 | | | | 12 | |
| | | | | | 04 | | | | |
| | 05 | 18 | | | | 06 | | | |
| | | | | | | | 13 | 16 | |
| | | | 14 | 15 | | | | | |
| | | | | | 19 | | | | |
| | 17 | 07 | | | | 20 | | | |
| 08 | | | | | | | | ❖ | 21 |

உங்கள் விடைகளை, *குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 116/3, சென். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார்* என்ற முகவரிக்கு அனுப்பவும்.

### இடமிருந்து வலம்

1. அவன் இவற்றை அறிந்துகொள்ளட்டும் ................. நெறிகள் நேர்மையானவை.
2. என் ................. அவர்களுக்கு எதிராய் எரிகின்றது.
3. .............. மாரியையும் பின்மாரியையும் நிறைவாகத் தந்தருளினார்.
4. ஆண்டவரின் நாள் ................ உள்ளது.
5. ஆயினும் ஆண்டவரே தம் மக்களுக்குப் ..................
6. 'என் மக்களாகிய இஸ்ரயேலரிடம் ...................... இறைவாக்கு உரைத்திடு' என்று அனுப்பினார்.
7. அவர்களுடைய வேர் ................... போயிற்று.
8. உமது ............. வேற்றினத்தார் நடுவில் நிந்தைக்கும் பழிச்சொல்லுக்கும் ஆளாகாதீர்.

### வலமிருந்து இடம்

4. ........................... ஆண்டவருக்கே உரித்தாகும்.
9. அதன் முடிவு கசப்புமிக்க .......................... இருக்கும்.
10. அதன் .............. இப்பொழுது மறைந்துபோயிற்று.
11. 'என் மக்களாகிய இஸ்ரயேலின் ............ வந்துவிட்டது"
12. எரொபவாம் வீட்டாருக்கு எதிராக நான் வாளெடுத்து ................
13. இஸ்ரயேலரோ ......................... வெறுத்துவிட்டார்கள்.

### மேலிருந்து கீழ்

1. உன்னை அறிந்து ........... நானே.
9. ஆண்டவரின் ................. அவர்கள் குடியிருக்க மாட்டார்கள்.
13. உங்கள் தேர்ப்படைகளின்மேலும் வீரர்களின் எண்ணிக்கையின்மேலும் நீங்கள் ............ வைத்தீர்கள்.
14. நான், 'கனிந்த பழங்கள் உள்ள ..............' என்றேன்.
15. வளரும் ........... முற்றுவதில்லை. கோதுமை நன்றாக விளைவதில்லை.
16. நானே அவனுடைய நகர்கள்மேல் ................. அனுப்புவேன்.

### கீழிருந்து மேல்

4. ............... கனியை அறுவடை செய்யுங்கள்.
7. அவர்கள் வேற்றினத்தார் நடுவில் .......... பாத்திரம்போல் இருக்கின்றார்கள்.
8. உன் இதயத்தின் இறுமாப்பு ................... ஏமாற்றிவிட்டது.
17. ஆண்டவரின் வாக்குக் கிடைக்காத ...................... அது.
18. அவர்கள் பாழடைந்த நகர்களைத் திரும்பக் .............. அவற்றில் குடியேறுவார்கள்.
19. கடல்களின் நீரை முகந்தெடுத்து நிலத்தின் ................... பொழிகின்றனர்.
20. அதைக்குறித்து அதன் மக்கள் ............. அடைவார்கள்.
21. அந்த நுகத்தை அகற்றுவார்.............

# விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 158

## சரியான விடைகளை அனுப்பியவர்களில்

பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

**முதலாம் பரிசு:**
கி. ஏஞ்சல் டலிமா,
1ம் வட்டாரம்,
பேசாலை

**இரண்டாம் பரிசு:**
ம. சாள்ஸ் அன்ரனி,
சாம்பன் கட்டைக்காடு,
நானாட்டான்

**மூன்றாம் பரிசு:**
டா. யோசேப்பின்,
பள்ளிமுனை கிழக்கு,
மன்னார்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 78 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 65 பேர்.

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 158ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. எஸ். லக்சாயினி, சின்னப்பண்டிவிரிச்சான், மடு
2. சு. அன்ரனி பொபிக்ஷன், சிலாவத்துறை, மன்னார்
3. ஏ. எம். பிரியதர்சினி, 2ம் வட்டாரம், புங்குடுதீவு
4. அ. இசக்கியேல், ஜோசப்வாஸ்நகர், தோட்டவெளி
5. ஈ. ஏ. ஹெலன் ரோணியா, பள்ளிமுனை கிழக்கு, மன்னார்
6. அ. மடுராஜினி, துள்ளுகுடியிருப்பு, பேசாலை
7. யோ. ஒலின்ரா, கட்டையடம்பன், மடுறோட்
8. எம். அமலதாஸ், பாப்பாமோட்டை, அடம்பன்
9. ஜே. கமிலஸ் விதுஷன், பிடாரிகுளம், முருங்கன்
10. அ. சிந்துஜா, பெற்றா, மன்னார்
11. டெபோறா மோகன்ராஜ், தபால் கந்தோர் வீதி, மன்னார்
12. எம். மாலா, எமில்நகர், மன்னார்
13. அ. அனற் நிவதா, அச்சங்குளம், நானாட்டான்
14. எஸ். என். யூலியானி றோச், பள்ளிமுனை, மன்னார்
15. எஸ். சி. சி. நவரத்தினஜா, செட்டிகுளம்
16. ஆ. மேரி யோசப்பின், வங்காலை
17. யூ. நிசாந்தினி, இல. 131, திருநாவற்குளம், வவுனியா
18. ப. றுஷ்மிதா, ஜீவநகர், முருங்கன்
19. சு. கிருஷாந், சிறுத்தோப்பு, பேசாலை
20. யே. கனிஸ்ற்றா, முருங்கன் பிட்டி, முருங்கன்
21. ஜெ. மரியரிஷான், புனித சவேரியார் ஆலயம், தேவன்பிட்டி
22. ஜே. னைனோ ஜஸ்மீகன், ஆலங்குளம், வட்டக்கண்டல்
23. சி. யுனிஸ்ரா லெம்பேட், ஆனாள் நகர், வங்காலை
24. பே. துசந்திரிக்கா, நறுவிலிக்குளம், வங்காலை
25. ர. மீரா. பள்ளிமுனை கிழக்கு, மன்னார்
26. ஆ. ஆன் திபிஷன் குரூஸ், வங்காலை
27. ஈ. நிஷாந்தினி கூஞ்ஞ, 8ம் வட்டாரம், பேசாலை
28. கொ. நிதர்சனா, காத்தான்குளம், வட்டக்கண்டல்
29. யே. அபிஷேக், கள்ளிகட்டைக்காடு, உயிலங்குளம்
30. கமலா கிறிஸ்தோப்பர், சின்னக்கடை, மன்னார்
31. தேவிகா பத்மராஜா, பெற்றா, மன்னார்
32. ஞா. மேரி ஷாமினி, நெடுங்கண்டல், அடம்பன்
33. ஜெபராக்கினி, சாளம்பன், ஆண்டான்குளம்
34. ம. பிளண்ரீனா, கன்னியர்மட வீதி, மன்னார்
35. ம. நிதர்ஷன், பெற்றா, மன்னார்
36. றே. சிமில்டா, பொன்தீவுகண்டல், முருங்கன்
37. ந. அன்ரன் மயூரன், தவசிகுளம், வவுனியா
38. நி. யாழிசன், செட்டிகுளம்
39. ஞா. வினோதர்சி, முதலைகுத்தி, உயிலங்குளம்
40. அ. கரோளினி கீர்த்திக்கா, திருகோணமலை
41. ஏ. அபி உதயன், புதுக்கமம், உயிலங்குளம்
42. கு. அன்ரனி பவித்திரன், காத்தான்குளம், நானாட்டான்
43. க. மடோனா, சிதம்பரபுரம், வவுனியா
44. அ. ருஷாந்தினி பொன்தீவுகண்டல், முருங்கன்
45. செ. செபமாலை மார்க், 7ம் வட்டாரம், வங்காலை
46. மேசி செல்வநாயகம், முழங்காவில், பூநகரி
47. வ. சியாமளன், மணற்குளம், உயிலங்குளம்
48. ய. றொகான், புனித சவேரியார் ஆலயம், தேவன்பிட்டி
49. செ. ஆன் நியூசிக்கா துரம், தாழ்வுபாடு
50. அ. டிலோஜனா, திருக்குடும்ப கன்னியர் மடம், மன்னார்

# மன்னார் மறைமாவட்டத்திலிருந்து சாலக்குடி டிவைன் தியான இல்லத் தியானத்தில் பங்கெடுத்தோரின் பசுமையான நினைவுகள்

தேசிய கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இலங்கையிலிருந்து இந்திய நாட்டின் கேரளா மாநிலத்தில் உள்ள சாலக்குடிடிவைன் தியான இல்லத்தை நோக்கி இலங்கையின் பல்வேறு மறைமாவட்டங்களில் இருந்து ஏறத்தாள 60ற்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகளும் அருட்தந்தையர்களும் பயணம் செய்தனர்.

மன்னார் மறைமாவட்டத்தில் இருந்து இளைஞர் பணி இயக்குனர் அருட்பணி. நெவின்ஸ் யோகராஜ் மற்றும் அலைக்ஸ் லௌசன், பிறிடா டபரேரா, றொகான், கவிதா, புனிதராஜ் ஆகியோர் செப்ரம்பர் மாதம் 04ஆம் திகதி பயணமாகினர்.

06ஆம் திகதி அன்று இளையோருக்கான தியானம் ஆரம்பமாகியது. இத்தியானமானது தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. தமிழ் மறைமாவட்ட இளைஞர்கள் மொத்தமாக 17பேர் தமிழ்மொழி மூலமான தியானத்தில் பங்குபற்றினர்.


இத்தியானமானது திங்கள் தொடங்கி வெள்ளிவரை காலை 5.45 மணி முதல் இரவு 10.00 மணிவரை நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் திருப்பலியும் நற்கருணைநாதரின் பிரசன்னத்தில் குணமாக்கல் வழிபாடும் நடைபெற்றது. இத்தியானத்தின்போது நாம் சிறுவயதில் இருந்து இளமைப்பருவம் வரை செய்த பாவங்களுக்காக மனம் வருந்தி எல்லோரும் மனநிறைவான நல்ல பாவசங்கீர்த்தனம் செய்துகொண்டோம்.

மேலும் உள ஆற்றுப்படுத்தல் நிகழ்வானது சிறப்பாக அமைந்திருந்தது. இதன் மூலம் வாழ்வின் பல இன்னல்களையும் இடர்களையும் தாண்டி மனச்சுமையோடு வாழ வழிதெரியாமல் இருந்த இளம் உள்ளங்கள் இறைவனின் அளவிடமுடியாத அன்பைச் சுவைத்து மகிழ்ந்தனர்.

ஐந்துநாள் தியானத்தை முடித்துக்கொண்டு மீண்டும் நாம் எம் சகோதர இளையோருடன் சேர்ந்துகொண்டோம். தொடர்ந்து கேரளாவின் முக்கிய வணக்க ஸ்தலங்களாக விளங்கும் 'புனித நகரம்', புனித கொறற்றி தேவாலயம் போன்ற இடங்களைத் தரிசித்தோம். பின்னர் 13ஆம் திகதி அன்று இரவு சாலக்குடி டிவைன் தியான இல்லத்திலிருந்து திருவனந்தபுரம் நோக்கி பயணமாகி 14ஆம் திகதி இரவு 10.00 மணிக்கு இந்தியாவிலிருந்து பிரியாவிடை பெற்றுக்கொண்டோம்.

இத்தியானத்தின் மூலம் நாம் உடல், உள, ஆன்மீக ரீதியாக குணமாக்கல் அனுபவத்தைப் பெற்றுக்கொண்டோம். மேலும் பல புதிய முகங்களின் உறவினால் எமக்குள் நட்புறவுகளைத் தேடிக்கொண்டோம். இவ்வாறன நிகழ்வுகளை எமக்கு ஏற்படுத்தித்தந்த தேசிய ரீதியில் இளைஞர் பணிக்குப் பொறுப்பான ஆயர் மேதகு கிளிற்றஸ் சந்திரசிறி அவர்களுக்கும், தேசிய இயக்குனர் அருட்பணி. ஜிகான் அவர்களுக்கும் மன்னார் மறைமாவட்ட இளைஞர் பணி இயக்குனர் அருட்பணி. நெவின்ஸ் பீரிஸ் அவர்களுக்கும் எமது மன்னார் மறைமாவட்ட நிர்வாகம் சார்பாக நன்றிகளைத் தெரிவித்து நிற்கின்றோம்.

***தகவல் : மன்னார் மறைமாவட்ட இளைஞர் ஒன்றியம்***




### பழைய ஏற்பாட்டில் .....

11ஆம் பக்கத் தொடர்ச்சி

இறைவன் கர்ச்சிக்கின்றார். உடனடியாக யூதா அரசிலுள்ள பெத்லகேமுக்குக்கீழாக உள்ள தெகோவா ஊரில் இருந்த இடையனான ஆமோசை இறைவன் தன் பணிக்காக அழைக்கின்றார் (ஆமோ 7:14).

தென்னரசான யூதாவிலிருந்து, வட அரசு இஸ்ராயேல் நோக்கி ஆமோஸ் தனது மந்தை மேய்க்கும் தொழிலை விட்டுவிட்டு இறைவன் பணித்ததை எடுத்துரைக்கப் புறப்பட்டுப் போனார். எல்லா இறைவாக்கினருக்கும் போலவே ஆமோசுக்கும் எதிர்ப்புக்கள் வந்தன (ஆமோ 7:12), வலிகள் ஏற்பட்டன. தனிமை வாட்டியது. ஆனால் தான் அழைத்த பணியாளர்களை இறைவன் எப்போதும் தவிக்கவிட்டதில்லை. மாறாகக் கூடவே இருந்து தைரியப்படுத்தினார், வழிநடத்தினார். தனது நிலபுலன்கள், மந்தைகளை விட்டுவிட்டு இறைவனது அழைப்பை ஏற்றுப் பணிபுரிந்த ஆமோஸ் சமூக நீதியின் இறைவாக்கினர் என அழைக்கப்படுகின்றார்.

இவ்வாறு பழைய ஏற்பாட்டில், இறையழைத்தலை ஏற்று, தம் வாழ்வை அர்ப்பணித்துப் பணிபுரிந்தோர் ஏராளம். இவர்கள், தன்னலம் பாராது, தமது இனம், சனம், வீடு வாசல், தொழில் துறை அனைத்தையும் விடுத்து இறைவனுக்காக, இறைமக்களின் நலனுக்காக, விண்ணக வாழ்விற்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்து மக்களையும், அரசர்களையும் நல்வழிப்படுத்தி இறைவனின் முன்னிலையில் மாட்சிப்படுத்தப்பட்டோராயினர். காலத்திற்குக் காலம் இறைவன் தன் மக்களை வழிநடத்தவென பலரை அழைக்கின்றார்.

இன்று என்னையும் உங்களையும் அழைக்கின்றார். அவரது அழைத்தல் எமது காதுகளில் விழுகிறதா? இந்த அர்ப்பண ஆண்டில் தேவ அழைத்தல் பெருகவும், இறைவனின் பணியை அவர்தம் மக்களுக்குச் செய்யும் ஆர்வத்தையும் ஆற்றலையும் தர எமது குடும்ப செபமாலைகளில் மன்றாடுவோம்.

# மன்னார் திருமறைக் கலாமன்றம் நடாத்திய கலாசாரப் பேரணியும் கலை நிகழ்வுகளும்

மன்னார் திருமறைக் கலாமன்றம் கடந்த ஒக்ரோபர் மாதம் 17ஆம் திகதி காலாசாரப் பேரணியையும், கலைநிகழ்வுகளையும் நடத்தியது. மாலை 3.30 மணிக்கு மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் இருந்து ஆரம்பமாகிய இந்தக் கலாசாரப் பேரணியானது புனித செபஸ்தியார் பேராலய வீதி, வைத்தியசாலை வீதி, தலைமன்னார் வீதி வழியாக மன்னார் மாவட்ட செயலகத்தை வந்தடைந்தது. பின்னர் மன்னார் மாவட்ட செயலகத் திறந்தவெளி அரங்கில் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்நிகழ்வுக்கு இணைப்பங்காளர்களாக மன்னார் மாவட்ட செயலகமும், மன்னார் மாவட்ட பிரதேச செயலகங்களும் விளங்கின.

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்.
*- மன்னா நிர்வாகம் -*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 08ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 04 1928



உதிர்வு 06 11 2007

### திருமதி. அற்புதம் சவிரிமுத்து

(ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்)
(புத்திரர்கண்டான், முருங்கன்)

"நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கரங்களில் உள்ளன. வேதனைகள் அவர்களைத் தீண்டாது"

குடும்பத்திற்குக் குலவிளக்காய்
சமூகத்திற்கு நல்வழிகாட்டியாய்
அன்பிற்கும், பாசத்திற்கும் இலக்கணமாய் வாழ்ந்து
பண்புடமை காத்து பக்குவமாய் வழிநடத்தி
எல்லோருக்கும் நல்லவராய் நாணயமாய்
இவ்வுலகத்தில் வாழ்ந்த எம் பாசதெய்வமே
ஆண்டுகள் எட்டு ஆயினும் ஆறாது எம் துயர்.
உங்கள் ஆன்மசாந்திக்காய் இறைவனை வேண்டுகிறோம்.

*பிரிவால் நினைந்துருகும்.*
*பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,*
*பூட்டப்பிள்ளைகள் (ஆர்த்லி)*
*தகவல் : மகள் செ. நவறோஸ்)*

## 11ம் ஆண்டு நினைவஞ்சலி | 09ம் ஆண்டு நினைவஞ்சலி





### திரு. பெஞ்சமின் பாலசுந்தரம் | திருமதி. பாலசுந்தரம் மதலேனாப்பிள்ளை

(இத்திக்கண்டல். அடம்பன்.)

மலர்வு 15-03-1941
உதிர்வு 04-10-2004

மலர்வு 22-08-1947
உதிர்வு 10-04-2006

அன்பும் பண்பும் எமக்களித்து
பாலும் சோறும் எமக்கு ஊட்டி
பள்ளி சென்று வரும்வேளை
எம்மை அன்போடு அரவணைத்த
எங்கள் அம்மையா, அம்மம்மாவே!
ஆண்டுகள் பல சென்றாலும் ஆறாது எங்கள் துயரம்
உங்கள் ஆன்ம சாந்திக்காக
இறைவனிடம் வேண்டிநிற்கின்றோம்.

*என்றும் உங்கள் நினைவில் :*
*பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*
*தகவல் : பேரப்பிள்ளைகள், பெற்றா, மன்னார்*

## 03ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 03 04 1961



உதிர்வு 14 11 2012

### திரு. ம. செபஸ்ரியாம்பிள்ளை

(ஒலிமடு நானாட்டான்)

ஆண்டு மூன்று ஆனதுவோ - ஐயா
ஆறமுடியவில்லை எம் மனதின் காயங்கள்
கசிந்த விழிகள் காய மறுக்கின்றது
கனத்த இதயத்துடன் காலங்கள் கழிக்கின்றது.

காலமுள்ள காலம் வரை - நாம்
ஞாலத்தில் உம்மை நினைப்போம் - ஐயா
கர்த்தரின் பாதத்தில் இளைப்பாறிடவே
காணிக்கை ஆக்குகின்றோம் எம் கண்ணீரை

வறுமை உம்மை வாட்டிய போதும்
வளமாக வளர்ந்தவரே - ஐயா
வானக வீட்டில் நீர் வலப்புறமிருக்கவே
வாஞ்சையுடன் வேண்டுகின்றோம் எம் வாழ்நாள் எல்லாம்..

*என்றும் உங்கள் நினைவில் :*
*குடும்பத்தினர்*

# நீங்காத நினைவுகள்

## 33ம் ஆண்டு நினைவஞ்சலி | 32ம் ஆண்டு நினைவஞ்சலி | 25ம் ஆண்டு நினைவஞ்சலி







**கவிஞர் செபமாலை மொத்தம் போல்**
மலர்வு - 1924
உதிர்வு - 1982

**மனைவி - ஆனாள்**
மலர்வு - 1934
உதிர்வு - 1983

**மைந்தன் - யோகி**
மலர்வு - 1970
உதிர்வு - 1990

ஒருமுறை பாடுவது இருமுறை செபிப்பதற்கு சமன் என்ற புனித அகுஸ்தீனாரின் கூற்றுக்கொப்ப, அமரர் கவிஞர் செபமாலை மொத்தம் போல் அவர்கள் பாதுகாவலன் பத்திரிகையில் (22.03.1974) வெளியிட்ட கவிதைகளில் ஒன்று கீழே இடம்பெறுகின்றது. கவிஞரோடு சேர்ந்து இறைபுகழ் பாட உங்களை அழைக்கின்றோம். இவர்களின் ஆன்மா சாந்திபெற செபிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

*சிந்தை அடங்கிச் சிலநிமிடம் தியான நிலையில் அமர்ந்திருந்தே*
*எந்தை பரனின் இறைமகனார் இனிய உருவத் திருவுருவை*
*அந்தி சந்தி மனக்கண்முன் அழியாதிருத்தி உச்சரித்தால்*
*சொந்தமாக கலந்திடுவோம் தூயோர் நிலையை அடைந்திடுவோம்*

பிரிவால்
நினைந்துருகும்.
குடும்பத்தினர்

## மன்னார் - குஞ்சுக்குளம் புதிய பாலத்திற்கான வெள்ளோட்டம்

மன்னார் - குஞ்சுக்குளம் பாலமானது புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வேலைகள் நிறைவுபெற்றுள்ள நிலையில், குறித்த பாலத்தை மக்கள் பாவனைக்கு விடுவதற்கு முன்னர் பரீட்சார்த்தமாக வெள்ளோட்டம் பார்க்கப்பட்டது.

மன்னார் - மதவாச்சி பிரதான வீதியுடன் இணையும் குறித்த குஞ்சுக்குளம் வீதியில் கடந்த காலங்களில் அமைக்கப்பட்டிருந்த பாலம் தாழ்வாகக் காணப்பட்டதால், மல்வத்து ஓயா வெள்ளப்பெருக்கெடுக்கும் காலங்களில் வீதிக்கு குறுக்காக வெள்ளம் ஊடறுத்துச் சென்று குறித்த வீதி முழுவதுமாக நீரில் மூழ்குவது வழமையாகும்.

இதனால் குஞ்சுக்குளம், மாதா கிராமம், பெரிய முறிப்பு ஆகிய மூன்று கிராமங்களும் நீரால் சூழப்பட்டு குறித்த கிராமங்களுக்குச் செல்லும் வீதிகள் அனைத்தும் துண்டிக்கப்படும் நிலையில், அக்கிராம மக்களுக்கான உணவுப் பொருட்கள் உலங்குவானூர்தி மூலமாகவே வழங்கப்பட்டுவந்தன. இதனால் ஆண்டுதோறும் இடம்பெறும் வெள்ள அனர்த்தத்தினால் 800 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுவந்தன.

கடந்த 2014ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இந்தப் பால வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு தற்பொழுது நிறைவுபெற்றுள்ளன.


## மன்னாவை அறிமுகம் செய்யுங்கள்!

உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் இருக்கும்
உங்கள் உறவினர் மற்றும் நண்பர்கள்
மன்னாவைப் பெற ஏன் நீங்கள்
வழிசெய்யக்கூடாது?

**ஒரு வருடத்திற்கான**
உள்நாட்டுச் சந்தா ரூபா 800.00
வெளிநாட்டுச் சந்தா ரூபா 3,500.00

எம்மோடு தொடர்புகொள்ளுங்கள் -
077 - 7420811, 023 - 2250789, 023 - 3233276


## மன்னா சந்தாதாரர் கவனத்திற்கு!

மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவை செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள்.

உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

சந்தாவைப் புதுப்பிக்காதவர்களுக்கு பத்திரிகை அனுப்புவதை நிறுத்திவிடவேண்டிய இக்கட்டான நிலையில் உள்ளோம் என்பதையும் மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

- மன்னா நிர்வாகம்.

## நினைவுகள் பிரசுரிப்போர் கவனத்திற்கு

நீத்தார் நினைவுகள், திருமண யூபிலி, பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

கட்டணம் : கறுப்பு வெள்ளை 4,500/=, கலர் 7,500/=

## மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

## மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவைக் காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.

பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அல்லது பொதுநிலைப் பணியாளர்கள் இது விடயத்தில் அதிக அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் கைக்கு பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரிய விநியோகஸ்தரிடம் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

- மன்னா நிர்வாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

## இல்லற வாழ்வில் 25வது ஆண்டு வெள்ளிவிழா வாழ்த்து!

**(17.9.1990 – 17.9.2015)**



### திரு. திருமதி. ஜீ. யேசுதாசன், மேரி எவரெஸ்ரா

(உயிர்த்தராசன்குளம், முருங்கன்)

ஓயாத அலைகளாக எம்முடன் இருக்கும் அன்புத் தெய்வங்களே! பாசமும், நேசமும் தந்து ஊட்டி வளர்த்த எம் பெற்றோரே!

இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவைக் கண்டுகளிக்க, எம் கனவுகளை நனவாக்கி ஆசீர் அளித்த அன்பான ஆண்டவருக்கு என்றும் நன்றி. இன்னும் பல்லாண்டு சீர்பெற்று நலமுடன் எம்முடன் வாழ வாழ்த்துகிறோம்.

வாழ்த்துக்கள் கூறுவோர்:

அன்புப் பிள்ளைகள்
J. கமிலஸ்ரீனர, J. அலன் கிஜினஸ்
J. ஆன் யுஸ்ரீனா, J. கமில்டன் கனிசியஸ்

## 75வது ஆண்டு பிறந்தநாள் பவள விழா வாழ்த்து!



(08.09.1940 - 08.09.2015)

### திருமதி. ஜோர்ஜ் றெஜீனா

(உயிர்த்தராசன்குளம், முருங்கன்)

ஆழ்கடல் வற்றினாலும் அன்புக்கடல் வற்றாத எம் தாயே! உம்மை வாழ்த்துகின்றோம்! என்றும், எமக்காக எம்முடன் வாழ்ந்து எம்மை உருவாக்கினீர் அம்மா!
எழுபத்தைந்து ஆண்டுகள் நிறைவை நாங்கள் கண்டுகளிக்க ஆசிஅளித்த இறைவனுக்கு நன்றி நவில்கின்றோம்.
இன்னும் சிறப்புடனும், நலத்துடனும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்தி ஆசித்து நிற்கின்றோம்.

வாழ்த்துக்கள் கூறுவோர்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
திரு. திருமதி. G. யேசுதாசன் (அதிபர்),
திரு. திருமதி. G. நவஞானம் (சுவிஸ்),
G. செபமாலை (சுவிஸ்)

## ஆசிரியர் பிரதீபா பிரபா விருது - 2015

### ஆசிரியர் திருமதி. எட்வீசம்மா அன்ரன்

(மன்/ பெரிய குஞ்சுக்குளம் றோ.க.த.க.)



அதிபர், ஆசிரியர்களை கௌரவிக்கும் விழா

கௌரவ கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் அவர்களின் அழைப்பின்பேரில் கௌரவ கல்வி இராஜங்க அமைச்சர் வே. இராதா கிருஷ்ணன் அவர்களின் பங்கேற்புடன் இலங்கை ஜனாதிபதி அதிமேதகு மைத்திரிபால சிறிசேன அவர்களின் தலைமையில் 2015 ஒக்ரோபர் 6ந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்வில் மன்/ பெரிய குஞ்சுக்குளம் றோ.க.த.க. பாடசாலையின் ஆசிரியர் திருமதி. எட்வீசம்மா அன்ரன் என்பவர் பாடசாலையின் சிறந்த ஆசிரியராகத் தெரிவுசெய்யப்பட்டு சான்றிதழையும் விருதினையும் பெற்றுக்கொண்டார்.

வாழ்த்துக்கள் கூறுவோர்:
கணவன் : அன்ரன் - (பெரியமுறிப்பு)
பிள்ளைகள் : அட்வின் (பெரியமுறிப்பு)
அருள்பிரகாஷ் (மடுமாதா சிறிய குருமடம், மன்னார்)
அக்னேஸ் (திருக்குடும்ப கன்னியர் மடம்)

## 10வது ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 10 |  | 18 |
| 10 | | 11 |
| 1934 | | 2005 |

### திருமதி. பேதிரு செபமணி அருளம்மா

(முருங்கன் கமம், முருங்கன்)

"சீவியத்தில் உம்மை நேசித்தோம்
மரணத்திலும் உம்மை மறவோம்"

பூவுலக வாழ்வைத் துறந்து மறுவுலக வாழ்வைத் தேடிச்சென்ற அம்மா! பத்து ஆண்டுகள் உருண்டோடிச் சென்றாலும் உங்களைப் பிரிந்த துயரத்தின் அதிர்வுகள் நெஞ்சின் அலைகளாக ஓயாது ஒலித்துக்கொண்டே இருக்கின்றன.
எங்கள் குடும்பத்தின் மூத்த தலைவியாய் இருந்து அன்பையும், பாசத்தையும் அரவணைப்பையும் வழங்கி அரியபல சேவைகளைச் செய்து, அர்ப்பணிப்புக்கு ஓர் வரைவிலக்கணமாகத் திகழ்ந்த உங்களை நாங்கள் மறவோம் அம்மா!
உங்கள் ஆன்மா இறைவனின் சந்நிதானத்தில் நித்திய சாந்தி அடைவதாக!
பிரிவால் நினைந்துருகும்.
அன்புக் கணவன், பாசமுள்ள பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

## 31ம் நாள் நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 11 |  | 23 |
| 04 | | 09 |
| 1933 | | 2015 |

### திருமதி. B. மேரி பேர்னதேத்

(பனங்கட்டிகொட்டு கிழக்கு)

அன்பின் தாயே
அரவணைப்பின் ஊற்றே!
நீ பெற்ற செல்வங்களோ ஈர் ஆறு
அத்தனையையும் இப்புவியில் உருவாக்க - நீ
எத்தனை பாடுபட்டு இருப்பாய் தாயே!
இப்போது உணருகின்றோம் நாம்
எம் பிள்ளைகளை உருவாக்கும்போது
இன்முகம் காட்டி இன்னல் தீர்த்தாய்
இன்று உம் பிரிவால் வாடுகின்றோம்
தாயே உம் ஆன்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் நினைந்துருகும்.
பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்
தகவல்: அன்ரன் செபஸ்ரி குடும்பம்

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 01 |  | 16 |
| 11 | | 11 |
| 1954 | | 2014 |

### திருமதி. வின்சென்ரியா வயலற் செலஸ்ரின் டயஸ் (வயலற்)

(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி ஊழியர்,
மன்னார் கிளை) மூர்வீதி, மன்னார்

"ஆண்டவரே எங்கள் வாழ்நாட்களை களித்திட எங்களுக்குக் கற்பியும். அப்பொழுது ஞானமிகு உள்ளத்தை நாம் பெற்றிடுவோம்" (திருப்பாடல் 90:12)

நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து ஆண்டொன்று கடந்தாலும் உங்கள் நினைவோ எம்மைவிட்டு ஒருபோதும் பிரிவதில்லை. அன்பார்ந்த தாயே! எம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் உங்களது விண்ணுலக வாழ்வுக்காக இறைவனிடம் இரந்து நிற்கின்றோம்.

பிரிவால் நினைந்துருகும்.
அன்புக்கணவன், அருமைப் பிள்ளைகள், உற்றார், உறவினர்

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 15 |  | 12 |
| 11 | | 11 |
| 1970 | | 2014 |

### திருமதி. பவுல் கொலஸ்ரிக்கா (சாந்தி)

(உமநகரி, நானாட்டான்)

"ஆண்டவரின் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம் நான் குடியிருக்க வேண்டும்" (தி.பா 27:4)

ஆண்டொன்றாகி விட்டதம்மா
நீர் இவ்வுலகைப் பிரிந்துசென்று.
ஆனால் இன்னும் எம்மனம் நம்ப மறுக்குதம்மா
நீர் எம்முடன் இல்லை என்று.
உம் சதா சிரித்தமுகம் எம் சிந்தையில் உறைந்ததம்மா
உம் பிரிவதனால் எம் உளமது சிதைந்து போனதம்மா.
இறைவனின் அமைதியில் இளைப்பாறச் செபிக்கின்றோம்.

பிரிவால் நினைந்துருகும்.
அன்புக் கணவன், அருமைப் பிள்ளைகள், உற்றார்,
உறவினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 01 |  | 14 |
| 01 | | 11 |
| 1945 | | 2014 |

### திரு. பேதிறுப்பிள்ளை சந்தாம்பிள்ளை

(உமாநகரி, நானாட்டான்)

அன்பினால் எம்மை அணைத்து
அணையாத ஒளிவிளக்காய் திகழ்ந்தவரே
கனவில்கூட நினைக்கவில்லை - ஐயா
காலம் உம்மைப் பிரிக்குமென்று
தமிழகத்திலிருந்து வருவீர் என எதிர்பார்த்தோம் - ஆனால்
வந்ததோ உங்களது பூவுடல் மட்டுமே.
ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறமுடியவில்லை உம்பிரிவு
கரம்பிடித்த நாள்முதல் கனிவுடனே எம்மைக்காத்து
முத்தான இருவரை சொத்தாகத் தந்தவரே
உலகத்தில் உம்பிள்ளைகள் உயர ஏணியாக இருந்தவரே
உம் ஆன்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் நினைந்துருகும்.
அன்பு மனைவி, மகன்மார், மருமக்கள், பேரப்பிள்ளை,
சகோதர சகோதரிகள், உற்றார் உறவினர்கள்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு. - நந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.